Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 60 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 நவம்பர் 2023

## 16ஆம் ஆண்டு
# வீரவணக்கம்





லெப். கேணல் அலெக்ஸ்



மேஜர் செல்வம்



மேஜர் மிகுதன்



மேஜர் கலையரசன்



லெப். ஆட்சிவேல்



லெப். மாவைக்குமரன்

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர்

## பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன்

02.11.2007 அன்று கிளிநொச்சி, தமிழீழத்தில் சிறீலங்கா வான்படையின் தாக்குதலில் வீரச்சாவடைந்த தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட ஏழு மாவீரர்களின் 16 ஆம் ஆண்டு வீரவணக்க நினைவு நாள்

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
































# விளம்பரத்துக்கு அழையுங்கள்: 437.345.4203




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**அசுர வேகத்தில் வளர்ந்துவரும் அறிவியலும் அதனால் எழுந்த புதிய உலகப்பார்வையும் மனிதனை ஒரு புதிய யுகத்திற்கு இன்று இட்டுச்செல்கின்றன. இந்த அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, காலமாற்றத்திற்கு ஏற்ப, சமூகப் பண்பாட்டுப் புறநிலைகளுக்கு ஏற்ப சிந்தனை உலகமும் மாற்றங்களைச் சந்திக்கிறது. ஆனால், சிங்களத் தேசத்திலே அதன் சிந்தனை உலகிலும் சரி, அதன் சமூக உலகிலும் சரி எதுவித மாற்றமும் நிகழவில்லை. சிங்களத் தேசம் புதிய காற்றைச் சுவாசித்து, புதிதாகச் சிந்திக்க மறுக்கிறது.**





# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# நீரிற் கரைந்த நெருப்பு! லெப். கேணல் ராஜசிங்கம் (ராஜன்)

கண்டி வீதியை ஊடறுத்திருந்த எமது பாதுக்காப்பு வியூகத்தை உடைத்து, எதிரி உட்புகுந்துவிட்டான். எமது போர்ப்பலத்தைச் சிதறடித்தவாறு எல்லா முனைகளாலும் எதிரி தாக்கினான். எமக்கு எவ்வகையிலும் சாதகமற்ற "மரணக்களமாய்" மாறியிருந்தது அன்றைய களம்.

அன்று ஏப்ரல் 10.2000 விடுதலைப் போர்களத்திற் புலிகள் இயக்கம் தீக்குளித்த நாட்களுள் அன்றைய நாளும் ஒன்று. ஆனையிறவை முற்றுகையிட்டிருந்த புலிகளின் இத்தாவிற் போர்க்களம் அது. அமைதியாகவே விடிந்திருந்த அந்தப் போர்க்களத்தைச் சிறிது நேரத்திலேயே பெரும் எரிமலைபோல் வெடிக்கச் செய்தான் எதிரி. புலிகளை மட்டுமல்ல, தமிழனின் வீரம் பேசி எழுந்துநின்ற அந்தச் சின்னஞ்சிறு பிரதேசத்தையே பூமியிலிருந்து உடைத்தெறிந்துவிடப்போவதுபோல் எறிகணைகளை ஆயிரமாயிரமென இடைவிடாது துப்பின எதிரியின் பீரங்கி வாய்கள். எம் தாய்மண்ணை ஏறி மிதித்த ராங்கிகள் உள்ளிட்ட கவச வாகனங்கள் முன்னெப்போதும் இல்லாதவாறு எம் வீரர்களை மூன்று திசைகளாலும் சூழ்ந்துகொண்டு களமிறங்கின. 30,000 எதிரிகள் நடுவே நிற்கும் நூற்றுக்கணக்கிலான புலிவீரர்களை மட்டுமே அவை எதிர்கொண்டன. ஆயினும், எதிரியை முறியடித்தேயாக வேண்டிய நிலை. ஆனையிறவை வீழ்த்துவதற்கான அடுத்தகட்டப் படைநகர்த்தல் அன்றைய சண்டையின் முடிவிலேயே தங்கிநின்றது. தன் போராளிகளின் மனவுறுதியை அதிகம் நம்பினார் தலைவர். போராளிகளோடு போராளியாகக் களத்தில் நின்று சமரை வழிநடத்தினார் தளபதி பிரிகேடியர் பால்ராஜ். அவருக்குத் துணையாய் களத்தின் மையத்தில் நின்றான் ராஜன்.

1990 இன் முற்பகுதியில் மன்னார் மாவட்டப் போர்க்களங்களிற் சிறிய அணிகளுடன் களமிறங்கி தமிழீழத்தின் 35 வரையான, போர்க்களங்களில் அணிகளை வழிநடத்தி, பெரும் போர் வீரனாய் உருவெடுத்து நின்ற எங்கள் தளபதி ராஜனின் இளவாழ்வின் அத்தியாகத்தைப் புகழ்பூத்த இத்தாவில் (கண்டி வீதி) போர்க்களத்திலிருந்து தொடங்குவதுதான் எனக்குச் சரியாயகப்படுகின்றது.

நண்பகலைத் கடந்துவிட்ட நேரம். களத்தின் மேற்கு முனையில் யாழ்ப்பாணப் பக்கமாகக் கண்டிவீதியை மூடியிருந்த காவலரண்களிற் கணிசமானவை எதிரியிடம் வீழ்ந்திருந்தன.

"றோமியோ, றோமியோ" என ராஜனின் "சங்கேத"ப் பெயரை அழைத்த அலைவரிசைகளே எங்கும் நிறைந்திருந்தன. ஒவ்வொன்றிற்கும் பதில்சொல்லி, தளபதி பால்ராஜ்சின் கட்டளைகளை நிறைவேற்றி, முறியடிப்பு அணிகளை வழிநடத்திக் கொண்டிருந்தான் ராஜன். அந்தச் சிறிய களப்பகுதியில் ஏற்கனவே சூழ்ந்துவிட்ட எதிரிகள் நடுவே, கணக்கின்றி எதிரி ஏவிய எறிகணைகள், ரவைகளுக்கிடையே ஏனையவர்களுடன் இணைந்து விபரீதம் ஏதுமின்றி செய்து முடித்த அந்தப் பனி அவ்வளவு இலகுவானதல்ல; எந்தவொரு போரியலாளனையும் அது வியக்கவைக்கும்.




அணிகள் களமிறக்கப்பட்டன. பறிகொடுத்த காவலரண்களை ஒவ்வொன்றாக எம் வீரர்கள் மீட்க, எரிமலை நடுவே நின்று அணிகளை நகர்த்தினான் ராஜன். எதிரியின் நடவடிக்கை முழுமையாக முரியடிக்கப்படவிருந்த கட்டம் எதிரி அவமானம் அடையத் தொடங்கிய நேரம் மீண்டும் ஆனையிறவுத் திசையிலிருந்து மூன்று முனைகளால் எம் அரண்களை உடைத்தான் எதிரி. நிலைமை சிக்கலாகியது. களநிலை மீண்டும் எதிரிக்குச் சாதகமாய் மாறிவிட்டது. நிலைமைகளைக் கணிப்பிட்ட தளபதி பிரிகேடியர் பால்ராஜ், மேற்கு முனைச் சண்டைகளை அப்படியே நிறுத்திவிட்டு, முதலில் கிழக்கு முனையில் - ஆனையிறவுப் பக்கமிருந்து முன்னேறிய எதிரியை முறியடிப்பதற்கு முடிவு செய்தார். அதைச் செய்துமுடிக்கக் வேண்டியவன் ராஜன்தான் அவனிடம் அதற்கான கட்டளை வந்து சேர்ந்தது.

சுழன்றடித்த புயலைப்போல் பல மணித்தியாலங்கள் ஓய்வற்று நீண்டு சென்றது அந்தச்சமர். நள்ளிரவை அண்மித்த நீண்ட சமரின் முடிவில் எதிரியின் கிழக்குமுனை நகர்வை முழுமையாய் முறியடித்து தன் போராளிகளின் வீரத்தையும், போராற்றலையும் நிரூபித்தான் ராஜன். மேற்குமுனையில் எதிரி கைப்பற்றிய சில அரண்களிலிருந்து சிறிது தூரம் பின்வாங்கிப் புதிய நிலைகளை அமைப்பதாய் முடிவுசெய்யப்பட்டது. விடிவதற்கிடையில் அது செய்து முடிக்கப்பட்டேயாகவேண்டும். அதையும் செய்ய வேண்டியவன் ராஜன்தான். அன்று முழுவது போராளிகளும் ராஜனும் ஓயவேயில்லை. ஒருவகையில் ஆனையிறவின் தீர்மானம் அவர்கள் கையிலேயே இருந்தது. மறுநாள் விடிந்ததும் "புலிகளால் இனிமேலும் நின்று பிடிக்க முடியாது" என்ற அசையாத நம்பிக்கையோடு கைப்பற்றிய பகுதியிலிருந்து மீண்டும் புதிய அணிகளைக் களமிறக்கினான் எதிரி. அன்றைய சண்டையின் முடிவு, ராஜனின் ஓய்வற்ற உழைப்பிற்கும். அவனது போராற்றலுக்கும் சாட்சியமாய் முடிந்தது. பேரிழப்புடன் எதிரி முடங்கினான். பெரும் படைப்பலம் ஒன்றாற் சின்னாபின்னமாக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை அபாயகரமான அதேகளத்தில் வைத்தே அத்தனை வேகமாய்ச் சீர்செய்து முடிக்கப் புலிகளால் எப்படி முடிந்தது? என்று எவராவது கேட்டால் அவர்கள் களத்தில் தெரியும் ராஜனை முழுமையாக படிக்கவேண்டும் என்றுதான் நான் சொல்லவேண்டும்.

ராஜன்! அந்தக் 'கறுத்தப் பொடியனை' நீங்கள் எப்போதாவது



கண்டிருக்கிறீர்களா, அவன் நேசித்த மக்களே? போர்க்களத்திலேயே தன் போராட்டப் பணிகளை ஆரம்பித்து இறுதிவரையும் அக்களங்களிலேயே உயிர் கொண்டு உழைத்த அந்த அற்புதமான வீரனை நீங்கள் எப்போதாவது அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் பெருமை கொண்ட வெற்றிகள் பலவற்றின் பின்னால் தெரிந்த அவனது வீரத்தையும், அர்ப்பணிப்புகளையும் நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா, "இந்தச் செல்லடிக்கிளையும் களத்துக்கெண்டு உலருணவு செய்துகொண்டு இந்த அப்பாக்களும், அம்மாக்களும் எங்களைத்தேடி வருகினம் தானே" என்று அடிக்கடி சொல்லும் உங்கள் பிள்ளையை உங்களுக்குத் தெரியுமா? இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.



பத்து வருடங்கள் உங்களுக்காய் உழைத்தவன் உங்களுக்குத் தெரியக்கூடியதாய் நின்றது குறைவு. எனினும் உங்கள் நினைவுப் பதிவுகளை ஒருமுறை மீட்டுப்பாருங்கள்.

கிளிநொச்சியில் நிலையமைத்து வருடக்கணக்காய் ஓய்வின்றி உங்களைக் காத்த 'காவற்தெய்வங்களை' ஆசையாய் அரவணைக்க 'சொட்டைச் சாப்பாடுகள்' கொண்டு ஓடோடிப் போயிருப்பீர்களே? அப்போது சிலவேளைகளில் உங்களோடுதான் "செல்லமொழியில்" கதைத்திருப்பான் உழைத்துக் கறுத்த மெலிந்த உங்கள் பிள்ளை. ஓயாத அலைகள் - 03 இல் பரந்தன் படைத்தளம் வீழ்ந்தபோது நீங்கள் மகிழ்ச்சியால் துள்ளித்திரிய, அதற்காய் உழைத்துமுடித்து அடுத்த வெற்றிக்காகவும் உழைக்கத் தொடங்கிவிட்ட அவன், தன் எம்-16 துப்பாக்கியுடன் நீண்டதூரம் 'சைக்கிள்' உழக்கி பின்னணியிலிருந்து தளத்திற்கு போவதற்காய் அடிக்கடி உங்களோடு பயணித்திருப்பாள். அந்த எளிமையான தளபதி. இவற்றைவிட அவன் உங்களுக்குள் நின்றதை நான் அறியவில்லை.

"அண்ணை ஒண்டும் யோசிக்காதேங்கோ, நான் எல்லாம் செற்றப்பண்ணிப் பிடிச்சுத்தருவேன்" இறுக்கமான கட்டங்களில் ராஜனிடம் இருந்துவரும் அந்த வார்த்தைகளை மூத்த தளபதிகள் எல்லோரும் ஒருங்குசேர நினைவுகூருகின்றனர். நெருக்கடியான எத்தனையோ கட்டங்களிற் புத்துணர்ச்சியளித்த அவனது இந்த வார்த்தைகள் நம் எல்லோருக்குள்ளும் இன்னமும் பசுமையாய்.

வன்னிக்களத்தின் உச்சமாய் அமைந்த "ஜசிக்குறு" எதிர் நடவடிக்கைக் காலம். புலிகளை நெருக்கடிக்குள் தள்ளவந்தவர்களைப் புலிகள் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் விந்தையை உலகம் வியப்புடன் பார்த்திருந்தது. களத்தில் எதிரி நினைப்பதை அடையமுடியாதபடி தடுத்து நாம் நினைத்தபடி எதிரியை ஆட்டுவித்த நுட்பமான போரரங்கைத் தலைவர் நெறிப்படுத்திக் கொண்டிருந்தார். களத்தில் நின்ற போராளி ஒவ்வொருவரது கைகளிலும் அன்று எம் தேசத்தின் வாழ்விருந்தது. எதிரிதான் நினைத்ததை அடைந்துவிடும் எந்தவொரு கட்டமும் போரரங்கில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவந்துவிடும். அத்தகைய களத்தில் ராஜன் சந்தித்த சண்டைகள் பல. அதுவும் வன்னியின் கிழக்கையும், மேற்கையும் இணைக்கும் ஒரேயொரு போக்குவரத்துப் பாதையாக இரணைமடுவினூடான பாதைமட்டுமே மாறிவிட்ட சூழலில் அதை இராணுவம் கைப்பற்றுவது சண்டையில் பாரிய திருப்பங்களை ஏற்படுத்தக்கூடிய காரணியாக இருந்தது. அப்படியே ஒருநாள் நடந்தது. எதிரிக்குச் சாதகமாய் மாறியிருந்தது களநிலை. அதையே தலைகீழாய் மாற்றிவிட்ட சண்டையில் ராஜன் என்ற புயல் சுழன்றடித்த விதம் இப்போதும் அவனை வழிநடத்தியவர்களின் கண்களில் நிற்கிறது.

"அன்று 1998 யூன் 04ம் திகதி. கிளிநொச்சி முனையில் எதிரி பெரும் படையெடுப்பைச்செய்தான். எமது பாதுகாப்பு நிலைகளில் உடைவை ஏற்படுத்தி பல நூற்றுக்கணக்கில் எமது பகுதிக்குள் நுழைந்துவிட்டான். பல மணித்தியாலங்களாகச் சண்டை தொடர்ந்திருந்தது. எனினும் எதிரி தன் வெற்றியிலக்கை (இரணைமடுவை நோக்கியது) ஏறத்தாழ அடைந்துவிட்டக்கூடியதாகவே களநிலை இருந்தது. எப்படியாயினும், அன்றைய நடவடிக்கையை முறியடிப்பதே எமது இறுதி முடிவு. முன்னணியில் நின்ற அணிகள் கணிசமான இழப்பைச்




சந்தித்திருந்தன. இந்நிலையில் இந்த முறியடிப்பை எப்படிச் செய்து முடிப்பது? பல மைல்களுக்கப்பால் நிலைகொண்டிருந்த "றோமியோ" வின் அணியைத்தான் நான் அழைத்திருந்தேன். எதிரி உறுதியாய் நிலையெடுக்கமுன் "றோமியோ" வின் அணியைச் சண்டை முனைக்கு வேகமாய் நகர்த்துவது கடினமானது. அவனுக்கு நான் கட்டளையிட்டபோது அவனிடமிருந்து துவந்த நம்பிக்கையும் துடிப்பும் நிறைந்த பதில் என்னுள் பிரகாசித்தது. எவரும் நினைத்துப்பார்க்காத வேகத்தில், பல மைல்கள் ஓட்டத்தில் எதிரியின் எறிகணைகளைக் கடந்து சண்டைமுனையில் தன் அணியுடன் வந்தவுடனேயே அவன் முறியடிப்புச் சமரைத் தொடங்கவேண்டியிருந்தது. கடைசிவரை இறுக்கமாகவே தொடர்ந்தது சண்டை. அப்போது "அண்ணை நான் விடமாட் டன் பிடிச்சுத்தருவன்" என்ற அவனது நம்பிக்கை தரும் குரலையே நான் கேட்டேன். சோர்ந்து போகாது தன் அணியை வழிநடத்திய றோமியோவின் விடாமுயற்சி இறுதியில் எதிரியை ஆட்டிவைத்தது. அன்றுதான் றோமியோவிற்குள் இருந்த அத்தனை பெரிய ஆற்றல்களை நான் முழுமையாக இனங்கண்டு கொண்டேன். அன்றைய சண்டையில் றோமியோவும் அவனது வீரர்களும் வெளிப்படுத்திய அபாரமான வீரமும், அவர்கள் தீரமிக்க தாக்குதலும் என்றைக்குமே எம் வரலாற்றில் நிலைத்திருக்க வேண்டியவை" என அன்றைய நினைவுகளை ராஜனின் சாவின்பின் நினைவு கூர்ந்தார் தளபதி பிரிகேடியர் தீபன்.

அன்றைய வெற்றியைத் தமிழினம் பெருமையுடன் கொண்டாடியது. எதிரிக்கோ தன் வெற்றிச் செய்திக்குப் பதிலாகப் பேரிழப்பின் கணக்குகளை மட்டும்தான் தன் எஜமானர்களுக்கு அனுப்ப முடிந்தது. இந்த வெற்றியின் பின்னால் எவருக்கும் வெளித்தெரியாது ராஜன் இருந்தான். இவையெல்லாம், "ஓயாத அலைகள் - 02" இன் பின்னால் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் துணைத் தளபதியாய் அவனை உயர்த்தின.

வன்னிக்களத்திற் பெரும்புயலின் நடுவே நின்று எம் தமிழீழத் தாயின் வாழ்வை அவள் புதல்வர்களால் எப்படிக் காக்க முடிந்தது? நிச்சயமாக உயிர் அர்ப்பணிப்புக்களால் மட்டுமே என வெறுமனே எவரும் நினைத்துவிடாதீர்கள். உயிரையே வெறுக்கவைக்கும் அந்தக்கடினமான களங்களில் உயிர் வாழ்ந்து அந்த உயிரை வைத்தே தம் வாழ்நாளின் இறுதி மணித்துளிகளிலும் உழைத்தார்கள் எம் மாவீரர்கள். அவர்களின் உன்னதமான வாழ்வின் அந்த மணித்துளிகளில் தான் அந்த இரகசியத்தை நீங்கள் தேடமுடியும்.

எண்ணிப்பாருங்கள்!

இந்தக் களத்தில் ஒரு "செக்கன்" அணித்தலைவனாய் இருந்து ஒரு படையணியின் துணைத் தளபதியாக உயர்ந்த ராஜன் ஒரு பொறுப்பாளன் என்ற வகையில் எவ்வளவு சுமைகளைச் சுமந்திருப்பான்! தன் உயிரைவைத்து இருப்பையே உருகவைக்க அவன் உழைத்த உழைப்பின் மணித்துளிகளின் நீட்சி எத்தனை பெரியது! "எம் வீரன் எமக்காய் வாழ்ந்த வாழ்வின் கதையை சொல்" என நீங்கள் உரிமையுடன் கேட்டால் உங்களுக்கு அவனது நீண்ட பக்கங்களை உணர்வுகுலையாது பக்குவமாய்ச் சொல்லிவிடத்தான் முடியுமா?

அவை "ஓயாத அலைகள் - 03" இற்கு முற்பட்ட நாட்கள். வன்னிக்களத்தில் ஒரு வருடமாகப் புலிகளின் மௌனத்தின் இரகசியம் புரியாது எல்லோரும் திணறிக்கொண்டிருந்தனர் காலம். "முதலிற் பாதுகாப்புப் போர்முறையில் நிறைய அனுபவங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் போர்த்திறனை எதிரிக்குப் புரியவையுங்கள். அடுத்த கட்டத்தை நான் பிறகு சொல்கிறேன்" என்று தலைவர் அவர்கள் கூறியபோது ஓர் இள நிலைத் தளபதியாய் நின்ற ராஜன் தன் ஆளுமையையும் வீரத்தையும் மெருகேற்றவேண்டியிருந்தது. ஏனைய தளபதிகளுடன் சேர்ந்து தன் வீரர்களின் சண்டைத்திறனை வளர்ப்பதற்காக அவன் உழைக்கவேண்டியிருந்தது.

"ஓயாத அலைகள் - 03" இன் முழுமைப்படுத்தப்பட்ட அத்தியாயத்தில் ராஜன் தனது அழியாத தடயங்களைப் பதித்தான். அதுதான் அவனைப் போரியலில் மேலும் வளர்த்து விட்டது. அதுதான் ராஜனை எமது இயக்கத்திற்கு அப்பால் வெளியே அறிமுகமாக்கியது. அதிலும் சில இறுக்கமான கட்டங்களில் ராஜன் ஆற்றிய பணிகள் அவனை எம் வரலாற்றில் என்றைக்குமே வாழவைக்கும் வலிமை வாய்ந்தவை.

ஒட்டுசுட்டான். "ஓயாத அலைகள் - 03" இன் வாசற்படி அது தான். எப்போது எம் வாழ்வை சிங்களத்திடம் தொலைத்துவிட்டுப் போகிறோமோ என வன்னி மக்கள் ஐயுறும் அளவிற்கு எதிரி களச்சூழலை மாற்றியிருந்த காலம் அது. எங்கே, எம் போராட்டம் மீளமுடியாத நெருக்கடிக்குள் போய்விடப்போகின்றதோவென எம் அனுதாபிகள் எல்லாம் ஏங்கிக்கொண்டிருந்தனர். "இயக்கம் சும்மா விட்டிட்டு இருக்காது" என்ற மக்களின் பொறுமையின் உச்ச எல்லையது. எல்லாமே அந்த வாசற்படிக்கான முதலுடைப்பின் வெற்றியில்தான் தங்கியிருந்தன. அதற்காக ஆராய்ந்து, நிதானித்துத் திட்டமிட்ட தலைவர் பொருத்தமான காலத்தைத் தெரிவுசெய்து அதன் பணிகளைப் போராளிகளிடம் ஒப்படைத்திருந்தார். அப்போது சாள்ஸ் அன்ரனி சிறப்புப்





படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்தவன் லெப்.கேணல் ராகவன். “உன்னை நம்பித்தான் ஓட்டுசுட்டானுக்குள்ள இறங்கிறன்” என்று கூறித் தலைவர் அவர்கள் அவனிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தபோது, தலைவர் சொன்னதையே நினைத்துத்திரிந்த அந்தத் தளபதி யின் அருகிருந்து “பிரச்சினை இல்லை அண்ணை அதெல்லாம் சுகமா செய்து முடிச்சுப் போடலாம்” என்று நம்பிக்கை வார்த்தை கூறுவான் எங்கள் ராஜன்.

சண்டைக்கு முந்தய நிமிடங்கள். மிகப்பெரிய திட்டம் என்பதால் எல்லோருள்ளும் படபடப்பு, இறுதி நிமிடங்கள் நெருங்க நெருங்க தவறுகள் எதுவும் நேர்ந்துவிடக்கூடாதே என்ற தவிப்பு. எல்லாம் நிதானத்துடன் நகர்ந்தன. மற்றைய முனையில் திட்டமிட்டபடியே சண்டை தொடங்கப்பட இந்த முனையில் இன்னும் சண்டை தொடங்காததால் பரபரப்பானது களம். நிலைமையைச் சீர்செய்ய முன்சென்ற தளபதி ராகவன் குண்டுபட்டு வீழ்ந்துவிட்டான். அணிகளை ஓரளவு சீர்படுத்தியபடி எதிரி அரண்களுக்குள் மூர்க்கமாய் நுழைந்த லெப்.கேணல் நியூட்டன் ஓரிரு காவலரண்களை வீழ்த்தி நிலைமையை மாற்ற முயலவே அடுத்த இடி! நியூட்டனும் குண்டுபட்டு வீழ்ந்தான். குறுகிற நேரத்தில் அனுபவம் வாய்ந்த களமுதல்வர்கள் இருவர் வீழ்ந்துவிட்டதால் அடுத்த கட்ட நகர்வுகளுக்கு முன் கேள்விக் குறிகள் வீழ்ந்தன. ஒட்டுசுட்டான்... கரிப்பட்ட முறிப்பு... மாங்குளம்... கனகராயன்குளம்... புளியங்குளம்... எனச் செய்து முடிக்கவேண்டிய பாரிய படைநகர்த்தல்கள் கேள்வியாய் விரிந்தன. பதிலாய் எழுந்து அணிகளை ஒழுங்கமைத்து வழி நடத்தத் தொடங்கினான் ராஜன். “ஒன்றும் யோசிக்காதேங்கோ நான் பிடிச்சுத்தருவன்” எப்போதும் ஒலிக்கும் அந்த வார்த்தைகள் தான் இப்போதும் வேண்டும். ஆனால், இப்படியான பெரிய பொறுப்புக்களை இதுவரை சுமந்திராத ராஜனால் அதைச் செய்துமுடிக்க முடியுமா என்ற ஐயம் எல்லோருள்ளும் இருக்கவே செய்தது. அவ்விடத்தில் ராஜனைத்தவிர வேறு எவரும் இல்லை. இறுதியில் எல்லோர் புருவங்களும் உயரும் படி படைநகர்த்தினான் ராஜன். வெற்றிச் செய்திகள் ஒவ்வொன்றாய் எம்மக்களைக் குதூகலிக்க வைக்க, எதிரிகள் தலையில் அவை பேரிடியாய் இறங்க, ராஜன் தலைவரின் திட்டங்களைச் செயற்படுத்தினான். அந்தக் களந்தான் ராஜனின் ஆற்றலைத் தலைவருக்கு இனங்காட்டியது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாய் அவனை உயர்த்தியது.

ஓயாத அலைகள் -03 கட்டம் 04. பரந்தன் ஆக்கிரமிப்புத்தளம் புலிகளின் வரவை நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்தது. ஒன்றன்பின் ஒன்றாய் இறுக்கமாக ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயத்துள் அது இருந்தது. ஆக்கிரமிப்பாளர்களின் போர் மூலோபாயத்தின் முது கெலும்பாய் ஆனையிறவு இருந்த தென்றால் ஆனையிறவின் பாதுகாப்பின் முதுகெலும்பாய் பரந்தனும் இருந்ததெனலாம். அத்தகையதொரு களத்தில் எதிரிக்குச் சவால் விடுவதாய்ப் பகற்பொழுதில் ஒரு சமருக்கு ஏற்பாடாயிருந்தது. மூன்று முனைகளில் திட்டமிடப்பட்ட தாக்குதல் திட்டத்திற்கு ஒரு சமருக்கு ஏற்பாடாகியிருந்தது. மூன்று முனைகளில் திட்டமிடப்பட்ட தாக்குதல் திட்டத்திற்கு ஒரு முனையின் தளபதியாய் ராஜன் நியமிக்கப்பட்டான். பரந்தனின் கிழக்குப்புறக் காவலரண் வரிசையைக் கைப்பற்றி எதிரியின் பாதுகாப்பு வியூகங்களைச் செயலிழக்கவைக்கும் பணி அவனுடையது. திட்டத்தின்படி எல்லாவற்றையும் அவன் திறம்படச் செய்துமுடித்தான். எதிர்பார்க்கப்பட்டதைவிட ராஜன் அதிகமாகவே அங்கு சாதித்தான். அங்கு ராஜனின் இடைவிடாத உழைப்பும் தந்திரமான சில செயற்பாடுகளுந்தான் எதிரியை நிலைகுலைய வைத்தன.

போராளிகளை அரவணைப்பதிலும் வர்களின் தேவைகளைக் கவனிப்பதிலும் ராஜன் அதீத அக்கறை செலுத்துபவன். அவர்களின் அன்னையாய், தந்தையாய்... என எல்லாமாயும் அவன் இருப்பான். சண்டைக்களம் பரபரப்புடன் இருக்க, அடுத்த கட்ட ஏற்பாடுகளில் எல்லோரும் தீவிரமாய் ஈடுபட்டிருக்க, ஓய்வற்ற வேலைகளின் நடுவேயும் களைத்திருக்கும் தன் போராளிகளுக்காகச் சோடாவும் உலருனவும் கேட்டுத் தளபதியுடன் சண்டை பிடித்துக் கொண்டிருப்பான். தொடர்சண்டைகள் நடந்துகொண்டிருக்க ராஜனின் கட்டளை அரணிற் போராளிகளுக்கு அனுப்புவதற்காக ஏதாவது கறியும் தயாராகிக்கொண்டிருக்கும். இப்படித்தான் எல்லா விடயங்களிலும் ராஜன் தன் போராளிகளைக் கவனித்தான். ராஜனின் இத்தகைய இயல்பு இருமுறை தலைவரின் முன்னாள் அவனைக் கூச்சத்தோடு தடுமாற வைத்த காட்சி இப்போதும் கண்டவர் கண்களில் முன் அழியாது தெரிகிறது. நடந்தது இதுதான்.

கண்டிவீதி - இத்தாவில் போர்க்களத்தில் சண்டைகளுக்கு ஓய்வே இருக்காது. தொடர் சண்டைகளால் சோர்ந்துபோகும் உடலைவைத்துப் போரிடுவதற்குப் போராளிகளுக்கு அதித மனவுறுதி தேவைப்படும். அத்தகையதொரு களத்திலும் போராளிகளை உற்சாகமாய் வைத்திருந்தான் ராஜன். அங்கு நடக்கும் கடுமையான சண்டைகள் சற்றுத் தணிந்துவிட்டால் ராஜன் ஆட்டுக்கறிக்குத் தயார்பண்ணத் தொடங்கிவிடுவான். போர்க்களமும் கரிக்களமும் ஒன்றாகவே அங்கு நடக்கும். அந்தக் களமுனையின் ஒரு பகுதியிற் கட்டாக்காலி ஆடுகள் திரிவது வழக்கம். அந்தக் களப்பகுதியில் உள்ள போராளிகளுக்கு ராஜன் வோக்கியில் அறிவிப்பான். “இஞ்ச கொஞ்சம் தணிஞ்சுபோய் இருக்கு, வகுப்பெடுக்கலாம் போலகிடக்கு, நிண்டால் ஒரு மாஸ்ரரை அனுப்புங்கோ.” “மாஸ்ரர்” என்பது ஆட்டுக்கிடாய் என்று அவர்களுக்கு மட்டும்புரியும். அது அவர்களுக்கிடையினான மொழி. மாஸ்ரர் - அதுதான் கிடாய் ஆடு. ராஜனிடம் போவார்.கறியும் களமும் ஒன்றாய் நடக்கும். அவனது கட்டளை போலவே ஒவ்வொரு காவலரணுக்கும் கறியும் போகும். ஒருமுறை சண்டை தணிந்திருப்பதாகவும் மாஸ்ரரை வகுப்பெடுக்க அனுப்புமாறும் ராஜன் அறிவித்தபோது பதில் வந்தது, “இஞ்ச மாஸ்ரர் ஒருத்தரும் இல்ல, வகுப்ப இண்டைக் குக் கைவிடுங்கோ”.

“ஒரு மாஸ்ரரும் இல்லையோ?”

“மாஸ்ரர் இல்ல ரீச்சர் நிக்கிறா, அனுப்பவோ” ராஜனுக்குப் புரிந்துவிட்டது. ரீச்சரெண்டு அவங்க மறியாட்டைச் சொல்லுறாங்களெண்டு. “ஓ ஒ ஒ ரீச்சரெண்டாலும் பரவாயில்லை வகுப்பெடுத்தாச் சரி” இந்த ரீச்சர்ப் பகிடி இயக்கத்திற் பரவலாக எல்லா இடமும் பரவத் தொடங்கியது. சண்டை முடிந்து அடுத்த சண்டைக்குப் புறப்பட இருந்த நேரம். போராளிகளைச் சந்திப்பதற்காகத் தலைவர் வந்திருந்தார். அவர் புறப்படும்போது “தம்பியாக்கள் இனிச் சனங்களின்ர இடங்களுக்குள்ள போகப்போறியள். அங்க சாமானுகள் எதிலயும் கைவைச்சுப்போடக்கூடாது. ஆடு, மாடு, கோழிகளையுந்தான் சொல்றன்” அன்று கூறிவிட்டு அருகிலிருந்த ராஜனைப் பார்த்துப் பெரிதாகச் சிரித்தபோது கூச்சப்பட்டு அந்தரப்பட்டுச் சிரித்தான் அவன். எல்லோருக்கும் அவனைப் பார்க்கச் சிரிப்பு வந்தது. எல்லாம் முடிந்து வந்தபின்னர் அவன் சொன்னான் “நாங்கள் எங்கட பிரச்சினையை மட்டும் பாகிரம், பாவம் அண்ணை எவ்வளவு பிரச்சினைகளைப் பார்க்க வேணும்”.

கட்டளை இடுவதிலும் ராஜனுக்கென்றொரு தனித்துவமான பாணி இருந்தது. எந்தவொரு கட்டத்திலும் பதட்டமடையாத அவனது கட்டளைகளிலும் அரவணைப்பு இருக்கும். அதிற் கண்டிப்பு, ஆலோசனை, நம்பிக்கை, உற்சாகம் என எல்லாமே கலந்திருக்கும். அவனது அன்பான வார்த்தைகளுக்கு இருந்த அத்தனை பெரிய ஆளுமை அவனுக்கேயுரியது. இப்படியே நீண்டு செல்லும் ராஜனின் ஆளுமையை அவனது போர் வாழ்வின் கதையை இங்கு முழுமையாய் எழுதி முடிப்பது அவ்வளவு இலகுவானதல்ல. அதனால் அவனது இறுதி வெற்றி அத்தியாயத்தை நினைத்துப்பார்க்கிறேன்.

ஆனையிறவை வீழ்த்துவதற்கான இறுதிக்கட்டம். உலகப் போரியல் வரலாற்றில் முக்கிய பதிவாய்த் தலைவர் பிரபாகரன் அவர்கள் நிகழ்த்திய விந்தைமிகு படைநகர்த்தல். அந்த இத்தாவில் போர்க்களத்தில்தான் ராஜனின் குரல் அதிகமாய் ஒலித்தது. அங்குதான் அவனது பெயர் அதிகமாகப் பேசப்பட்டது. அங்கிருந்த ஒவொரு தொலைத்தொடர்புச் சாதனமும் “றோமியோ“ என்ற அவனது “சங்கேத”ப் பெயரையே அதிகமாய் உச்சரித்தும் கேட்டும் இருக்கும். புலிகள் இயக்கம் நிகழ்த்திய அந்த வரலாற்றுச் சாதனைக் களத்தில் ராஜன் பங்கெடுத்த ஒவ்வொரு சண்டையுமே அவனை எம் வரலாற்றில் உயர்த்தியது. ஆனையிறவை வீழ்த்தும் எம் தலைவரின் போர்த்திட்டத்தின் அத்திவாரத்தை அசையாது காத்த அந்த வெற்றிகளின் பின்னால் ராஜனின் உழைப்பு மதிப்பிட முடியாதது.

கண்டி வீதியூடாகப் பயணித்துப் பளையைக் கடந்து இத்தாவிலிற்குள் பிரவேசியுங்கள். நிலமெல்லாம் கிளறியெறியப்பட்டு, மரங்களெல்லாம் குதறப்பட்டு சுடுகாடாய்க் கிடக்கும் ஒரு சிறிய நிலப்பரப்பு. அந்த வீதியிலிருந்து வலதுபுறமாய்ச் சில நூறு மிற்றர் தொலைவிலிருக்கும் அந்த உருக்குலைந்த சிறிய வளவுதான் ராஜனின் கட்டளை மையம். அதை எதிரி எறிகணைகளால் உலுப்பியெடுத்து ஒவ்வொரு தடவையும் அதற்குளிருந்துதான் ராஜன் சிரித்தபடி படைநடத்தினான். உறுதியாக, நிதானமாக முடிவெடுக்க முடியாதவாறு மனித மூளையைக் கலங்கவைக்கும்படி எதிரியால் மாற்றப்பட்டிருந்த அந்த நரகலோகத்திலிருந்தே தளபதி ராஜன் செயற்பட்டான். தன் கறுத்தமேனி கருகி மேலும் கறுப்பாய் மாற, மெலிந்த அவன் உருவம் வாடிவற்றிப்போக அந்தக் களத்தில் அவன் செய்தவை கதைகளல்ல காவியங்கள்.

மார்ச் 27, இத்தாவிலுற்குள் புலிகள் புகுந்த மணித்தியாலங்களில் விடிந்துவிட்டது அன்றைய காலைப்பொழுது. புலிகளால் உறுதியாக நிலைகொண்டிருக்க முடியாது என எண்ணிய பகைவன், அவசர அவசரமாகச் சண்டையைத் தொடங்கினான். பலப்படுத்தப்படாத அரண்களிலிருந்தே எமது போராளிகள் சண்டையிட வேண்டியிருந்தது. எதிரியின் கையே களத்தில் மேலோங்கியிருந்தது. களத்தின் மையத்தில் நின்று எல்லாவற்றையும் செய்விக்க வேண்டியவர்களுள் ராஜன் முக்கியமானவன். எறிகணை மழை நடுவே அவனது பாதுகாப்பிற்கென இருந்தது சிறியதொரு தண்ணீர்த் தொட்டிதான். ராஜனின் கட்டளை அலைவரிசைகள் மூலம் அவன் இருக்கக் கூடிய இடத்தைக் கணிப்பிட்டு எறிகணைகளை எதிரி பொழிந்து கொண்டிருந்தான். அவனைக் குறிவைத்த எறிகணைகளும்

**“பிரச்சனையில்லை, ஒண்டும் யோசியாதையுங்கோ, நான் பிடிச்சுத்தருவன்.”**




ரவைகளும் தோற்றுப்போக ராஜன் வெற்றிகரமாய் எல்லாவற்றையும் செய்துமுடித்தான்.

மூன்று தினங்களில் மற்றுமொரு படையெடுப்பு. அன்றும் எதிரிக்கே சாதகமாக மாறியிருந்தது களநிலை. உச்சக்கட்டச் சண்டையை நடத்திக்கொண்டிருந்தான் ராஜன். முன்னிலையில் நின்ற அணித்தலைவர்களின் தொடர்புகள் அறுந்துபோக எதிரி மூன்று திசைகளாலும் சூழத் தொடங்கினான். ராஜனின் சுமை களத்தில் அதிகரித்துக் கொண்டேபோனது. திடீரென்று ஒரு தடவை அவனது கட்டளை அரண் அதிர்ந்து குலுங்க அதன் வாசலில் வீழ்ந்து வெடித்தது எறிகணை. அதன் அதிர்வு எல்லோரையும் உலுப்பிவிடக் கந்தக நெடியும் புகையும் அரணை மூடிக்கொண்டது. அப்போது ராஜனின் கட்டளையிடும்

**"ராஜனுக்கு சாவு...," அந்தப் பெரு வீரனின் சாவுமட்டும் பொறுமையாய் நின்றது. சாவுக்குள் வாழ்ந்தவனிடம் தோற்றுப்போன சாவு தண்ணீருக்குள் ஒளித்துக்கொண்டது. தமிழீழப் போர்க்களங்களில் அதிகம் பேசப்பட்ட எங்கள் வீரனுக்கு சாவில் மட்டும் அங்கு இடமில்லாமல் போனது. "றோமியோ சண்டையில் செத்திருந்தாலும் மனம் ஆறுதலாக இருந்திருக்கும்" அவனை அறிந்த போராளிகள் எல்லோரும் அதையேதான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.**

குரல் ஒலித்துக்கொண்டுதான் இருந்தது. அங்கிருந்த தோழன் தன் உடையால் விசுக்கி, விசுக்கிப் புகையை விளக்க முனைந்து கொண்டிருக்க நிலைகுலையாது தொடர்ந்தும் சண்டையை நடத்திக்கொண்டிருந்தான் ராஜன். அன்றைய வெற்றியால் ஆனந்தமடைந்த மண்மாதா தன் புதல்வன் ராஜனின் போராற்றலை எண்ணிப் பெருமிதமடைந்திருப்பாள். ஆனால் ராஜனின் உருவம் மட்டும் காய்ந்து, மெலிந்து...

ஏப்ரம் 02ம் நாள். இருநாள் இடைவெளிக்குள்ளேயே அடுத்த பாரிய படையெடுப்பு. "வெலிகதர" எனப் பெயரிட்டிருந்தான் எதிரி. இம்முறை ராஜனின் பகுதியை விடுவித்து வேறொரு பகுதியிற் சண்டை மூண்டிருந்தது. உள்ளிருந்த எமது அணிகளை முழுமையாய் முற்றுகையிட்டு "புலிகளின் தளபதி பால்ராஜசும் அவர் தோழர்களும் உயிருடன் பிடிபடப்போகிறார்களா? அல்லது அழியப்போகிறார்களா" எனச் சிங்களத் தலைமை ஆவலுடன் பார்த்திருக்குமலவிற்குக் கடுமையான சண்டையது. முறியடிப்பில் உறுதிகொண்டு தளபதி பால்ராஜ் நடத்திய புலிகளின் வீரம் செறிந்த சண்டையது. மறுமுனையில் நின்ற ராஜன் தளபதி பால்ராஜால் சண்டை முனைக்கு அழைக்கப்பட்டான். அந்தக் களமெங்கும் எதிரி அமைத்த எறிகணை வேலிகளைக் கடந்து, மேஜர் றோயின் அணியுடன் ஓடோடிச்சென்று, ஏனையவர்களுடன் இணைந்து அன்றைய புகழ்பூத்த முறியடிப்பு செய்துமுடித்தான் எங்கள் ராஜன். அன்றும் தமிழர் சேனை வெற்றிக்கொடி நாட்டியது. ஆனால் ராஜனின் உருவம் மட்டும்...

"ஓயாத அலைகள் - 03" இல் ஆனையிறவிற்கான சண்டைகள் முடிந்து இத்தாவிலில் நின்ற ராஜனுடன் கைகுலுக்கச் சென்ற அவன் தோழர்கள் கண்டது பழைய ராஜனையல்ல. ஆனையிறவின் வெற்றிக்காக எம் போராளிகள் வாழ்ந்த கடின வாழ்வைப் பிரதிபலித்த புதிய ராஜனைத்தான். வாடிவதங்கிய அந்த முகத்திற்கூட எவரையும் வசீகரிக்கும் அவனுக்கே உரிய கவர்ச் சிமட்டும் அப்படியே இருந்தது. நாங்கள் எப்போதும் அவனுடன் கூடவே காணும் அந்த அழகான சிரிப்புங்கூட அப்படியேதான் இருந்தது. காய்ந்து வறண்ட அவனின் தொண்டையிலிருந்து வந்த கரகரத்த குரலிலும் எப்போதும் இருக்கும் குழைவுமட்டும் மாறாமலிருந்தது. பெரும் சாதனையைச் செய்து முடித்ததும் தளம் வந்தவன் தலைவரைச் சந்தித்தான். தன் வீரர்கள் சாதித் தவற்றை அவருக்குத் தெரியப்படுத்தினான். தலைவருடன் தன் போராளிகளைச் சந்திக்கவைத்தான்.

ராஜனை மீண்டும் களம் அழைத்தது. அது "ஓயாத அலைகள் - 03" இன் இறுதிக்கட்டம். தளபதி பிரிகேடியர் சொர்ணத்திற்குத் துணையாய் நின்ற தளபதிகளில் ஒருவனாகத் தன்பணிகளைத் தனக்கேயுரிய இயல்பான திறமைகள் மூலம் செய்துமுடித்தான். அங்கு சண்டைகள் முடிந்ததும் அடுத்தகட்டச் சண்டைகளுக்கான பயிற்சிக்காக ராஜனும் அவனது போராளிகளும் தலைவரால் அழைக்கப்பட்டனர்.

ராஜனின் சண்டைப் பட்டியல் நீண்டுகொண்டே போனது. உயிர்ப்பசிகொண்ட யுத்தக் களங்களிற்குள்ளேதான் எங்கள் ராஜன் நிதமும் வாழ்ந்தான். ஆயினுங்கூட அந்தக் களங்களில் ராஜனுக்கென்றொரு சாவு இருக்குமென நாங்கள் நம்பவில்லை. அந்தளவிற்கு அவனது துணிவிலும் தந்திரத்திலும் துடிதுடிப்பிலும் நாங்கள் அத்தனை பெரிய நம்பிக்கை கொண்டிருந்தோம். ராஜனால் உயிருடன் திரும்பமுடியுமா? என நாங்கள் ஐயுற்ற எத்தனையோ களங்களிலிருந்து அவன் மீண்டுவந்துள்ளான். 1993 இல் புலோப்பளைச் சமரிலும் பின்னர் "ஜெயசிக்குறு" எதிர் நடவடிக்கைகளிலுங்கூட அவனுக்கு நேராய் வந்த ரவைகளால் அவனது கால்களிலும் இடுப்பிலுமாக வெறும் தசைகளையும் எலும்புகளையும் மட்டுமே துளைத்துச் செல்ல முடிந்தது. 1997 ஆனையிறவு, பரந்தன் சமரின்போது கூட ராஜனுக்கு நேராய் வந்த ரவையால் அவனது மண்டையை வெறுமனே துளைத்துச் செல்லத்தான் முடிந்தது. நிச்சயமாக இவற்றிலெல்லாம் ராஜன் உயிர்தப்பியதும் அதிஸ்டத்தால் மட்டுமல்ல. அவனிடம் இருந்த துணிவாலும், நம்பிக்கையாலும்தான்.



எங்கள் தளபதி இன்னும் களங்கள் காணுவான். வளர்ந்து, முதிர்ந்து அனுபவமிக்க தளபதியாக அவன் எம் தலைவரின் சுமைகளை இன்னும் இன்னும் பகிர்ந்து கொள்வான் என நாங்கள் எண்ணியிருந்தோம். யூன் மாதம் 26ம் திகதி, மறுநாள் தன் வீரர்களுடன் களமுனை ஒன்றிற்குப் புறப்பட இருப்பதாய் ராஜன் சொல்லியிருந்தான். அதற்கு முன் தன் தோழர்களோடு குளிப்பதற்காக இரணைமடு சென்றான். திடீரென அன்று மாலை எல்லோரையும் விரிக்க வைத்த அந்தச் செய்தி பரவியது. "ராஜனுக்குச் சாவு..." அந்தப் பெருவீரனின் சாவு மட்டும் வெறுமையாய் நின்றது. சாவுக்குள் வாழ்ந்தவனிடம் தோற்றுப்போன சாவு தண்ணீருக்குள் ஒழிந்து கொண்டது. தமிழீழப் போர்க்களங்களில் அதிகம் பேசப்பட்ட எங்கள் வீரனுக்குச் சாவில் மட்டும் அங்கு இடமில்லாமற் போனது. "றோமியோ சண்டையிற் செத்திருந்தாலும் மனம் ஆறுதலாக இருந்திருக்கும்" அவனை அறிந்த போராளகள் எல்லோரும் அதையேதான் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஏனெனில், அதைச் செரித்துக்கொள்ள முடியாமலிருக்கிறது எங்களால்.

அ.பார்த்தீபன் - விடுதலைப்புலிகள் ஐப்பசி - கார்த்திகை 2000




# சிங்கள பேரினவாதத்தின் அத்துமீறிய நடவடிக்கைக்கு எதிராக மயிலத்தமடுவில் தொடரும் போராட்டம்!

அக்டோபர் 15, 2023

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக 31 தினங்களாக தங்களது நில மீட்புக் கோரிய அறவழிப் போராட்டத்தை சிங்கள பேரினவாத அரசின் அடக்குமுறைக்கு அஞ்சாமல் மேற்கொண்டுவருகின்றனர்







# பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் இஸ்ரேலை எதிர்த்தும் போராடும் தெற்கின் சக்திகள் பௌத்த சிங்கள நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் குரல் கொடுக்கவேண்டும்!

**சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்**

அக்டோபர் 15, 2023

பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்தும் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தெற்கின் சக்திகள் போராடுவதை வரவேற்கின்றோம். அத்தோடு பௌத்த சிங்கள நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் குரல் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தாலே பாலஸ்தீனத்துக்கான போராட்டம் உண்மையானதாக அமையும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று (15) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்துக்கும், இஸ்ரேல் படைகளுக்கும் இடையில் வெடித்திருக்கும் போர் மிகவும் உக்கிரமானது. ஒன்றும் அறியாத சாதாரண மக்கள், பெண்கள், பிள்ளைகள், குழந்தைகள் என இரு பக்கமும் ஆயிரங்களை தாண்டி இதுவரை கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளனர்.

இதனை மனித நேயம் கொண்டவர்களால் அங்கீகரிக்க முடியாது. இத்தகைய நிலை உருவாவதற்கு யுத்தத்தை விரும்பும் பயங்கரவாத நாடுகளும், அதற்கு அமைதி காத்து அனுமதி அளிக்கும் உறவு நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் பொறுப்புக்கூறல் வேண்டும்.

பாலஸ்தீனத்தை இறைமையுள்ள நாடாக அங்கீகரிப்பதும் சொந்த நிலத்தில் அந்நியமாக்கப்படும் மக்களுக்கு வாழ்வுக்கான உத்திரவாதத்தை உறுதிப்படுத்துவதுமே தீர்வுக்கான ஒரே வழி என இன அழிப்புக்கும், இனப்படுகொலைக்கும் முகங்கொடுத்து நீதிக்காக சர்வதேசத்தின் கதவுகளை தட்டிக்கொண்டிருக்கும் மக்களாக ஐ.நா. சபையை கேட்டுக்கொள்கின்றோம்.

பாலஸ்தீன மக்களின் தாயக உரிமையை, இறைமையை அங்கீகரிக்காமல் அவர்களது பூமியிலேயே அவர்களை அந்நியர்களாக்கி உலக வல்லரசுகள் தமது அரசியல், பொருளாதார நலங்களுக்காக அவர்களை அழிக்க நினைப்பது பயங்கரவாதமே. அதன் உப விளைவாகவே ஹமாஸ் போன்ற இயக்கங்கள் உருவெடுத்தன. அதனை பயங்கரவாதமாக்குவதும் பயங்கரவாதமே. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோன்று நாடுகள் பிரிந்து போர்க்கொடி தூக்கி இருப்பது வறுமையில் வீழ்ந்துள்ள நாடுகளை மேலும் வறுமைக்குள் தள்ளுவதாக அமையும். இது உலக அமைதி, ஒழுங்கை மேலும் மோசமாக சீர்கெடச் செய்யும். இதுவும் பயங்கரவாதமே.



இலங்கையில் வட கிழக்கு தமிழர்களின் நீண்ட நாள் அரசியல் அபிலாசைகள் தீர்க்கப்படாததன் காரணமாகவே பல்வேறு விடுதலை அமைப்புகள் தோற்றம் பெற்றன. இறுதியில் பிரச்சினைக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கமே காரணம் என அவர்களை அழித்தவர்கள் இதுவரை வடகிழக்கு தமிழர்களின் இறை மையை அங்கீகரிக்காமல் பௌத்த சிங்கள மேலாண்மை வாதத்தில் இராணுவத்தின் துணையோடு, இராணுவ முகம் கொண்ட சிங்கள பௌத்த பிக்குகளை ஏவிவிட்டு நில ஆக்கிரமிப்பை தொடர்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தினமும் வீதியில் நின்று போராடுவதற்கு தள்ளப்பட்டுள்ளனர். அதன் இன்னும் ஒரு வடிவமே மட்டக்களப்பு மேய்ச்சல் தரை மீட்பு போராட்டம்.

வடகிழக்கு தமிழர்களின் இறைமையை அங்கீகரிக்காமல், அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றாமல், அவர்களது பாரம்பரிய தாயக பூமியை ஆக்கிரமித்து பௌத்த பூமியாக்க துடிக்கும் பௌத்த துறவிகளுக்கு அனுமதி அளிக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாலஸ்தீன-ஃ இலங்கை நட்புறவு அமைப்பின் தலைவராக இருப்பது தேச விடுதலைக்காக ஏங்கி நிற்கும் பாலஸ்தீன மக்களுக்கு அவமானமே. இலங்கை மக்களுக்கு அது நகைப்புக்கிடமானதே.

அது மட்டுமல்ல, பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்தும் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தெற்கின் சக்திகள் முகநூலில் பதிவிடுவதோடு போராட்டத்தை முன்னெடுப்பதோடு போராட்டத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். இதனை நாம் வரவேற்கின்றோம்.

அதே நேரம் அவர்களிடம் நாம் “வடகிழக்கு தமிழர்களின், மலையகத் தமிழர்களின் இறைமைக்கும், அரசியல் அவிலாசைகளுக்கும், தாயக கோட்பாட்டுக்கும் ஆதரவாகவும் குரல் கொடுக்க வேண்டும் என கேட்பதோடு பௌத்த சிங்கள நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் குரல் கொடுக்க வேண்டும் எனவும் கூறுகின்றோம். அவ்வாறு நீங்கள் செய்தால் மட்டுமே பாலஸ்தீனத்துக்கான உங்கள் போராட்டம் உண்மையானதாக அமையும்.

யுத்த வடுக்களோடு வலிகளையும் சுமந்து தமிழர் தேசியம் காக்க போராடும் சமூகமாக பாலஸ்தீன மக்களின் உரிமைக்காகவும் தாயக மீட்புக்காகவும் நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம்.

இன விடுதலைக்காக போராடும் இயக்கங்களை அழிக்கலாம் ஒழிக்கலாம். ஆனால், கொள்கை பற்றோடு, தனியாக மண் தாகத்தோடு கொள்கை உள்ள உணர்வுகளை எவராலும் அழிக்க முடியாது. அது புதிய வடிவங்களோடு, புதிய வீச்சோடு தொடரும் என்பதே உண்மை.

உலக பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் வல்லரசுகள் தனது சுயநல அரசியலில் இருந்து விலகி உலகின் அமைதிக்காக ஒடுக்கப்படும் இனங்களின் விடுதலைக்காக ஐக்கிய நாடுகளின் ஒழுங்கு விதிகளை முறையாக கடைப்பிடித்து சமாதானத்துக்கு வழிகாட்ட வேண்டும் என வேண்டிக்கொள்கின்றோம் என்றிருந்தது.

.

# “மக்கள் இயக்கமொன்று பலம் பெற வேண்டும்”

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

அக்டோபர் 16, 2023

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தவரைக்கும் அவர்களின் அரசியல் துறையே தமிழ்த் தேசியக் கட்சிகளின் வழிகாட்டும் பீடமாக இருந்தது. அவர்கள் எதை முன்மொழிந்தார்களோ அதையே எமது கட்சித் தலைவர்கள் வழிமொழிந்தார்கள் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டிள்ளார்.

தமிழ் மக்களுக்கான ஒரு தேசியத் தலைமை இல்லாத நிலையில் தமிழ் அரசியற் கட்சிகள் ஒவ்வொன்றும் திக்கொன்றாக அவற்றினது எஜமானர்களின் அல்லது நிதியூட்டு நபர்களின் மனங்கோணாதவாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் கட்சிகளை வழிப்படுத்த மக்கள் இயக்கமொன்று பலம் பெற வேண்டும் என்றார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் ஞாயிற்றுக் கிழமை (15) நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆறுகள் ஒரு போதும் பின்னோக்கிப் பாய்வதில்லை. அது போன்றுதான் வரலாறும் பின்னோக்கிப் பாயாது. வரலாறு எங்களை எந்த இடத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறதோ, அந்த இடத்திலிருந்துதான் வரலாறு தந்த படிப்பினைகளையும் உள்வாங்கிக் கொண்டு நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். ஆனால், இந்தக் கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தயாராக இல்லை.

முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப் பட்டதன் பின்னர் அவர்கள் முப்பது, நாற்பது வருடங்கள்



பின்னால் சென்று அங்கிருந்து போராட நினைக்கிறார்கள். அதன் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் காலப்பொருத்தமற்று அடிக்கடி அறிவிக்கப்படும் கடையடைப்புப் போராட்டங்களாகும் என்றார்.

# யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் தூபியை உடைக்க கோரி முறைப்பாடு!

அக்டோபர் 17, 2023

யாழ்.பல்கலைகழகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தூபி உரிய அனுமதிகள் பெறப்படாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முறைப்பாடுகளை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர், யாழ்ப்பாணம் கட்டுடை மற்றும் கிளிநொச்சி விசுவமடு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த இரு பொதுமகன்கள் ஆகியோர் இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை ஆரம்பித்துள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, தூபியை அமைக்க பெறப்பட்ட, செலவழிக்கப்பட்ட நிதி விபரங்கள், தூபிக்கான அனுமதிகள் தொடர்பிலான ஆவணங்களுடன் எதிர்வரும் வியாழக் கிழமை விசாரணைக்கு சமூகமளிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.









யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தூபி கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ஆம் திகதி இரவு இடித்து அழிக்கப்பட்டது.

அதனை அடுத்து, பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டதை அடுத்து மீண்டும் 10ஆம் திகதி துணைவேந்தர் சிறிசற்குணராஜாவினால் அடிக்கல் நாட்டப்பட்டு புதிய தூபி நிர்மாணிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து வருடந்தோறும், “மே 18” முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் குறித்த தூபியிலையே இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய தூபிக்கு உரிய அனுமதிகள் பெறப்படவில்லை என்றும், அவ்வாறு அனுமதி பெறப்படாத தூபியை உடைஞ்சு அகற்றுமாறும் கோரியே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

# மட்டு மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரதேசத்தில் புதிய புத்தர் சிலை!

அக்டோபர் 17, 2023

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தலைமையில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராத யஹம்பத்தின் பங்களிப்புடன் புதிய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

மாதவனை மயிலத்தமடு பிரதேசம் பாரம்பரியமாக தமிழ் பால் பண்ணையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அப்பகுதியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு ஆதரவாக புதிய புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அதேவேளை தமிழர் பகுதிகளில் தொடர்ந்து காணி அபகரிப்பிலும், குடிசார் பரம்பலை மாற்றியக்கவும், பௌத்த மயமாக்கலை தொடர்ச்சியாகவுமே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.





# முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் புலிபாய்ந்தகல் பகுதியில் அத்துமீறி சட்டவிரோத வாடிகள்; நடவடிக்கை எடுக்க தயங்கும் அதிகாரிகள்;

## முன்னால் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

அக்டோபர் 15, 2023



கொக்குத்தொடுவாய் புலிபாய்ந்தகல் கடற்கரையை அண்டிய பகுதியில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களால் சட்டவிரோதமாக வாடிகள் ஒகஸ்ட் மாதம் அமைக்கப்பட்டிருந்தது. இரண்டரை மாதமாகியும் அதிகாரிகளால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் மீண்டும் புதிய வாடிகள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்ட தகவலையடுத்து அவ்விடத்திற்கு சென்று நிலவரங்களை பார்வையிட்டதன் பின்னர்.

தமிழரசு கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் செயலாளரும், முன்னால் வடமாகாண சபை உறுப்பினருமான துரைராசா ரவிகரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் வடக்கு புலிபாய்ந்தகல் கடற்கரையை அண்டிய பகுதி இதனோடு இணைந்த பல ஏக்கர் காணிகள் சிறு தானிய பயிர்ச்செய்கைக்காக தமிழ் மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது. தற்போது வன இலாகா கையகப்படுத்தியுள்ளது.

கடற்கரை பகுதி தமிழ் மீனவர்கள் பாரம்பரியமாக தொழில் செய்து வருகிறார்கள். அப் பகுதியில் இரண்டரை மாதத்திற்கு முன்னர் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் வாடி அமைத்து அங்கே தொழில் மேற்கொள்கிறார்கள் என கொக்குதொடுவாய் மீனவர் அமைப்பும் அங்கு தொழில் செய்யும் தமிழ் மீனவர்களுமாக கிராம சேவையாளர் அவர்களுக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டதோடு எனக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

அவ்விடத்திற்கு சென்று பார்வையிட்ட போது கிராம சேவையாளரால் அவ் வாடிகளை அகற்றும்படியும் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறி சென்றார். ஆனால் சட்டத்தை மீறி அனுமதியின்றி அமைக்கப்பட்ட வாடி பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களால் இதுவரை அகற்றப்படவில்லை.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் அகற்ற கோரி பதாகை காட்சிபடுத்தப்பட்டு இருந்தது. ஆனால் இருந்த வாடியை விட இன்னுமொரு வாடி முழுமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் இரண்டு வாடி அங்கே பகுதியளவில் போடப்பட்டுள்ளது.

ஏற்கனவே தர்க்கப்படும்போது நாங்கள் முன்பு குறிப்பிட்டது போல் அங்கே புத்த பிக்கு ஒருவர் வர இருப்பதாகவும் 300 குடும்பங்களுக்கு மேல் குடியமர்த்த இருப்பதாகவும் கூறப்பட்ட தகவல்களை பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர் அங்கு இருந்தவர்களுடன் உரையாடியுள்ளார். இருப்பினும் அங்கிருந்தவர்களுக்கு இவ் விடயத்தை தெளிவுபடுத்திவிட்டு மேலதிக அரசாங்க அதிபருக்கும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக காணி உத்தியோகத்தருக்கும் தொடர்புகொண்டு இவ்வாறான அத்துமீறல்கள் அனுமதியின்றி நடைபெறுகிறது என் பதனையும் 28 நாட்களுக்குள் சட்டத்தின்படி அகற்றப்பட வேண்டிய வாடிகள் இன்று (14.10.2023) இரண்டரை மாதமாகியும் அகற்றப்படாதுள்ளது.

அதற்கு தாங்கள் எடுத்த நடவடிக்கை போதாது என்பதனை சுட்டிக்காட்டியிருந்தேன். அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்தாவது உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்திருந்தார்கள். இருப்பினும் பிரதேச செயலகத்திற்கு சென்று இவ் விடயம் தொடர்பில் கதைப்பதற்கு உள்ளோம்.

இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து பெரியதொரு குடியேற்ற திட்டத்தை முறியடிக்கும் விதமாக செயற்பட வேண்டும். அத்துமீறி வாடி அமைப்பது பிழையான செயற்பாடு என்பதனை கூறிக்கொள்கிறோம் என்றார்.

இதன் போது கொக்குத்தொடுவாய் வடக்கு மீனவ சங்கத்தின் தலைவர், தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், சமூக செயற்பாட்டாளர் சிவகுரு போன்றோர் அவ்விடத்திற்கு சென்றிருந்தனர்.

# இராணுவ மற்றும் காவல்துறை புலனாய்வுத் துறையினர் வியாபரிகளை மிரட்டுகின்றனர்!

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

அக்டோபர் 18, 2023




இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் வியாபாரிகளை மிரட்டுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி கேட்டு இடம்பெறவுள்ள ஹர்த்தால் தொடர்பில் ஊடகங்களுக்கு இன்று புதன்கிழமை (18) கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 ஆம் திகதி ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு கோருகின்றோம். எங்களுடைய மக்கள் போராட்டத்தின் ஊடாக முன்னுக்கு வந்தவர்கள். போராட்டத்தின் குணாதிசயங்களை கொண்டவர்கள். இருந்தாலும் நீதித்துறை, நில அபகரிப்பு, புத்த கோவில்களுடைய ஆக்கிரமிப்பு என்பன வடக்கு - கிழக்கில் மிக மோசமாக நடந்து வருகின்றது. எங்களது மக்களின் பூர்வீகம் மற்றும் அவர்களின் நிலங்களை அபகரிப்பதன் ஊடாக எங்களுடைய மக்களின் வரலாற்றை சிதைக்கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்தும் வகையில் இந்த கர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

எமது மக்கள் போராட்டத்தின் ஊடாக வந்தவர்கள் ஆகையால் இதற்கு ஆதரவு தருவார்கள் என நம்புகின்றோம். இருந்தாலும் சில சங்கடங்கள் இருக்கின்றது. அன்றாடம் உழைக்கின்ற மக்கள் தமது அன்றைய தேவைக்கு என்ன செய்வார்கள் என்ற கேள்வி எழுகிறது.

தற்போது புதிதாக அடாவடித் தனமான, ஜனநாயக விரோதமான செயற்பாடு நடக்கிறது. இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் வலர்த்தக நிலையங்களை நடத்துவோர், சிறுதொழில் செய்வோர், மரக்கறி வியாபாரம் செய்வோர் என அவர்களை மிரட்டி அவர்களை கர்த்தாலுக்கு ஆதரவு வழங்க வேண்டாம் எனக் கூறி வருகிறார்கள். அதற்கு எமது கண்டனத்தை தெரிவிக்கின்றோம்.

அனைத்து தமிழ் பேசும் மக்களும் இதற்கு ஆதரவு தருவார்கள்.

அரசாங்கம் கூடுதலான திணைக்களங்கள் மற்றும் பிக்குகளை வைத்து எமது மக்களை அடக்கி ஒடுக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கிறது. தொடர்ந்தும் கர்த்தாலை நடத்த முடியாது. இது ஒரு கடைசியான கர்த்தால். அதனால் அனைவரும் ஆதரவு தர வேண்டும் எனத் தெரிவித்தார்.

# மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிரதீபன் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது!

## பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

அக்டோபர் 19, 2023

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழரின் உரிமைகள், தமிழ் தேசம் தொடர்பில் குரல் கொடுக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகிறார்கள். மனித உரிமைகள் செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன் விசாரணை என்ற பெயரில் தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் உ றுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இன்று புதன்கிழமை (18) இடம்பெற்ற நீதித்துறைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் நாட்டில் நீதி உள்ளதா, நீதிமன்றங்களின் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படுகிறதா, நீதிபதிகள் மற்றும் குடிமக்கள் பாதுகாக்கப்படுகிறார்களா? என்பது சந்தேகத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

நீதித்துறையின் முன்னேற்றம் குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீதி இல்லாத, நீதி பேசாத, நீதி இயங்காத நாடாகவே இலங்கை தற்போது காணப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனையைச் சேர்ந்த மனித உரிமை சார்ந்து செயல்படுகின்ற சிவில் சமூக செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன் அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறுகின்ற அநீதிகளுக்காகவும் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காகவும் தமிழர் தேச அத்துமீறல்கள் மற்றும் ஏனைய அனைத்து மனித உரிமை மீறல்களுக்காகவும் நீதி கேட்டு குரல் கொடுத்துப் பல்வேறு செயல்பாட்டுத் தளங்களிலும் நின்று செயல்பட்டு வருகின்ற ஒரு செயற்பாட்டாளர்.

கடந்த 2023.10.12 ம் திகதி அவர் ஊரில் இல்லாத நேரம் அவரது வீட்டிற்கு சென்றிருந்த பொலீசார் பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவின் (டி.ஐ.டி) விசாரணை இருப்பதாகவும் அதற்கு அழைப்புக் கடிதம் தர வேண்டும் எனவும் கூறி அவரையும் அவரது குடும்பத்தாரையும் விசாரித்துள்ளதோடு அவரது தம்பியின் தொழில் நிலையத்திற்கும் சென்று விசாரணை அழைப்பை வழங்கியுள்ளனர்.

பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை பிரிவு சிங்கள மொழியில் விசாரணை அழைப்பானை அனுப்பியுள்ளார்கள். இதற்கு முன்னரும் கூட இவருக்கு இது போன்று நான்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



இறுதியாக 2023.01.25 ஆம் திகதி காலை 9:30 மணிக்கு இலக்கம் சி - 02 அரச விடுதி அம்பாறை எனும் விலாசத்தில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவின் அந்த நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் அங்கு இருந்த அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு நான்கு மணித்தியாலங்களும் 48 நிமிடங்களும் நடந்ததோடு சுமார் 24 பக்க விசாரணை அறிக்கை அவர்களால் அவரிடம் இருந்து பெறப்பட்டு எழுதப்பட்டது .

அதன் பின்னர் 2023.04.15 ஆம் திகதியும் அவரது வீட்டிற்கு பெரியநீலாவணை போலீஸ் நிலையத்தில் இருந்து இரண்டு போலீஸ் அதிகாரிகள் சீருடையில் வருகை தந்து பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினர் மற்றும் தங்கள் உயர் அதிகாரிகள் தங்களை அனுப்பி விசாரிக்கச் சொன்னதாகவும் கூறி விசாரணைக்கு உட்படுத்தி சுமார் இரண்டு மணி நேரம் விசாரணை அறிக்கை எழுதியிருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து இப்போது இந்த அழைப்பு வழங்கப்பட்டிருக்கிறது இந்த அழைப்பு சிங்கள மொழியில் வழங்கப்பட்டு இருக்கிறது இதில் சிங்களத்தில் தேசிய பாதுகாப்புக்கு இடையூறாக இருந்தமை தொடர்பாடல் செய்தமை போன்ற விடயங்கள் தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்றும் அதற்கான விசாரணை பிரிவு 2023.10.16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இலக்கம் 149, 3வது மாடி கப்பிட்டல் பில்டிங், கிருலப்பனை, கொழும்பு 05 எனும் முகவரியில் 01 ம் இலக்க விசாரணை அறைக்கு வருமாறும் அழைப்பு விடுத்திருக்கிறார்கள்.

இவ்வாறு தொடர்ச்சியாக இதற்கு முன்னரும் கூட நான்கு முறை இவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள் விசாரணை செய்திருக்கிறார்கள் இதுபோன்று பல போலீஸ் விசாரணைகள் சி.ஐ.டி.விசாரணைகளையும் செய்திருக்கிறார்கள் அதனை தொடர்ந்து இப்போதும் அழைப்பு விடுத்திருக்கிறார்கள் விசாரணைக்கு என்று இவ்வாறு தொடர்ச்சியாக இந்த நாட்டிலே இருந்து செயல்படுகின்ற இவர்களைப் போன்ற செயற்பாட்டாளர்களுக்கு விசாரணை எனும் பெயரிலே தொடர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு கொண்டிருப்பதும் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்துக் கொண்டிருப்பதும் வேதனையான ஒரு விடயம் என்பதோடு இவ்வாறான விடயங்கள் தொடர்ச்சியாக இடம் பெறாமல் இருப்பதற்கு உரிய ஆவணை செய்யப்பட வேண்டும் இந்த உயரிய சபையைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு விசாரணை என்ற பெயரில் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்படும் போது இந்த நாட்டில் எவ்வாறு அச்சமில்லாமல் வாழ முடியும். தாமோதரம் பிரதீபனுக்கு வழங்கப்பட்ட அழைப்பானை கடிதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடிதங்களின் பிரதிகளை சபைக்கு சமர்ப்பிக்கிறேன். இந்த நாட்டில் தமிழ் இளைஞர்கள் செயற்பட முடியாத அளவுக்கு பாதுகாப்பு தரப்பினரால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. இது முற்றிலும் விரோதமானது என்றார்.

# ஊடகவியலாளர் ம. நிமலராஜனின் 23 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

அக்டோபர் 19, 2023

யாழில் படுகொலை செய்யப்பட்ட நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவு தின நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை அனுஸ்டிக்கப்பட்டது.

யாழ். ஊடக அமைய தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பொதுச்சுடரை ஊடக அமைய செயலாளர் க. நிதர்சன் ஏற்றி வைக்க, உருவ படத்திற்கு மலர் மாலையை மூத்த ஊடகவியலாளர் ம. நியூட்டன் அணிவித்தார்.

தொடர்ந்து, ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

போர் சூழலில் யாழில் இருந்து , துணிவாக ஊடகப்பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி, ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

அந்நிலையில் கடந்த 2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுத தாரிகள், வீட்டின் யன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன் போது அவர் எழுதிக் கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.



கொலையாளிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனை படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக் குண்டு தாக்குதலையும் மேற்கொண்டனர். அதன் போது வீட்டில், இருந்த நிலமராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம் தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்து இருந்தமை குறிப்பிடத் தக்கது.







# ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவேந்தல் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்றது!

அக்டோபர் 19, 2023

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23 ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இன்று வியாழக்கிழமை (19.10.2023) இடம்பெற்றது.






முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் ஊடகவியலாளர்கள் மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட ம.நிமலராஜன் திருவுருவ படத்திற்கு சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்து உணர்வு பூர்வமாக வணக்கம் செலுத்தினர்.

மயில்வாகனம் நிமலராஜன் யாழ்ப்பாணத்தை தளமாக்க கொண்டு இயங்கிய முன்னணி ஊடகவியலாளர் ஆவார். 2000 ஆம் ஆண்டு அக்டோபர் 19 அன்று இவர் இலங்கை இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இராணுவ ஆதரவோடு இயங்கும் ஒட்டுக்குழு ஈ.பி.டி.பி ஆயுததாரி ஒருவரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு 23 வருடங்கள் கடக்கின்ற போதிலும் இவரின் படுகொலைக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பது

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி மூடி மறைக்கப்படுமா என்ற சந்தேகம் எழுகின்றது!

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

அக்டோபர் 21, 2023

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி மூடி மறைக்கப்படுமா என்ற சந்தேகம் தற்போது எழுகின்றது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.



கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி இடத்தினை இன்று சனிக்கிழமை (21) பிற்பகல் நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

கொக்குதொடுவாய் புதைகுழி தொடர்பான விடயத்தை பார்க்கும் போது ஏற்கனவே இறுதி நாளன்று 17 உடலங்கள் புதைகுழியின் ஊடாக கண்டுபிடிக்கப்பட்டதாகவும், நிறுத்தப்பட்ட தினத்தின் போது ஒக்டோபர் மாதம் நடுப்பகுதி அல்லது பிற்பகுதி அடுத்த அகழ்வு ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அண்மையில் நிதி போதாத நிலமையை சுட்டிக்காட்டி காலதாமதம் ஆகலாம் என்று ஒரு தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எங்களுக்கு இதில் ஒரு ஐயம் ஏற்படுகின்றது என்னவென்றால் காலதாமதங்கள், நிதி இல்லை என்று கூறுவதும், ஒக்டோபர் மாதத்திற்கு பிற்போடப்பட்டதும், குறித்த காலப்பகுதி மழை காலமாக இருப்பதாலும் இப்படியே மூடி மறைக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தாங்கள் ஒப்படைத்த பிள்ளைகளை தருமாறு கூறி 2000 நாட்களுக்கு மேலாக போராட்டம் நடத்தி கொண்டிருக்கிறார்கள். உறவுகளை தவிர மக்கள் என்ற வகையில் தங்களுடைய உறவுகளுக்கு இறுதி யுத்தத்தில் சரணடைந்த உறவுகளுக்கு என்ன நேர்ந்தது? என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அரசாங்கத்தினுடைய இவ்வாறான ஒரு அறிவித்தலானது இனப்படுகொலை என்று கூறி உண்மைத்தன்மையோடு வெளிவர வேண்டிய இந்த சந்தர்ப்பங்கள் அரசாங்கத்தினால் மூடி மறைக்கப்படுகின்றதா? என்ற கேள்வி மக்களிடத்திலே எழுகின்றது.

தயவுசெய்து உண்மைத் தன்மையோடு செயற்படுத்துங்கள். சட்டத்தின் ஆட்சியை நடத்துங்கள் வெளிப்படைத்தன்மையை மக்களோடு பேணுங்கள். இந்த வகையில் நடந்தால் உங்களுடைய நடவடிக்கைகள் அத்துமீறிய இனப்படுகொலையை செய்ததற்கான சாட்சியாக கூட அமையும்.

இதற்கு அரசாங்கத்தோடு சேர்ந்து துணை போகின்ற நடவடிக்கையையும் விட்டு ஆழ அகன்று அதிலுள்ள உண்மைதன்மை வெளிப்படக்கூடியதாக எத்தனை உடலங்கள் இருந்தது? எப்போது இந்த உடலங்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் அனைத்தும் வெளிவரக்கூடிய வகையில், சட்டத்தின் ஆட்சி நடைபெற கூடிய வகையில் குறித்த அகழ்வுபணியை தொடர்ந்து செய்யுங்கள் என கேட்டுக் கொள்வதோடு மக்களை ஏமாற்றாதீர்கள் தமிழ் மக்களுக்கு நேர்ந்த இனப்படுகொலையை மூடி மறைக்க வேண்டாம் என மேலும் தெரிவித்தார்.

# பெரும்பான்மை இனத்தவர்கள் 7 பேர் யாழ். பல்கலைக்கழகத்தில் நியமனம்!

அக்டோபர் 28, 2023

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள சிற்றூழியர் பதவி வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற ஆயிரத்து 139 பேர் நியமனத்துக்குத் தகுதி பெற்றவர்கள் எனப் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த 7 பேர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் இவர்களுக்கான நேர்காணல் மற்றும் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் நடாத்தி முடிக்குமாறு பலநோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களப் பணிப்பாளரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இருந்தும் ஒரு இலட்சம்




வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பலர் தொழில் வாய்ப்புக்காக விண்ணப்பத்திருக்கும் நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட தமிழீழம் - தென் தமிழீழம் ஹர்த்தால் 20.10.2023

அக்டோபர் 20, 2023

தமிழ் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்று (20) வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படும் ஹர்த்தால் போராட்டத்தினால் வர்த்தக நடவடிக்கைகள் முற்றாக முடங் கிபோயிருந்தது. அதே வேளை தனியார் போக்குவரத்துச் சேவைகளும் முடங்கியிருந்த போதும் அரச போக்குவரத்து சேவைகள் வழமை போல நடந்திருந்தது.

எனினும் பிரதான நகரங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப் பட்டு பூரண ஆதரவை வர்த்தக சமூகங்கள் வழங்கியிருந்தன. அதனால் நகரங்கள் முற்றாக முடங்கியுள்ளது.

தனியார் பேருந்து சேவை அனைத்தும் முடங்கிய வேளை இலங்கை போக்குவரத்து சபை பேருந்து அங்காங்கே சேவை யில் ஈடுபட்டன.

இதனிடையே ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி பாடசாலை தவணைப் பரீட்சைகள் காரணமாக பாடசாலைகள் இயங்கி யதையும் அவதானிக்க முடிந்தது.

காலை முதல் பாடசாலைகளில் பரீட்சைகள் நடைபெறுவது தொடர்பில் குழப்பங்கள் காணப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த பொது போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்ததாக இருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ப. சரவணராஜா, அச்சுறுத் தலுக்கு உள்ளாக்கப்பட்டு பதவியிலிருந்து இராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டதை எதிர்த்தும் கிழக்கில் கால்நடை மேய்ச்சல் தரைகள் சுவீகரிக்கப்பட் டமைக்கு எதிராக வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஸ்டிக்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





























# இந்தியப் படைகள் நிகழ்த்திய யாழ் வைத்தியசாலை படுகொலை நினைவேந்தல்!

அக்டோபர் 21, 2023

1987-ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21-ஆம் 22-ஆம் திகதிகளில் இந்தியப்படைகள் யாழ் வைத்தியசாலையில் படுகொலை நடத்தினர். கேணல் பிரார் என்ற இந்திய அதிகாரியின் மேற்பார்வையில் இப்படுகொலை நடந்தது. இதில் ஊழியர்கள் , நோயாளிகள் என்று 68 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.








யாழ் நகரத்தின் கிழக்குப் புறமாக நகரில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை யாழ் குடாநாட்டில் வாழ்கின்ற எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கு மட்டுமன்றி அயல் மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களிற்கும் பிரதான வைத்தியசாலையாக உள்ளது. தினசரி ஆயிரம் பேர் வரையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதோடு, பல கட்டட வசதிகளுடன், சத்திரசிகிச்சைப் பிரிவு, அவசர சத்திர சிகிச்சைப் பிரிவு எனப் பல பிரிவுகளுடனும் 1970களிலிருந்து இயங்கி வருகிறது.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் பத்தாம் நாள் இந்தியப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் தொடங்கியதிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்ற போரின் மூலம் யாழ்நகரைக் கைப்பற்றும் முயற்சியில் இந்திய இராணுவத்தினர் ஈடுபட்டார்கள். யாழ்ப்பாணக் கோட்டையில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் யாழ் நகரப் பகுதி மீது பெருமளவு எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதலை மேற்கொண்டிருந்தபோதும் யாழ். வைத்தியசாலையில் வைத்தியர்கள், ஊழியர்கள், தாதிமார் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கான வைத்திய சேவையை வழங்கிப் பல உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள். 1987 ஒக்டோபர் இருபத்தோராம் திகதி இந்தியப்படையினர் எறிகணை வீச்சு, விமானத் தாக்குதல்களை நடத்தியவாறு யாழ். நகரைநோக்கி முன்னேறினார்கள். யாழ். வைத்தியசாலையில் பணிகளில் ஈடுபட்ட வைத்தியர்கள், ஊழியர்கள், சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் போன்றோர் பாதுகாப்பிற்காக, வைத்தியசாலை எக்ஸ்றே பிரிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் பாதுகாப்பு தேடினார்கள்.

பிற்பகல் 3.00 மணியளவில் யாழ் நகரப் பகுதிக்குள் இந்திய இராணுவம் உள்நுழைந்தது. பின்னர் 4.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவம் அலுவலகப் பகுதியில் வைத்தியசாலைச் சீருடையுடன் இருந்த ஊழியர்கள், நோயாளர் வண்டில், கட்டில், பாய், வாங்குகளிற் படுத்திருந்த நோயாளர்கள் என எல்லோரையும் சுட்டுப்படுகொலை செய்தது

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் கூறுகையில் :-

1987 ஒக்ரோபர் இருபத்தோராம் திகதி மாலை 4.30 மணியளவில் வைத்தியசாலையினுள் வந்த இந்திய இராணுவத்தினர் மக்கள் மீது தாக்குதலை நடத்தினார்கள். தாக்குதலிற் காயப்பட்டவர்கள் சத்தமிடும் போது அவர்கள் மீது கைக்குண்டினை எறிந்ததுடன், துப்பாகியாலும் சுட்டார்கள். மறுநாள் காலை 6.00 - 7.00 மணிக்கிடையில் வைத்தியசாலையின் இருபத்தாறாவது நோயாளர் விடுதிப் பக்கமிருந்து சம்பவ இடத்திற்கு வந்த வைத்தியர் சிவபாதசுந்தரம் அவர்களும், இரண்டு தாதியினரும் இந்தியச் இராணுவத்தினருடன் கதைத்து எஞ்சியிருக்கும் பொதுமக்களைக் காப்பாற்ற முயற்சித்தார்கள்.



மறுநாள் காலை 10.00 மணி வரை வைத்தியசாலையில் ஆனால் இராணுவத்தினர் ஓடிச் சென்று துப்பாக்கியினை எடுத்து வைத்தியரையும் கூடச்சென்றவர்களையும் சுட்டதில் அவர்கள் அனைவரும் உயிரிழந்தார்கள். காலை 10.00 மணியளவில் ஏனைய வைத்தியர்கள் எடுத்த முயற்சியினால் சம்பவத்தில் காயமடைந்து உயிருடனிருந்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். சம்பவத்தில் உயிரிழந்த மூன்று வைத்தியர்கள், இரண்டு தாதிமார்கள், மேற்பார்வையாளர், ஊழியர்கள் உட்பட இருபத்தொரு மருத்துவமனை பணியாளர்களும், நோயளார் விடுதிகளிற் சிகிச்சை பெற்றுவந்த நாற்பத்தேழு நோயாளர்களுமாக மொத்தம் அறுபத்தெட்டுப் பேர் உயிரிழந்தார்கள். உயிரிழந்த அனைவரது உடல்களையும் வைத்தியசாலை பின்வாசற் பக்கமுள்ள பிண அறைக்கு அருகிற் போட்டு இந்தியப் படையினர் எரியூட்டினர் எனத் தெரிவித்தார்.



1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் இருபத்தோராம், இருபத்திரண்டாம் திகதியில் கடமையின்பால் உயிர்நீத்த வைத்தியர்கள் உட்பட இருபத்தொரு ஊழியர்களையும் அவர்களுடன் உயிரிழந்த நோயாளர்கள் நாற்பத்தேழு பேரையும் யாழ். மருத்துவமனை ஒவ்வொரு வருடமும் நினைவுகூர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# முல்லைத்தீவு மாந்தைகிழக்கு பிரதேசத்தின் வன்னிவிளாங்குளம் பகுதியில் துவரங்குளத்தையும் மற்றும் அதனோடு இணைந்த 58 பயனாளிகளுக்கு உரிய நிலங்களையும் வன இலாகா ஆக்கிரமித்துள்ளதால் அதற்கு எதிராக மாந்தைகிழக்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக இன்று [2023.10.23] கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது!



















# யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி படுகொலை 36ஆம் ஆண்டு நினைவேந்தல்!

அக்டோபர் 24, 2023

யாழ்ப்பாணம் - கொக்குவில் இந்துக்கல்லூரி படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் கல்லூரில் பிரதான வாயிலுக்கு அருகில், இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு தீபமேற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டோரின் உறவினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24ம் திகதி யாழ்ப்பாணம், கொக்குவில் இந்துக்கல்லூரியில் தஞ்சம் அடைந்திருந்த 50க்கும் மேற்பட்ட பொதுமக்களை இந்திய இராணுவத்தினர் படுகொலை செய்தனர்.

# புத்தூர் கிழக்கில் பொதுமகனை அச்சுறுத்தும் சிறீலங்காப் புலனாய்வுப்பிரிவு!

அக்டோபர் 24, 2023

புத்தூர் கிழக்கில் வசிக்கும் பிள்ளையான் தர்மகுலசிங்கம் என்வரை சிவில் உடையில் சென்ற சிறீலங்காப் படையினர் என சந்தேகிப்பவர்கள் அச்சுறுத்தி வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

ஒருபுறம் புலம்பெயர் தேசத்திலுள்ள தமிழ் மக்களிற்கு மலர் மாலையணிவித்து வரவேற்பதாக காண்பித்துக்கொண்டாலும் இன்னொரு புறம் குடும்பங்களை அச்சுறுத்திக்கொண்டிருப்பது புலம்பெயர் மக்களிடையே சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது

இதனிடையே கடந்த ஒகஸ்ட் 4ம் திகதியன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணத்தின் பிராந்திய அலுவலகத்தில் பி.தர்மகுலசிங்கம் உயிருக்கு அச்சுறுத்தல் குறித்து முறைப்பாடு செய்துள்ளதாக ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கை இராணுவம், தாம் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் எனவும், நாட்டிற்கு வெளியே உள்ள அவரது மகன் தர்மகுலசிங்கம் நிலாநிதன் என்பவரை தம்மிடம் கையளிக்க நிர்ப்பந்திப்பதாகவும் முறையிட்டுள்ளார்.

அவரது மகன் இலங்கை இராணுவத்தின் சட்டவிரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்த சர்வதேச ஊடகங்களுக்கு அனுப்பினார். இதையடுத்து, இராணுவ உளவுத்துறையினர் அவர்களது வீட்டில் சோதனை நடத்தி, சேகரிக்கப்பட்ட ஆதாரங்களை பறிமுதல் செய்தனர். மேலும், மோதலுக்குப் பிறகு, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தன்னை மீண்டும் மீண்டும் விசாரணைக்கு அழைத்ததாகவும், சித்திரவதைச் சம்பவங்களுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சியான துன்புறுத்தல் அவரை 2015 இல் நாட்டை விட்டு வெளியேற வழிவகுத்தது. இருப்பினும், இராணுவ புலனாய்வுப் பிரிவினர் அவரது இல்லத்திற்குச் செல்வது நிறுத்தப்படவில்லை மாறாக, கடந்த ஐந்து மாதங்களில் அவை தீவிரமடைந்துள்ளன. இராணுவ உளவுத்துறை அதிகாரிகள் என்று கூறிக் கொள்ளும் நபர்கள் அவரது வீட்டிற்கு சென்று அச்சுறுத்துவதும் உடமைகளை சேதப்படுத்துவதும் தொடர்கின்றது. அத்தகைய அச்சம் மற்றும் நிச்சயமற்ற சூழல் அவரது மகன் இலங்கைக்குத் திரும்புவதைத் தடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே அத்தகைய சம்பவங்கள் அச்சுவேலி, ஆவரங்கால் மற்றும் புத்தூர் பகுதிகளில் தொடர்ந்தும் தலைதூக்கி வருவதாக தெரியவந்துள்ளது.

நாட்டை விட்டு வெளியேறியவர்கள் இலங்கைக்குள்ளேயே பதுங்கியிருப்பதாக தெரிவித்தே குடும்பங்கள் தொடர்ச்சியாக அழுத்தங்களை எதிர்கொள்வதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

பிராந்திய அலுவலகம்
Regional Office

இல. 01, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
No. 01, 3rd Cross Street, Jaffna
Tel No / Fax : 021 - 2222021

திகதி
Date 04/08/2023

முறைப்பாட்டு இல
Complaint No HRC/..../..../2023

This is to inform you that, your complaint dated ......../......../2023 has been registered under the above number and is receiving the attention of the Commission.

தவிசாளரின் கைபொப்பத்தின் கீழ் / issued under the hands of Chairperson

பிராந்திய இணைப்பாளர்
Regional Coordinator

தலைமை அலுவலகம்
Head Office
14, R.A.De Mel Mawatha,
Colombo 04.
Tel:(+94)0112505580,0112505581,0112505582 Fax:(+94) 0112505591

# சிறீலங்கா இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து 33 வருடங்களின் பின் விடுவிக்கப்பட்ட ஞான வைரவர் ஆலயத்தில் கும்பாபிஷேகம்!

அக்டோபர் 26, 2023

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை மேற்கு, மாங்கொல்லை ஞான வைரவர் ஆலய பாலாலைய கும்பாபிஷேகம் இன்றைய தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இன்றைய தினம் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூஜைகள் ஆரம்பமாகி காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையிலான சுப வேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெற்றது.





குறித்த ஆலயமானது கடந்த 33 வருட காலமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலய பகுதிக்குள் இருந்த நிலையில், கடந்த யூன் மாத கால பகுதியில் ஆலய சூழலையும், அதனை அண்டிய சில பிரதேசங்களில் இருந்தும் இராணுவத்தினர் வெளியேறி சென்ற நிலையில் , ஆலய புனரமைப்பு வேலைகளை முன்னெடுக்கும் முகமாக பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

# மேய்ச்சல் நில காணியை விடுவிக்கக்கோரி மன்னாரில் மக்கள் போராட்டம்!

அக்டோபர் 26, 2023

நானாட்டான் – முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் மேய்ச்சல் நில காணியை விடுவிக்கக்கோரி கவனயீர்ப்புப் போராட்டமொன்று மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்று முன்னெடுக்கப்பட்டது.

கட்டுக்கரைக் குளத்திற்குட்பட்ட புல்லறுத்தான் கண்டல் மேச்சல் நில காணியை விடுவிக்குமாறு தெரிவித்தே குறித்த போராட்டம் இடம்பெற்றது.







“ஒவ்வொரு வருடமும் மாந்தை மேற்கு, இலுப்பை கடவை பகுதிக்கு தமது கால்நடைகளை மேய்தலுக்காக கொண்டு செல்கின்றோம். இதன்போது பல்வேறு சொல்லண்ணா துயரங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம்.

அத்துடன் கால்நடை இழப்புக்களும், மனித இழப்புக்களும் அடிக்கடி இடம்பெறுகின்றன.

கட்டுக்கரைக் குளத்திற்குட்பட்ட புல்லறுத்தான் கண்டல் பகுதியை மேச்சல் நிலமாக பிரகடனப்படுத்த வேண்டும் என பல வருடங்களாக கோரிக்கை விடுத்து வந்தோம்.

கடந்த 12 ஆம் திகதி வட மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது வேதனையளிக்கிறது.

இவ்விடயத்தில் அதிகாரிகள் அலட்சியமாகவே நடந்துக்கொள்கின்றமை வெளிப்படையாக புலப்படுகிறது. எமக்கான மேய்ச்சல் நிலங்களை உடனடியாக விடுவித்து தருமாறு கோருகின்றோம்” எனப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், நானாட்டான் – முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், மதத் தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்களால் மகஜர் ஒன்றும் மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரிடம் கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.












# அனைத்துத் தமிழர்களையும் வெட்டுவேன் மட்டு மங்களாராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர்!

அக்டோபர் 25, 2023

மட்டக்களப்பில் கால்நடை மேய்ச்சல் தரை விவகாரம் நாளுக்கு நாள் முனைப்படைந்துவருகின்ற நிலையில் இருதயபுரம் மயான விவகாரம் புதிதாக சூடுபிடித்துள்ளது.

இதனிடையே அனைத்து தமிழர்களையும் வெட்டுவேன், என்ன செய்கிறார்கள் எனப் பார்ப்போம் என்று மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட இருதயபுரம் பகுதிக்கு இன்று (25) மாலை சென்ற அம்பிட்டிய சுமனரத்ன தேரர், தமிழர்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்டோரை கடும் தொனியில் எச்சரித்துள்ளார்.

இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள சிங்கள மக்களது மயானம் கனரக வாகன மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

எனினும் தனது தாயாரின் சமாதி அப்பகுதியில் அமைந்திருப்பதாகவும் அதனை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுமனரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

எனது தாயின் சமாதிக்கு அடுத்ததாக இந்துக்களின் மயானம் உள்ளது. அதனை தாண்டி கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களின் மயானங்கள் உள்ளன.

ஏன் அவற்றை எவரும் கனரக இயந்திரங்களை கொண்டு சுத்தம் செய்யவில்லை? ஏன் சிங்களவர்களின் மயானத்தை மாத்திரம் சுத்தம் செய்கிறீர்கள்? அவ்வாறாக முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் கிழக்கிலுள்ள அனைத்து தமிழர்களையும் சிங்களவர்கள் வெட்டுவார்கள் என தேரர் தெரிவித்துள்ளார்.








# இஸ்ரேலில் உயிரிழந்த கனடியர்களின் எண்ணிக்கை 05 ஆக உயர்வு!

அக்டோபர் 15, 2023

இஸ்ரேலில் உயிரிழந்த கனடிய பிரஜைகளின் எண்ணிக்கை 5 ஆக உயர்வடைந்துள்ளது.

கனடிய வெளி விவகார அமைச்சு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

காசா நிலப்பரப்பில் சிக்கி உள்ள கனடியர்களினால் வெளியேற முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 7ம் திகதி தாக்குதல் நடத்தப்பட்ட போது இஸ்ரேலில் தங்கி இருந்த மூன்று கனடியர்கள் பற்றி இதுவரையில் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நான்கு பேர் உயிரிழந்த விபரங்களை கனடிய வெளிவிகார அமைச்சு வெளியிட்டிருந்தது.

எனினும் தற்பொழுது ஐந்தாவது நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.





குறித்த நபர் தொடர்பான எந்த ஒரு விபரங்களையும் வெளியிடவில்ல.

இஸ்ரேலில் 6800 கனடியர்கள் தங்களை பதிவு செய்து கொண்டுள்ளதாகவும் 450 பேர் மேற்கு கரை மற்றும் காசா பகுதியில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காசா பிராந்தியத்தில் தங்கியுள்ளவர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

# கனடாவின் பண வீக்கம் 3.8 விகிதமாக குறைவடைந்துள்ளதாக தகவல் வெளியிடப்படுள்ளது!

அக்டோபர் 17, 2023

கனடாவின் பண வீக்கம் குறைவடைந்துள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதத்தில் கனடாவின் பண வீக்கம் 3.8 வீதமாக பதிவாகியுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டு இவ்வாறு பணவீக்க வீதத்தில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பணம் வைக்க விகிதம் 4 வீதமாக காணப்பட்டது.

ஓராண்டுக்கு முன்னதாக கனடியர்கள் வீதமான கட்டணங்கள் செலுத்தியதனை விடவும் தற்பொழுது விலை குறைவடைந்துள்ளதாகவும் நீடித்துழைக்கக்கூடிய பாவனை பொருட்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

எவ்வாறு எனினும் கனடாவில் உணவுப் பொருட்கள் குறிப்பாக மளிகை பொருட்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரிப்பினை பதிவு செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வாரம் கனடிய மத்திய வங்கி வட்டி வீதம் தொடர்பில் அறிவிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கனடிய வீட்டு உரிமையாளர்கள் எதிர்நோக்கும் நெருக்கடி!

அக்டோபர் 17, 2023

கனடாவில் வீட்டு உரிமையாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அடகு கடன் அடிப்படையில் வீடுகளை கொள்வனவு செய்துள்ள வீட்டு உரிமையாளர்கள் பல்வேறு நெருக்குதல்களை எதிர் கொண்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அடகு கடன் வட்டி வீத அதிகரிப்பு காரணமாக வீட்டு உரிமையாளர்கள் வீடுகளை விற்பதற்கு முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கூடுதல் அளவில் வட்டி வீதம் காணப்படும் காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தங்களது வீடுகளை விற்பனை விடவும் வேறும் செலவு குறைப்பு நடவடிக்கைகளின் ஊடாக இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.



நுகர்வு செலவுகளை வரையறுப்பதன் மூலம் அடகு கடன் வட்டி கொடுப்பனவுகளை செலுத்தக்கூடிய பின்னணியை உருவாக்கிக் கொள்ள முடியும் என தெரிவித்துள்ளனர்.

பல வீட்டு உரிமையாளர்கள் மாதாந்த அடகு கடன் கொடுப்பனவு செலுத்துகையில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தூதரக அதிகாரிகளை திரும்பப்பெற்ற விவகாரம் கனடாவுக்கு ஆதரவு தெரிவித்த அமெரிக்கா, இங்கிலாந்து!

அக்டோபர் 21, 2023

காலிஸ்தான் பயங்கரவாதி நிஜ்ஜார் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் இந்தியா- கனடா இடையிலான உறவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்திய புலனாய்வு அமைப்பிற்கு நிஜ்ஜார் கொலையில் தொடர்பு இருப்பதாக தெரிவித்த கனடா, உயர் அதிகாரியை அந்நாட்டில் இருந்து வெளியேற்ற உத்தரவிட்டது. இந்தியாவும் பதிலடியாக இந்தியாவில் உள்ள தூதரக அதிகாரிகளை வெளியேற்ற காலக்கெடு விதித்தது. இந்த நிலையில் 41 தூதரக அதிகாரிகளை கனடா திரும்பப் பெற்றுள்ளது.

இதுபோன்று முன்னதாக நடந்தது இல்லை எனத் தெரிவித்த கனடா, சர்வதேச சட்டத்தை இந்தியா மீறியதாகவும் தெரிவித்தது. அதேவேளையில் இந்தியா, கனடாவின் குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

இந்த நிலையில் கனடாவிற்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆனால், இந்தியாவை எந்த வகையிலும் விமர்சிக்கவில்லை. அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் கூறுகையில் “இந்தியாவில் இருந்து கனடா தூதர்கள் வெளியேற்றப்பட்டது எங்களுக்கு கவலை அளிக்கிறது” எனத் தெரிவித்துள்ளார். பிரிட்டன் வெளியுறவுத்துறை அலுவலகத்தின் செய்தி தொடர்பாளர் “இந்திய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட இந்த முடிவை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை” எனத் தெரிவித்துள்ளார். கனடாவின் 41 தூதரக அதிகாரிகள் வெளியேறியுள்ளதால் இந்தியாவின் பல நகரங்களில், கனடா தூதரகம் இயங்காமல் உள்ளது.

இந்த விவகாரத்தை உன்னிப்பாக கவனித்து வரும் வல்லுனர்கள் “இந்தியாவுடனா உறவை அமெரிக்கா, இங்கிலாந்து மோசமடைய விரும்பாது. ஏனென்னால் ஆசிய கண்டனத்தில்



முக்கிய எதிரியாக திகழும் சீனாவிற்கு பதிலடிகொடுக்க இந்தியா அவர்களுக்கு முக்கியமான நாடாக இருக்கும்” எனத் தெரிவித்துள்ளனர்.

# பாலஸ்தீன மக்களுக்கு 50 மில்லியன் டொலர் நிவாரண உதவிகளை அறிவித்த கனடா!

அக்டோபர் 22, 2023

பாலஸ்தீன மக்களுக்கு சுமார் 50 மில்லியன் டொலர் பெறுமதியான நிவாரண உதவிகள் வழங்கப்படும் என கனடிய அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் தரப்புக்களுக்கு இடையில் நிலவி வரும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகள் மேற்கொள்ப்பட்டு வருகின்றன.

அதன் ஓர் கட்டமாக கெய்ரோவில் சமாதான மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த சமாதான மாநாட்டில் கனடாவின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் அஹமட் ஹுசெய்ன் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இந்த இரண்டு அமைச்சர்களும் ஏற்கனவே கெய்ரோவை சென்றடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதாபிமான நிவாரணமாக பாலஸ்தீன மக்களுக்காக மேலும் 50 மில்லியன் டொலர்களை உதவிகள் வழங்கப்படும் என அறவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிகள் ஹமாஸ் தீவிரவாதிகளை சென்றடையாது என்பது உறுதி செய்யப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மருத்துவ வசதிகள், உணவு மற்றும் குடிநீர் உள்ளிட்ட




சிவிலியன்களுக்கு தேவையான அடிப்படை உதவிகள் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒன்ராரியோவின் மாரே சாலட் பகுதியில் துப்பாக்கிச்சூடு 3 பிள்ளைகள் உட்பட 5 பேர் பலி!

அக்டோபர் 24, 2023

ஒன்ராரியோவின் மாரே சால்ட் (Sault Ste. Marie) பகுதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சம்பவத்தில் மூன்று பிள்ளைகள் உள்ளிட்ட ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

குடும்ப பிணக்கு காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு வீடுகளில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் 41 வயதான ஒருவரும், 44 வயதான ஒருவரும், ஆறு, ஏழு மற்றும் பன்னிரெண்டு வயதான சிறுவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தமக்கு தாமே துப்பாக்கிச் சூடு நடத்திக் கொண்டு உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களினால் பொதுமக்களுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் கிடையாது என தெரிவிக்கப்படுகின்றது.




# வட்டி வீதம் தொடர்பில் கனடா மத்திய வங்கி அறிவிப்பு!

அக்டோபர் 25, 2023

கனடாவில் வட்டி வீதம் தொடர்பில் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

வட்டி வீதங்களை தொடர்ந்தும் அதே நிலையில் பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

வட்டி வீதமானது தற்பொழுது 5 வீதமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் எதிர்வரும் நாட்களில் வட்டி வீதம் அதிகரிக்கும் சாத்தியங்கள் உண்டு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட காரணிகளை கருத்திற் கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வட்டி வீத அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் மற்றும் வியாபார நிறுவனங்கள் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் மீண்டும் விசா சேவையை தொடங்கிய இந்தியா!

அக்டோபர் 25, 2023

அண்மைக்காலமாக காலமாக இந்தியாவுக்கும், கனடாவுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

கனடாவில் காலிஸ்தான் போராளி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த யூன் மாதம் சுட்டுக்கொல்லப்பட்டார். இச் சம்பவத்தில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டிருந்தார்.

குறித்த குற்றச்சாட்டை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது. இதைத்தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையே மோதல் அதிகரித்த நிலையில் கனடாவில் உள்ள இந்திய தூதரை வெளியேற ஜஸ்டின் ட்ரூடோ உத்தவிட்டார்.

இதற்கு பதிலடியாக கனடாவில் உள்ள இந்தியர்கள் கவனமாக இருக்கும்படியும், இனவெறி தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதாகவும் இந்தியா எச்சரித்தது.

மேலும், இந்தியாவில் செயல்பட்டு வரும் தங்கள் நாட்டு தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைக்கும்படி கனடாவுக்கு மத்திய அரசு எச்சரித்தது.

இதைத்தொடர்ந்து இந்தியாவில் பணியாற்றி வரும் தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையை கனடா குறைத்தது.

இவ்வாறான நிலையில், கடந்த மாத 21ம் திகதி கனடாவுக்கான விசா சேவையை இந்தியா நிறுத்தியது. கனடாவிலிருந்து இந்தியா வருபவர்களுக்கான விசா சேவையை இந்தியா நிறுத்தியது. கனடாவில் உள்ள இந்திய தூதரகம் விசா வழங்கும் சேவையை நிறுத்தியது.

இந்த நிலையில், கனடாவில் விசா சேவையை இந்தியா மீண்டும் தொடங்கியுள்ளது.

இதன்மூலம் கனடாவில் இருந்து தொழில், மருத்துவம் உள்ளிட்ட காரணங்களுக்காக பயணிகள் இந்தியாவுக்கு வர




முடியும்.

விசா சேவை தொடங்கியுள்ளதால் கனடாவில் இருந்து இந்தியா வரும் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது

# ரொரான்ரோ பகுதியில் களவாடப்பட்ட ஆயிரம் வாகனங்கள் மீட்பு!

அக்டோபர் 26, 2023

ஒன்ராரியோ - ரொரான்ரோ பகுதியில் களவாடப்பட்ட ஆயிரம் வாகனங்களை போலீசார் மீட்டுள்ளனர்.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடையதாக 228 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த வாகனங்களின் சந்தை பெறுமதி சுமார் 60 மில்லியன் டாலர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

ஓராண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் 7ம் திகதி முதல் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக போலீசார் தெரிவிக்கின்றனர்.

இந்த வாகன கொள்ளையுடன் தொடர்புடைய 228 பேருக்கு எதிராக மொத்தமாக 553 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டவர்களில் சிறுவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. களவாடப்பட்ட வாகனங்கள் பெரும்பாலும் அதிக பெருமதியுடையவை என தெரிவிக்கப்படுகிறது.



வீடுகள், ஹோட்டல்கள், விமான நிலைய வாகன தரப்பிடங்கள் மற்றும் கசினோ மையங்கள் போன்ற பல்வேறு இடங்களில் இருந்து வாகனங்கள் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரொரான்ரோ நகரில் மட்டும் 2023 ஆம் ஆண்டில் மொத்தமாக

# கனடாவில் முக்கிய இடங்களில் சொத்துக்களை கொள்வனவு செய்ய முயற்சித்த சீனாவின் திட்டம் முறியடிப்பு!

அக்டோபர் 27, 2023

கனடாவின் முக்கிய இடங்களில் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு சீனா முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவின் முன்னணி புலனாய்வுப் பிரிவு ஒன்றின் பிரதானி டேவிட் விக்னெல்ட் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சீன அரசாங்கம், கனடாவின் முக்கிய இடங்களில் காணி உள்ளிட்ட சொத்துக்களை கொள்வனவு செய்ய முயற்சித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், இவ்வாறு சீனாவில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

உளவுப் பணிகளில் ஈடுபடுவதற்கு பொருத்தமான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் காணி உள்ளிட்ட சொத்துக்கள் கொள்வனவு செய்வதே சீனாவின் நோக்கமாக காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீன அரசாங்கம் கனடிய விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்வதாக ஏற்கனவே பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடிய தேர்தல்களிலும் சீனா தலையீடு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.




# இந்தியாவிடம் இருந்து சுதந்திரம் கோரி கனடாவில் சீக்கியர்கள் வாக்களிப்பு!

அக்டோபர் 30, 2023

இந்தியாவிடம் இருந்து சுதந்திரம் கோரி கனடிய வாழ் சீக்கியர்கள் பொது வாக்கெடுப்பு ஒன்றில் பங்கேற்றுள்ளனர்.

நேற்றைய தினம் இந்த பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது பிரிட்டிஷ் கொலம்பியாவில் வாங்கூவாரில் சர்ரே பகுதியில் இந்த பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் பல்லாயிரக்கணக்கான சீக்கியர்கள் வாக்களித்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட ஹார்திப் சிங் நிஜார் தலைமை தாங்கிய சீக்கிய ஆலயத்தில் இந்த பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு வெளியே நடத்தப்படும் எந்த ஒரு வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்கும் இந்தியா பொறுப்பு அல்ல என ஏற்கனவே அறிவித்துள்ளது.






இதன்படி இந்த பொது வாக்கெடுப்பின் முடிவுகளை இந்தியா கருத்தித்திற் கொள்ளாது என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் கனடாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான முரண்பாட்டு நிலை மேலும் வலுப்பெற இந்த பொது வாக்கெடுப்பு ஓர் ஏதுவாக அமையும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



# கச்சதீவுப் பகுதியில் தமிழக மீனவர்கள் கைது!

## அன்புமணி இராமதாஸ் கண்டனம்

அக்டோபர் 15, 2023

“இராமேஸ்வரம் பகுதியிலிருந்து வங்கக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 15 பேரை சிங்களக் கடற்படையினர் கச்சத்தீவு பகுதியில் கைது செய்திருக்கின்றனர். அவர்களின் இரு விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து சிங்களக் கடற்படையினர் நிகழ்த்தியுள்ள இந்த அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது ஆகும்” என்று பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் “ராமேஸ்வரம் பகுதியிலிருந்து வங்கக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 15 பேரை சிங்களக் கடற்படையினர் கச்சத்தீவு பகுதியில் கைது செய்திருக்கின்றனர். அவர்களின் இரு விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து சிங்களக் கடற்படையினர் நிகழ்த்தியுள்ள இந்த அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

வங்கக்கடலில் தமிழக மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கக் கூடாது என்ற நயவஞ்சக எண்ணத்துடன் தான் சிங்களக் கடற்படையினர் இத்தகைய கைது நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். ஒருபுறம் தமிழக மீனவர்கள் மீது கடல் கொள்ளையர்களைக் கொண்டு தாக்குதல் நடத்துதல் இன்னொருபுறம் மீனவர்களை கைது செய்து அவர்களின் படகுகளை பறிமுதல் செய்தல் என இருமுனைத் தாக்குதலை இலங்கை நடத்தி வருகிறது. இதனால் தமிழக மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இலங்கை அரசுக்கு இந்தியா தான் உதவிகளை வழங்கி வருகிறது. இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன் நாகை - காங்கேசன் துறைமுகம் இடையே கப்பல் போக்குவரத்தையும் இந்தியா தொடங்கியுள்ளது. ஆனால் இந்தியாவின் நல்லெண்ண நடவடிக்கைகளை புரிந்து கொள்ளாத இலங்கை அரசு மீனவர்களை தாக்கியும் கைது செய்தும் இந்தியாவின் இறையாண்மைக்கு சவால் விடுத்து வருகிறது. சிங்களக் கடற்படையினரின் அத்துமீறலுக்கு முடிவு கட்ட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



தமிழக மீனவர்களின் பாரம்பரியமான மீன்பிடி பகுதிகளில் தடையின்றி மீன் பிடிப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலையும், கைது நடவடிக்கைகளையும் கைவிடும்படி இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும். கைது செய்யப்பட்டுள்ள 15 மீனவர்களையும், இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து படகுகளையும் விடுவிப்பதற்கும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று அவர் பதிவிட்டுள்ளார்.

# ஐந்து நாட்களுக்குப்பின் கடலுக்கு சென்ற இராமேசுவரம் மீனவர்கள்!

அகடோபர் 21, 2023

இராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தில் 750-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் உள்ளது. இதன் மூலம் 3,500 மீனவர்கள் மற்றும் மீன்பிடி தொழிலை சார்ந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். இராமேசுவரத்தில் பெரும்பாலானோர் மீன்பிடி தொழிலை நம்பியே உள்ளனர்.

இந்த நிலையில், கடந்த 14-ந்தேதி இராமேசுவரம் மீனவர்கள் மீன்பிடிக்க சென்ற போது கச்சத்தீவு அருகே எல்லை தாண்டி வந்ததாக கூறி 5 விசைப் படகுகளுடன் 27 மீனவர்களை சிங்களக் கடற்படையினர் சிறை பிடித்து சென்றனர். படகுகள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் மீனவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிங்களக் கடற்படையினரின் இந்த நடவடிக்கையை கண்டித்தும், மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் கடந்த 16-ந்தேதி முதல் இராமேசுவரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கினர். இந்த போராட்டத்தில் பெரிய மற்றும் சிறிய ரக படகுகள் பங்கேற்றன. இதே கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வேலைநிறுத்தம் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலையிழந்தனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. பல கோடி ரூபாய் வர்த்தகமும் பாதித்தது. இந்த நிலையில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு சிறிய ரக படகுகள் வேலைநிறுத்த போராட்டத்தை வாபஸ் பெற்று இன்று கடலுக்கு மீன்பிடிக்க செல்லுவதாக மீனவ சங்க தலைவர் என்.ஜே.போஸ் தெரிவித்தார். மேலும் பெரிய படகுகள் போராட்டம் தொடருவதாக தெரிவித்தார்.



இதனைதொடர்ந்து, 5 நாள் போராட்டத்திற்கு பின் சிறிய ரக படகுகள் மீன் பிடிக்க செல்ல மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையிடம் அனுமதி பெற்று இன்று கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இதனால் கடந்த 5 நாட்களாக வெறிச்சோடி கிடந்த இராமேசுரவம் துறைமுகம் இன்று மீண்டும் பரபரப்புடன் காணப்பட்டது.

# தகுதித் தேர்வு அடிப்படையில் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்திடுக!

## பாமக நிறுவனர் இராமதாஸ்

அக்டோபர் 24, 2023

“இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணிக்கு போட்டித் தேர்வை கட்டாயமாக்கும் அரசாணை எண் 149ஐ தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும். அதற்குப் பதிலாக தகுதித் தேர்வு அடிப்படையில் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று பாமக நிறுவனர் இராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் அரசுப் பள்ளி ஆசிரியர் பணிக்கான அதிகபட்ச வயது வரம்பை பொதுப்பிரிவினருக்கு 40-லிருந்து 53 ஆகவும், இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு 45-லிருந்து 58 ஆகவும் உயர்த்தி தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. தகுதித் தேர்வில் வெற்றி பெற்று ஆசிரியர் பணிக்காக காத்திருக்கும் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரிகளின் கோரிக்கையை ஏற்று இந்த நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில் இது மட்டுமே போதுமானது அல்ல.

தமிழகத்தில் ஆசிரியர் பணிக்கான தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்கள், தங்களுக்கு போட்டித் தேர்வு நடத்தாமல் நேரடியாக ஆசிரியராக நியமிக்க வேண்டும் ஆசிரியர் பணிக்கான வயது வரம்பை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த செப்டம்பர் 27-ம் தேதி முதல் சென்னையில் தொடர் போராட்டங்களை நடத்தினார்கள். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் வயது வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. ஆனாலும், அவர்களின் முதன்மை கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இடைநிலை, பட்டதாரி ஆசிரியர் பணிக்கு இரு தேர்வுகள் கூடாது; ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்களை, போட்டித்தேர்வு நடத்தாமல், நேரடியாக பணியமர்த்த வேண்டும் என்பது தான் அவர்களின் முதன்மைக் கோரிக்கை ஆகும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதில் தமிழக அரசுக்கு எந்த சிக்கலும் இல்லை. ஒரே ஓர் அரசாணை பிறப்பிப்பதன் மூலம் இந்தக் கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்றலாம். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதால் தமிழக அரசுக்கு நிதி சார்ந்த செலவுகள் எதுவும் ஏற்படப்போவதில்லை. ஆனாலும் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு தயங்குவது ஏன்? எனத் தெரியவில்லை.

2012-ம் ஆண்டு நடத்தப்பட்ட தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு அதன் தரவரிசை அடிப்படையில் ஆசிரியர் பணி வழங்கப்பட்டது. அப்போது போட்டித் தேர்வு எதுவும் நடத்தப்படவில்லை. ஆனால், 2018-ம் ஆண்டு ஜூலை 20-ம் நாள் பிறப்பிக்கப்பட்ட 149 என்ற எண் கொண்ட அரசாணை மூலம் போட்டித் தேர்வை அப்போதைய அரசு திணித்தது. அதற்கு பாமகவுடன் இணைந்து எதிர்ப்பு தெரிவித்த அப்போதைய எதிர்கட்சித் தலைவர் ஸ்டாலின், திமுக ஆட்சிக்கு வந்தால் போட்டித் தேர்வை ரத்து செய்வோம் என்று சூளுரைத்திருந்தார். திமுகவின் தேர்தல் அறிக்கையிலும் இது குறித்து வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், திமுக அரசு பொறுப்பேற்று 30 மாதங்களுக்கு மேலாகியும் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.



தமிழகம் முழுவதும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற 60 ஆயிரத்துக்கும் கூடுதலானவர்களுக்கு அதிகபட்சமாக 10 ஆண்டுகளாக வேலை வழங்கப்படவில்லை. அவர்கள் போட்டித் தேர்வு எழுதிதான் பணியில் சேர வேண்டும் என்றால், அதற்கான பயிற்சியைப் பெற அவர்கள் பல லட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டும். அந்த வகையில் பணம் படைத்த, நகர்ப்புற மாணவர்களுக்கு மட்டுமே ஆசிரியர் பணி கிடைப்பதற்கு போட்டித் தேர்வு வகை செய்கிறது. எனவே, இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணிக்கு போட்டித் தேர்வை கட்டாயமாக்கும் அரசாணை எண் 149ஐ தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும். அதற்கு பதிலாக தகுதித் தேர்வு அடிப்படையில் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று அவர் கூறியுள்ளார்.

# அரியலூர் மாவட்டத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, அங்கு எண்ணெய் கிணறு அமைக்கும் முயற்சியை தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்த வேண்டும்!

### நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான்

அக்டோபர் 22, 2023

இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிகாற்று கழகம் (ONGC - Oil and Natural Gas Corporation) அரியலூர் மாவட்டத்தில் 10 இடங்களில் எண்ணெய் கிணறு தோண்டுவதற்காக கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த இந்திய ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதியளித்துள்ளது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

ஏற்கனவே அரியலூர் பகுதிகளில் இயங்கிவரும் பைஞ்சுதை (சிமெண்ட்) தொழிற்சாலைகள் தங்களின் தேவைக்காக தோண்டி எடுக்கும் சுண்ணாம்புச் சுரங்கங்களால் குற்றுயிராக காட்சியளிக்கும் அரியலூர் மாவட்டத்தினை முற்றாக அழித்தொழிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள புதிய எண்ணெய் கிணறுகள் அமைக்கும் அறிவிப்பு வன்மையானக் கண்டனத்துக்குரியது.



வேளாண் பெருங்குடி மக்களின் நெடுநாள் கோரிக்கையை ஏற்று முந்தைய அதிமுக அரசு தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, கரூர், அரியலூர், கடலூர் புதுக்கோட்டை உள்ளிட்ட 8 மாவட்டங்களை உள்ளடக்கிய காவிரி சமவெளிப் பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அன்றைய அதிமுக அரசு அறிவித்ததையடுத்து, மீத்தேன், ஹைட்ரோ கார்பன், கெயில் எரிவாயு உள்ளிட்ட திட்டங்களால் அச்சமடைந்திருந்த விவசாயப் பெருங்குடி மக்கள் நிம்மதியடைந்தனர். ஆனால், அதிமுக அரசால் சட்டமன்றத்தில் சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்பட்டபோது முந்தைய அறிவிப்புக்கு மாறாக திருச்சி, கரூர், அரியலூர், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்கள் விடுபட்டிருந்தது பெருத்த ஏமாற்றத்தைத் தந்தது. மேலும், அந்தச் சட்டத்தின் 4(2)(ய) பிரிவானது, அச்சட்டம் செயற்பாட்டுக்கு வரும்முன் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் தொடங்கப்பட்ட திட்டங்கள் தொடரும் என்று கூறப்பட்டிருந்தது விவசாயிகள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதைச் சுட்டிக் காட்டி அரசின் முடிவை நாம் தமிழர் கட்சி அப்போதே கடுமையாக எதிர்த்தது குறிப்பிடத்தக்கது.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்கள் விடுபட்டதை வாய்ப்பாக பயன்படுத்தி தற்போது 10 இடங்களில் புதிதாக எண்ணெய் கிணறுகள் அமைக்க ஓ.என்.ஜி.சி நிறுவனம் முனைவது வேளாண் பெருமக்களிடம் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் 1984-ம் ஆண்டிலிருந்து ஓ.என்.ஜி.சி நிறுவனம் இயற்கை எரிகாற்று மற்றும் எண்ணெய்க் கிணறுகளை அமைத்து வரும் நிலையில், தற்போதுவரை மொத்தமாக 768 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் 187 கிணறுகள் (திருவாரூரில் 78, நாகையில் 57, தஞ்சையில் 12, கடலூரில் 04, அரியலூரில் 01, இராமநாதபுரத்தில் 35) என மொத்தமாக 187 கிணறுகள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. 2019-ம் ஆண்டில் மட்டும் தமிழகம், புதுவையில் வேதாந்த நிறுவனம் 274 கிணறுகளும், ஓ.என்.ஜி.சி 215 கிணறுகளும் என மொத்தமாக 489 எண்ணெய் கிணறுகள் அமைப்பதற்காக ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

அரசு அறிவித்துள்ள கொள்கையின்படி, ஏற்கனவே மூடப்பட்ட கிணறுகள் மற்றும் தற்போது செயல்பட்டுக்கொண்டிருக்கும் கிணறுகள் உட்பட அனைத்துக்கிணறுகளும் ஹைட்ரோ கார்பன் கிணறுகள்தான். இப்போது எண்ணெய்க்கிணறுகளாக இருக்கும் கிணறுகளில்கூட, நாளை நீரியல் விரிசல் (Hydraulic fracking) முறைப்படி மீத்தேன், ஹைட்ரோ கார்பன் உள்ளிட்டவற்றை எடுத்துக்கொள்ள முடியும். இந்தப் புதிய கிணறுகளுடன் சேர்த்து ஏற்கனவே இருக்கும் 768 கிணறுகளையும் தடையின்றிச் செயல்பட அனுமதிப்பதுதான் அரசின் திட்டமென்றால் ‘பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்’ என்ற முந்தைய அதிமுக அரசின் பேரறிவிப்பு வெற்று கண்துடைப்பாகிவிடும்.

மேலும், நிலமும், வேளாண்மையும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், எரி எண்ணெய், ஹைட்ரோ கார்பன் போன்ற கனிமங்கள் இந்திய ஒன்றிய அரசின் கீழ் வருவதால் 2019-ம் ஆண்டு ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், எண்ணெய் கிணறு போன்ற திட்டங்களுக்கு வழங்கப்படும் சுற்றுச்சூழல் அனுமதியே போதுமென்றும், மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியம் அனுமதியைத் தனியாகப்பெறத் தேவையில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எண்ணெய் கிணறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாநில அரசின் அனுமதியே தேவையில்லை என்றாகிவிடுகிறது. அதனடிப்படையிலேயே தற்போது அரியலூர் மாவட்டத்தில் புதிதாக 10 இடங்களில் எண்ணெய் கிணறுகள் அமைக்கப்பதற்கான கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதியளித்துள்ளது.



ஆகவே, அரியலூர் மாவட்டத்தை முற்று முழுதாக அழித்தொழிக்கும் கொடுந்திட்டமான புதிய எண்ணெய் கிணறுகள் அமைக்கும் திட்டத்தினை தடுத்து நிறுத்த, உடனடியாக அரியலூர் மாவட்டத்தினை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக தமிழ்நாடு அரசு அறிவிக்க வேண்டும். மேலும், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டத்தை நீர்த்துபோகச் செய்யும் பாதகமான சட்ட உட்பிரிவுகளை உடனடியாக நீக்குவதோடு, கெயில், சாகர் மாலா, ஹைட்ரோ கார்பன், எண்ணெய் கிணறு என்று வெவ்வேறு பெயர்களில் வேளாண் நிலங்கள், நீர் நிலைகள், நிலத்தடிநீர் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதிக்கும் வகையிலான எந்தவொரு திட்டத்தையும் புதிதாக தொடங்கவோ அல்லது ஏற்கனவே கைவிடப்பட்ட திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவோ தமிழ்நாடு அரசு அனுமதிக்கக் கூடாது.

அதோடு, மாநில அரசுகளின் தன்னாட்சி உரிமையைப் பாதிக்கக் கூடிய இந்திய ஒன்றிய அரசின் முடிவுகளுக்கு எதிராக வெறுமனே கடிதம் மட்டும் எழுதாமல், பாராளுமன்றத்தில் தங்களுக்குள்ள எண்ணிக்கைப் பலத்தை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தி திமுக அரசு உறுதியான அரசியல் மற்றும் சட்டப் போராட்டத்தை மேற்கொண்டு அவற்றைத் திரும்பப்பெறச் செய்து பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்கான நோக்கத்தை முழுமைப்படுத்தி தமிழ்நாட்டு விவசாயிகளையும், விவசாயத்தையும் காத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அரியலூர் மட்டுமின்றி தமிழ்நாட்டின் எந்தவொரு பகுதியிலும் மக்களையும், மண்ணையும் பாதிக்கக்கூடிய எண்ணெய் கிணறு உள்ளிட்ட எந்தவொரு திட்டத்தையும் இந்திய ஒன்றிய அரசு செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஒருபோதும் துணைப்போகக் கூடாதென்றும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்

# தஞ்சை பெரிய கோயிலில் கோலாகலமாக நடைபெற்ற இராஜராஜ சோழனின் 1038வது சதய விழா!

அக்டோபர் 24, 2023

உலக புகழ் பெற்ற தஞ்சாவூர் பெரியகோயிலை கட்டிய மாமன்னன் இராஜராஜசோழன், முடி சூட்டிய நாளை அவன் பிறந்த நட்சத்திரமான ஐப்பசி சதய நாளன்று, ஒவ்வொரு ஆண்டும் சதய விழாவாக கொண்டாடப்படுவது வழக்கம். அதன்படி இந்தாண்டு இராஜராஜ சோழனின் 1038 வது சதய விழா நேற்று, (24 ஆம் தேதி), காலை மங்கல இசையுடன் துவங்கியது.

தொடர்ந்து திருமுறை பாடல்கள், கருத்தரங்கம், 1038 பரத நாட்டிய கலைஞர்கள் பங்கேற்ற நடன நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றன. தொடர்ந்து சதய விழாவான இன்று (25ம் தேதி) இராஜராஜ சோழன் மீட்டெடுத்த பன்னிரு திருமுறைகளுக்கு சிறப்பு தீபாரதனை காண்பிக்கப்பட்டு, ஓதுவார்கள் பன்னிரு திருமுறைப் பாடல்களை பாடி ஊர்வலமாக, யானை மீது எடுத்துச் சென்றனர்.





இதற்கிடையில் பெரிய கோயில் வெளியே உள்ள இராஜராஜ சோழன் சிலைக்கு அரசு சார்பில், மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப் மாலை அணிவித்தார். இதில், சதய விழா குழு தலைவர் செல்வம், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே மற்றும் பல்வேறு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இராஜராஜ சோழன் சிலைக்கு பல்வேறு அமைப்பினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சதய விழாவை முன்னிட்டு, பெருவுடையார் மற்றும் பெரியநாயகி அம்மனுக்கு 48 வகையான மங்கள பொருட்களைக் கொண்டு பேரபிஷேகம் நடைபெறுகிறது. தொடர்ந்து மாலை தேவார இன்னிசை, நாட்டியாஞ்சலி, மேடை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

# தமிழக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு
# தமிழ்நாட்டில் 6.11 கோடி வாக்காளர்கள்

அக்டோபர் 28, 2023

தமிழக வரைவு வாக்காளர் பட்டியலை மாநில தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ வெளியிட்டுள்ளார். அதன்படி, தமிழகத்தில் மொத்தம் 6.11 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்களைவிட, பெண் வாக்காளர்கள் 9.85 இலட்சம் பேர் அதிகம் உள்ளனர்.



**வயது வாரியாக வாக்காளர்கள் விபரம்**

| வயது | ஆண்கள் | பெண்கள் | மூன்றாம் பாலினத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 18 – 19 | 2,18,953 | 1,75,860 | 96 | 3,94,909 |
| 20 – 29 | 54,28,230 | 50,85,158 | 2,635 | 1,05,16,023 |
| 30 – 39 | 61,48,526 | 66,51,697 | 2,696 | 1,28,02,919 |
| 40 – 49 | 67,92248 | 69,69,841 | 1,399 | 1,37,63,488 |
| 50 – 59 | 53,59,611 | 56,84,856 | 704 | 1,10,45,171 |
| 60 – 69 | 35,07,648 | 36,78,158 | 318 | 71,86,124 |
| 70 – 79 | 18,83,527 | 20,28,492 | 133 | 39,12,152 |
| 80 – 89 | 6,19,282 | 6,62,361 | 27 | 12,81,670 |
| 90 – 99 | 1,02,610 | 1,09,819 | 6 | 2,12,435 |
| 100 – 109 | 7,716 | 8,071 | 1 | 15,788 |
| 110 – 119 | 193 | 187 | 1 | 381 |
| 120க்கு மேல் | 66 | 71 | | 137 |
| **மொத்தம்** | **3,00,68,610** | **3,10,54,571** | **8,016** | **6,11,31,197** |

இந்திய தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி, 2024 ஜன.1-ம் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி தமிழகத்தில் நேற்று தொடங்கியது. இதையொட்டி, சென்னை தலைமைச் செயலகத்தில் மாநில வரைவு வாக்காளர் பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ நேற்று வெளியிட்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தற்போது வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலின் படி, தமிழகத்தில் 3 கோடியே 68 ஆயிரத்து 610 ஆண்கள், 3 கோடியே 10 இலட்சத்து 54 ஆயிரத்து 571 பெண்கள், 8,016 மூன்றாம் பாலினத்தினர் என மொத்தம் 6 கோடியே 11 இலட்சத்து 31 ஆயிரத்து 197 வாக்காளர்கள் உள்ளனர். கடந்த 2023 ஜனவரியில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் 6 கோடியே 20 இலட்சம் வாக்காளர்கள் இருந்தனர். உயிரிழந்தவர்களின் பெயர், இரட்டை பதிவுகள் ஆகியவை கண்டறிந்து நீக்கப்பட்டதில், தற்போது 9 இலட்சம் வாக்காளர்கள் குறைந்துள்ளனர்.

அதிகபட்சமாக செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதியில் 6 இலட்சத்து 52 ஆயிரத்து 65 வாக்காளர்களும், குறைந்தபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் தொகுதியில் 1 இலட்சத்து 69 ஆயிரத்து 30 வாக்காளர்களும் உள்ளனர். 18-19 வயதில் 3 இலட்சத்து 94 ஆயிரத்து 909 பேர் உள்ளனர். அதிகபட்சமாக 40-49 வயதினர் 1 கோடியே 37 இலட்சம் பேர் உள்ளனர். வாக்காளர் அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க இதுவரை 4 கோடியே 23 இலட்சம் பேரின் ஆதார் எண்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 2021 சட்டப்பேரவை தேர்தலின்போது, கரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக 89 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. தற்போது 68 ஆயிரத்து 154 வாக்குச்சாவடிகள் உள்ளன. கடந்த 2019 மக்களவை தேர்தலின்போது 68 ஆயிரத்து 36 வாக்குச்சாவடிகள் இருந்தன.

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிக்கான சிறப்பு முகாம்கள் வரும் நவ.4, 5 மற்றும் 18, 19-ம் தேதிகளில் (சனி, ஞாயிறு) நடைபெற உள்ளன. 17 வயது முடிந்தவர்களும் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம். அவர்களுக்கு எந்த காலாண்டில் 18 வயது நிறைவடைகிறதோ, அப்போது அவர்களது பெயர், வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும், திருத்தவும் 'ஓட்டர் ஹெல்ப்லைன் (Voter Helpline) செயலி மூலமாகவும், https://voters.eci.gov.in என்ற இணையதளம் மூலமாகவும் வரும் டிச.9-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# நிலவில் சர்வதேச விண்வெளி நிலையம் அமைக்க வேண்டியது அவசியம்!
## 'சந்திரயான்-3' திட்ட இயக்குநர் வீரமுத்துவேல்

அக்டோபர் 30, 2023





கோவையில் நேற்று தனியார் பள்ளி மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடிய வீரமுத்துவேல், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: 'சந்திரயான் 3' திட்டத்தின் ஆயுட்காலம் நிறைவடைந்துவிட்டது. சூரியஒளி ஆற்றலைக் கொண்டு மட்டுமே செயல்படும் என்பதால், 14 நாட்களுக்கு மட்டுமே செயல்படும் வகையில் விண்கலம் வடிவமைக்கப்பட்டது.

வரும் ஆண்டுகளில் கடும் குளிர் நிலவும் சூழலிலும், உள்ளே இருக்கும் இயந்திரங்களை கதகதப்பாக வைத்துக்கொள்ளும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

'சந்திரயான்-3' திட்டம் நாட்டின் சாதனையாக மாறியுள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சிநிறுவனம், அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா' மற்றும்பல்வேறு நாடுகளின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வாய்ப்பு உள்ளது.

நிலவில் சர்வதேச விண்வெளி நிலையம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அதைக் கருத்தில் கொண்டுதான் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் முயற்சியை மேற்கொண்டுள்ளோம். இதற்காக, தொடர்ந்து பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். நிலவின் தென்துருவம் அருகே தரையிறங்கியப் பெருமையை இந்தியா அடைந்துள்ளது.

சந்திரயான்-3 லேண்டர் தரையிறங்கிய பகுதி அருகேதான், ரஷ்யாவின் விண்கலமும் தரையிறங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. துரதிஷ்டவசமாக அவர்களின் திட்டம் தோல்வியடைந்துவிட்டது. தென்துருவத்தில் விண்கலத்தை தரையிறக்குவது எளிதல்ல. தொழில்நுட்ப ரீதியாக பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இவற்றையெல்லாம் சமாளித்து, தென்துருவத்துக்கு அருகே லேண்டரை தரையிறக்கினோம். இதுவரை எந்த நாடும் இந்த சாதனையைப் புரியவில்லை.

வரும் ஆண்டுகளில், நிலவில்இருந்து மாதிரிகளை எடுத்து வருதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சந்திரயான்-3 திட்டத்தில் பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன. வெப்ப நிலை உள்ளிட்டவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நிலவில் சல்பர் அதிகம் உள்ளது என்பன உள்ளிட்ட தகவல்கள் கிடைத்துள்ளன.

தற்போது இஸ்ரோவில் 20 திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அனைத்து மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இஸ்ரோவில் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகிறோம். இவ்வாறு வீரமுத்துவேல் கூறினார்.

# உலக செய்திகள்

# காஸாவில் 08 பத்திரிகையாளர்கள் படுகொலை!

அகடோபர் 15, 2023

காஸாவில் கடந்த 7 நாட்களில் மட்டும், சட்டவிரோத இஸ்ரேல் முஸ்லிம் ஊடகவியலாளர்களை குறிவைத்து நேரடித் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளது. இதில் 8 பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 2 ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர்.






# காசா மருத்துவமனை மீது தாக்குதல் 500 பேர் உயிரிழப்பு...!

அக்டோபர் 17, 2023

மருத்துவமனை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 500 பேர் உயிரிழந்த சம்பவம் மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே 12 நாட்களாகப் போர் நடைபெற்று வரும் நிலையில், நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. கடந்த 7 ஆம் தேதி காசாவில் இருந்து ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் அதிதீவிரமான தாக்குதலை நடத்தி வருகிறது. இப்படியாக இரு தரப்பிலிருந்து ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.









இந்நிலையில் பாலஸ்தீனத்தின் காசா நகரில் அமைந்துள்ள அல் அஹ்லி மருத்துவமனையில் நேற்று இரவு மேற்கொள்ளப்பட்ட ஏவுகணை தாக்குதலில் சுமார் 500 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தாக்குதலை காசா சுகாதாரத்துறை அமைச்சகமும் உறுதி செய்துள்ளது. அதே சமயம் இந்த தாக்குதலுக்கு ஹாமாஸ் அமைப்பு மற்றும் இஸ்ரேல் இராணுவம் ஒருவரை ஒருவர் மாறி மாறி குற்றம் சாட்டி வருகின்றனர். இந்த தாக்குதல் சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், அதிர்வலையையும் ஏற்படுத்தியுள்ளது. தாக்குதல் நடத்தப்பட்ட இந்த மருத்துவமனையில் கடந்த ஒரு வார காலமாக காசா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், முதியோர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் சிகிச்சை பெற்று வந்து குறிப்பிடத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# பயனர்களிடம் ஆண்டு சந்தா கட்டணம் வசூலிக்க முடிவு செய்துள்ள X நிறுவனம்!

அக்டோபர் 19, 2023

எக்ஸ் எனப்படும் டுவிட்டர் தனது பயனர்களிடம் ஆண்டு சந்தா கட்டணத்தை வசூலிக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எலான் மஸ்க் டுவிட்டர் நிறுவனத்தை வாங்கியதில் இருந்து அதிரடி மாற்றங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். டுவிட்டர் லோகோவை நீல பறவையில் இருந்து X ஆக மாற்றினார்.

எக்ஸ் நிறுவனம் தற்போது வருவாயை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக, பயனர்களிடம் ஆண்டு சந்தா கட்டணம் வசூலிக்க முடிவு செய்துள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், பயனர்களிடம் சந்தா வசூலிக்கும் நடைமுறையை பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்த உள்ளதாகவும், அடிப்படை அம்சங்களுக்கு ஒரு டொலர் (இந்திய மதிப்பில் ரூ.83) ஆண்டு கட்டணம் வசூலிக்க உள்ளதாகவும் கூறியிருக்கிறது.

“நாட் எ பாட்” என அழைக்கப்படும் புதிய சந்தா திட்டத்தின் கீழ், வலைத்தள பதிப்பில் லைக்குகள், மறுபதிவுகள் அல்லது பிற கணக்குகளின் இடுகைகள் மற்றும் புக்மார்க்கிங் இடுகைகளுக்கு பயனர்களிடம் கட்டணம் வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சந்தா கட்டணம் நாட்டிற்கு நாடு மாறுபடும். முதலில் நியூசிலாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த சோதனை முயற்சியில், ஏற்கனவே உள்ள பயனர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். ஆனால் சந்தா செலுத்து



வதற்கு சப்ஸ்கிரைப் செய்ய விரும்பாத புதிய பயனர்கள், போஸ்ட்களை பார்க்கவும் படிக்கவும், காணொளிகளை 22பார்க்கவும் மற்றும் கணக்குகளை பின்தொடரவும் மட்டுமே முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச சட்டத்தை மீறியதாக இஸ்ரேல் மீது சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு!

அகடோபர் 21, 2023

சர்வதேச சட்டத்தை மீறியதாக இஸ்ரேல் மீது சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது. இஸ்ரேல் பொதுமக்கள் தாங்கி காஸாவில் உள்ள முழு குடும்பங்களையும் அழித்ததாக சர்வதேச மன்னிப்புச் சபை ஒரு அறிக்கையை வெளியிட்டது.

இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையில்:

இஸ்ரேலியப் படைகள் ஆக்கிரமிக்கப்பட்ட காசா பகுதியில் தங்கள் பேரழிவுத் தாக்குதலைத் தொடர்ந்து தீவிரப்படுத்தி வரும் நிலையில், அம்னஸ்டி இன்டர்நேஷனல் சட்டவிரோத இஸ்ரேலிய தாக்குதல்களை ஆவணப்படுத்தியுள்ளது.

கண்மூடித்தனமான தாக்குதல்கள் உட்பட, இது பாரிய பொதுமக்கள் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது மற்றும் போர்க்குற்றங்களாக விசாரிக்கப்பட வேண்டும்.

இந்த அமைப்பு உயிர் பிழைத்தவர்கள் மற்றும் நேரில் கண்ட சாட்சிகளுடன் பேசியது.

செயற்கைக்கோள் படங்களை பகுப்பாய்வு செய்தது மற்றும் அக்டோபர் 7 மற்றும் 12 க்கு இடையில் இஸ்ரேலியப் படைகளால் நடத்தப்பட்ட விமான குண்டு தாக்குதல்கள் விசாரிக்க புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சரிபார்க்கப்பட்டது. இது பயங்கரமான அழிவை ஏற்படுத்தியது மற்றும் சில சந்தர்ப்பங்களில் முழு குடும்பங்களையும் அழித்தது.

இந்த அமைப்பு சட்டவிரோதமான ஐந்து தாக்குதல்களில் அதன் கண்டுபிடிப்புகளின் ஆழமான பகுப்பாய்வை இங்கே முன்வைக்கிறது. இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இஸ்ரேலிய தாக்குதல்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறியது.

பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கு சாத்தியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது. அல்லது பொதுமக்கள் மற்றும் இராணுவ நோக்கங்களை வேறுபடுத்தி அறியத் தவறிய கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்துவது. அல்லது வழிநடத்தப்பட்ட தாக்குதல்களை நடத்தியது.

ஹமாஸை அழிக்க அனைத்து வழிகளையும் பயன்படுத்த வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ள நோக்கத்தில், இஸ்ரேலியப் படைகள் பொதுமக்களின் உயிர்களை அதிர்ச்சியூட்டும் அலட்சியத்தைக் காட்டியுள்ளன.

அவர்கள் குடியிருப்பு கட்டிடங்களை வீதிக்கு வீதியாக தூளாக்கி




பொதுமக்களை பெருமளவில் கொன்றுவிட்டு அத்தியாவசிய உள்கட்டமைப்பை அழித்துள்ளனர்.

காஸாவில் தண்ணீர், மருந்து, எரிபொருள் மற்றும் மின்சாரம் இல்லாமல் வேகமாக இயங்குகிறது. நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் சாட்சியங்கள், இஸ்ரேலிய தாக்குதல்கள் பாலஸ்தீனிய குடும்பங்களை எவ்வாறு அழித்தது என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டுகின்றன என்று தனது நீண்ட அறிக்கையில் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

# காசாவில் ‘மனிதாபிமான போர் நிறுத்தம்’ என்ற தீர்மானத்தின் மீது ஐ.நா. பொதுச் சபையில் வாக்கெடுப்பு!

அக்டோபர் 29, 2023

காசாவில் ‘மனிதாபிமான போர் நிறுத்தம்’ என்ற தீர்மானத்தின் மீது கடந்த வெள்ளிக்கிழமை ஐநா பொதுச் சபையில் வாக்களிப்பதன் மூலம் நாடுகள் இத்தீர்மானம் குறித்து தெரிவிப்பதனை அறிந்துக்கொள்ள வாக்களிப்பு இடம்பெற்றது.

இதன்போது 120 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன, 14 நாடுகள் எதிராக வாக்களித்தன 45 நாடுகள் வாக்களிக்கவில்லை . பல மேற்கத்திய நாடுகள் இஸ்ரேலை பகிரங்கமாக ஆதரிக்கின்றன.

குறித்த தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா வாக்களித்தது, கனடாவும் இங்கிலாந்தும் வாக்களிக்கவில்லை. ஐரோப்பிய ஒன்றியம் (ஒரு கூட்டாக வாக்களிக்க முடியாது) இஸ்ரேலுக்கு ஆதரவை தெரிவித்தது, ஆனால் அதன் உறுப்பினர்கள் பிளவுபட்டுள்ளனர்.

இஸ்ரேலின் தற்காப்பு உரிமையை ஆதரிக்கும் ஜெர்மனியும் இத்தாலியும் வாக்களிக்கவில்லை. ஸ்பெயின் போன்ற மற்றவர்கள் ஐரோப்பிய தலைவர்களை “இனப்படுகொலைக்கு எங்களை உடந்தையாக ஆக்க வேண்டாம்” என்று வலியுறுத்தியுள்ளனர்.

சமீபத்தில் ஹமாஸ் மீது தாக்குதல் நடத்திய ரஷ்யா, இஸ்ரேலுடன் நல்லுறவைக் கடைப்பிடித்தது, போர் நிறுத்தத்திற்கு வாக்களித்தது. பெரும்பாலான மத்திய கிழக்கு நாடுகள் ஆதரவாக வாக்களித்தன, மேலும் பலர் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையை கடுமையாக கண்டித்துள்ளனர்.

ஈராக் மற்றும் துனிசியா ஆகிய இரண்டும் வாக்களிக்கவில்லை. தென் அமெரிக்காவின் பெரும்பாலான நாடுகளும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

கொலம்பியா இஸ்ரேலுடனான உறவுகளை முறித்துக் கொள்வதாக அச்சுறுத்தியுள்ளது, அதே நேரத்தில் பிரேசில் காசா மீது இஸ்ரேலின் குண்டுவீச்சுக்கு எதிராக கடுமையான அறிக்கைகளை வெளியிட்டது. வெள்ளிக்கிழமை தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்த ஒரே தென் அமெரிக்க நாடு பராகுவே.

மத்திய கிழக்கில் தன்னை ஒரு சமாதானத் தரகராக நிலை



நிறுத்திக் கொள்ள முயற்சிக்கும் சீனா உட்பட ஏறக்குறைய அனைத்து ஆசியாவும் போர் நிறுத்தத்திற்கு வாக்களித்தன. இஸ்ரேலுடனான உறவுகளை அரசாங்கம் வலுப்படுத்துகிறது என்ற ஊகங்களுக்கு மத்தியில் இந்தியா வாக்களிக்கவில்லை.

# இஸ்ரவேல் – பாலஸ்தீனியப் போரில் இதுவரை 9,587 பேர் பலி! 24 நாளாகத் தொடரும் போர்...!

அக்டோபர் 30, 2023

இஸ்ரவேல் – பாலஸ்தீனியர் இடையேயான போரில் முடிவின்றி தொடர்ந்த வண்ணம் உள்ளது. இப்போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9,500 ஆக உயர்ந்துள்ளது. கடந்தது 7 ஆம் திகதி இஸ்ரவேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இதுவரை 1,405 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாலஸ்தீனத்தின் காசா முனை மீதும் இஸ்ரவேல் நடத்தி வரும் வான்வழி தாக்குதலில் இது வரை 8,005 பேர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், பாலஸ் தீனத்தின் மேற்குகரை பகுதியில் நடந்த மோதலில் இதுவரை 117 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் இஸ்ரவேல்-ஹமாஸ் இடையேயான போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9,587 ஆக அதிகரித்துள்ளது.



# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




RE/MAX HALLMARK FIRST GROUP REALTY | RAISING THE BAR

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

## சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# "தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை"

**-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -**



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
நவம்பர் 27, 2000.

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

எமது மண்ணிற்காக விடுதலை என்ற உன்னத விழுமியத்திற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த எம் உயிர் வீரர்களை நாம் நினைவு கொள்ளும் இன்றைய நாள் ஒரு புனித நாள். இந்த நன்னாளில் ஆன்மக்கதவுகளை அப் புனிதர்களுக்காக திறந்து கொள்வோம்.

நீங்காத நினைவுகளாக எம்மோடு ஒன்றிக் கலந்துவிட்ட உணர்வுகளாக, காலத்தால் சாகாது என்றும் எம்முள் உயிர்வாழும் இம் மாவீரர்களை இன்று கௌரவிப்பதில் தமிழீழ தேசம் பெருமை கொள்கிறது.

மாவீரர் நினைவாக ஈகச்சுடரை ஏற்றும்பொழுது அந்த எரியும் சுடரில் அந்தத் தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான படிமத்தில், நான் ஒரு தரிசனத்தைக் காண்கிறேன்.

அக்கினியாக பிரகாசித்தபடி ஆயிரமாயிரம் மனித தீபங்கள், நெருப்பு நதிபோல ஒளிகாட்டி, வழிகாட்டிச் செல்லும் ஒரு அதிசயக்காட்சி திடீரென மனத்திரையில் தோன்றி மறையும்.

மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தின் வழிகாட்டிகள், அவர்களது வாழ்வும் வரலாறும் எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை, அவர்களே எமக்கு ஒளிகாட்டிகள்.

மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி அவர்களை நினைவுகொள்ளும் இந்தப் புனித நாளில், நாமும் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டிக்கொள்வோம். எமது தேசத்தின் சுதந்திரத்திற்காக அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்காக எத்தகைய இடர்களையும், எத்தகைய துன்பங் களையும், எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்போமென நாம் எமக்குள் வீரசபதம் செய்துகொள்வோம்.

எனது அன்பான மக்களே,

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்புமுனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாச்சாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன.

யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும். தகர்க்க முடியாத இரும்புக் கோட்டையாக இருபதினாயிரம் இராணுவத்தினருடன் தொடர்வலய முகாம்களால் சூழப்பட்டு பரந்தனில் இருந்து பளை வரையும் கரையோரத் தளங்களோடும் 80 சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்ட ஆனையிறவுப் பெருந்தளம் எம்மால் வெற்றிகொள்ளப்பட்ட நிகழ்வானது உலகப் போரியல் வர லாற்றுச் சமரில் புலிகள் வரித்த நுட்பமான போர் வியூகங்களும் திகைப்பூட்டும் தரை இறக்கங்களும் வீரம்செறிந்த தாக்குதல்களும் - தந்திரோபாயங்களும் போரியற்கலையில் எமது விடுதலை இயக்கத்தின் அபாரமான வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் உலகத்திற்கு எடுத்துக் காட்டியது. வெளிநாட்டில் பயிற்சி பெற்று உள்நாட்டில் களமாடி முதிர்ச்சிபெற்ற சிங்களத்தின் சிறப்புப் படையணிகள் இச்சமரில் சிதைக்கப்பட்டன. இந் நிகழ்வானது சிங்களத்திற்கு இராணுவ பொருளாதார ரீதியில் முண்டுகொடுத்து நிற்கும் உலக வல்லரசுகளை திகைப்பில் ஆழ்த்தியது.

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றிகொண்டு தென்மராட்சியிலும் வடமராட்சி கிழக்கிலும் பெருமளவு நிலங்களை மீட்டெடுத்த அதேவேகத்தோடு கிழக்கு அரியாலை வழியாக எமது படையணி ஒன்று யாழ்ப்பாணத்தின் நகராட்சி எல்லைக்குள் பிரவேசித்தது. அதேசமயம் எமது மற்றைய படையணிகள் தனங்கிளப்பு வழியாக நாவற்குழி, கைதடி, மட்டுவில் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தன. யாழ்ப்பாண நகரம் அரைப்பிறை வியூகத்தில் சுற்றிவளைக்கப்பட்டது. இதனையடுத்து, ஒரேயொரு ஆகாய விநியோக மார்க்கமாக விளங்கிய பலாலிப் பெரும்தளம் எமது பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகியது. மின்னல் வேகத்தில் நிகழ்ந்த இத்திடீர்த் திருப்பங்களின் விளைவாக, சந்திரிகா அரசு என்றுமில்லாத இராணுவ நெருக்கடியை சந்தித்தது. சந்திரிகா அம்மையார் நிலைகுலைந்து போனார். ஆயினும் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி சர்வதேச உலகத்தின் உதவிபெற்று நெருக்கடியை சமாளிக்கத் திட்டமிட்டார். யாழ்ப்பாணம் புலிகளிடம் வீழ்ந்தால் அங்குள்ள முப்பதினாயிரம் சிங்களப் படையினருக்கும் உயிராபத்து ஏற்படும் என உலகெங்கும் அபாயச் சங்கை ஊதினார். இந்த அபாய அறிவிப்பைக் கேட்டதுமே அனைத்துலக நாடுகளும் அம்மையாருக்கு உதவிசெய்ய முன்வந்தன.

இந்தியக் கடற்படையின் உதவியுடன் சிங்கள இராணுவத்தினரை பாதுகாப்பாக மீட்டெடுக்க இந்தியா முன்வந்தது. இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் அவசர ஆயுத உதவி வழங்க முன்வந்தன. முழு உலகமுமே அம்மையாரின் பின்னால் அணிதிரண்டது. மிகவும்



சக்திவாய்ந்த நவீனரக அழிவு ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டன. இஸ்ரேலும், ரஷ்யாவும் நவீனரக போர் விமானங்களையும் உலங்கு வானூர்திகளையும் அனுப்பிவைத்தன. அவசர அவசரமாக ஆயுத ரீதியில் சிங்கள இராணுவ இயந்திரம் வலுப்படுத்தப்பட்டது. அபாயச் சங்கை ஊதி உலகத்தின் உதவியைப் பெற்று இராணுவத்தைப் பலப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போரைத் தொடரும் சந்திரிகாவின் தந்திரோபாயம் வெற்றிபெற்றது. யாழ்ப்பாணச் சமரில் ஒருதலைபட்சமாக உலகநாடுகள் குறுக்கிட்டு சிங்களத்திற்கு உதவிகளை வழங்கியதால் எமது போர்த் திட்டங்களை தாமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது.

1995ல் யாழ்ப்பாண நகரை சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்தபோதும் அதன்விளைவாக ஐந்து இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த மாபெரும் மனித அவலம் ஏற்பட்டபோதும், உலகம் கண்களை மூடிக்கொண்டு மௌனம் சாதித்தது. ஆனால் இப்போது சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு படிப்படியாக உடைக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் ஆட்சிக்குள் வரும் புறநிலைகள் தோன்றியபோது உலகநாடுகள் பதட்டமடைந்து சிங்கள அடக்குமுறை ஆட்சியாளருக்கு உதவிகளைச் செய்வது எமக்கு ஒருபுறத்தில் ஏமாற்றத்தையும் மறுபுறத்தில் கவலையையும் கொடுக்கிறது.

யாழ்ப்பாணம் சிங்கள தேசத்திற்கு உரித்தானது அல்ல. யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இறையாண்மை என்பது ஒரு அரசின் தெய்வீக சொத்துரிமையல்ல. இறையாண்மையானது மக்களிடம் இருந்தே பிறக்கிறது. அது மக்களுக்கே சொந்தமானது. யாழ்ப்பாணத்தின்இறையாண்மை யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையை திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப்படை என்ற ரீதியில் நாம் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு இடமளிக்கப்போவதில்லை.

எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும், எத்தகைய சக்திகள் எதிர்த்து நின்றாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தே தீரும்.

எல்லாச் சமர்களுக்கும் தாய்ச்சமராக விளங்கிய ஆனையிறவுச் சமரிலும் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாண நகராட்சிப் பகுதிகளில் நிகழ்ந்த சமர்களிலும் களமாடி சாதனைபடைத்த சகல போராளிகளுக்கும், படை நகர்த்திய தளபதிகளுக்கும் எனது பாராட்டுக்கள். எல்லைப் படையாக அணிதிரண்ட எமது மக்கள் இந்தச் சமர்களில் நேரடியாக பங்குகொண்டு போராடியது எமது விடுதலைப் போராட்டத்திற்கு புதிய தெம்பையும் பலத்தையும் அளித்தது. குடும்பப்பொறுப்புக்களைச் சுமக்கும் இவர்கள் தேசப்பற்றால் ஈர்க்கப்பட்டு, ஆயுதப் பயிற்சி எடுத்து பெரும் நிலமீட்புச் சமர்களில் பங்குகொள்வது எமது தேசத்திற்கு பெருமை சேர்க்கிறது. எமது விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட பொதுமக்கள் இணைந்துகொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டம் என்ற உயர்நிலை அரசியல் பரிமாணம் பெறுகிறது. எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் பெருகவேண்டும் அதுதான் எமது போராட்டத்தில் பாரியதிருப்பு முனைகளை ஏற்படுத்தும், அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்பிற்கு முடிவுகட்டி எமது விடுதலை இலட்சியத்தை வெகுவிரையில் நிறைவுபெறச் செய்யும்.

எனது அன்பான மக்களே,

மீண்டும் ஆறாண்டுகாலம் சந்திரிகாவின் ஆட்சி தொடரப்போகின்றது. இந்த ஆறாண்டு காலமும் இத்தீவில் அமைதி நிலவுமா அல்லது போரும் வன்முறையும் தலைவிரித்தாடுமா என்பது சந்திரிகா கடைப்பிடிக்கப்போகும் கொள்கையிலும் அணுகுமுறையிலும் தான் தங்கியிருக்கிறது.

இந்த அரசானது, தென்னிலங்கை இனவாத சக்திகளின் ஆதரவோடுதான் ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது. புலிகளுக்கு எதிராக போர்முரசு கொட்டித்தான் தேர்தலை சந்தித்திருக்கிறது. மிகவும் மோசமான தேர்தல் மோசடிகள், வன்முறைகள் வாயிலாகவே வெற்றிகளையும் பெற்றிருக்கிறது. இனவாதக் கடும்போக்காளர்களே இந்த அரசின் முக்கிய பொறுப்புக்களை வகிக்கிறார்கள். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும் பதவியேற்றிருக்கிறார்கள். ஆயுத வன்முறையை பாவித்து மிகவும் கேவலமான தேர்தல் மோசடிகளைச் செய்து சனநாயகத்தை கேலிக்கூத்தாக்கிய தமிழ்த் துரோகிகளும் இந்த ஆட்சிபீடத்திற்கு முண்டுகொடுத்து நிற்கிறார்கள். இப்படியாக இனவாதிகளையும் தமிழினத் துரோகிகளையும் நிர்வாக உயர்பீடங்களில் அமர்த்தி அவர்களது தயவில் தங்கி நிற்கும் சந்திரிகா அரசு, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனையை தீர்க்க துணிவான முடிவுகளை எடுக்குமா என்பது சந்தேகமே.



போர்பற்றியும் சமாதானம் பற்றியும், இனப்பிரச்சனையை தீர்ப்பது பற்றியும், இந்த அரசிடம் ஒரு தெளிவான பார்வையும், திடமான அணுகுமுறையும் இருக்கவில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களே முன்வைக்கப்படுகின்றன. பல்வேறு கருத்தோட்டங்களை கொண்டவர்களும் கடும்போக்காளரும் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்திருப்பதால் இந்த அரசானது பல நாக்குகளால் பேசுகிறது. மிகவும் குழப்பகரமாகப் பேசுகிறது. புலிகளுடன் பேசத்தயார் என ஒரு குரலும், புலிகளைப் பூண்டோடு அழிப்போம் என இன்னொரு குரலும், புலிகள் சரணடையும் வரை போர் ஓயாது என மற்றொரு குரலுமாக ஜனாதிபதி, பிரதம மந்திரி, இராணுவத் தளபதி ஆகிய உயர் அதிகாரபீடங்களில் இருந்தே இத்தகைய முரணான குரல்கள் எழுப்பப்படுகின்றன. இந்த வித்தியாசமான குரல்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான பார்வையாளர்களை திருப்திப்படுத்தும் நோக்குடனேயே எழுப்பப்படுகின்றன. சந்திரிகாவும், கதிர்காமரும் வெளிநாடுகளுக்கு ஏமாற்று வித்தைகாட்ட பிரதம மந்திரியும், இராணுவத் தளபதியும் உள்நாட்டு இனவாத சக்திகளுக்கு தீனிபோட்டு வருகின்றனர்.

மேற்குல நாடுகள் சமாதானத்தை விரும்புகின்றன. சமாதான வழியில் அரசியற்தீர்வு காணப்படுவதை விரும்புகின்றன. போர் மூலமாக தமிழரின் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண முடியாது என்பதை வலியுறுத்துகின்றன. எனவேதான், மேற்குலக நாடுகளை திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரச்சார அறிக்கைகளை சந்திரிகா வெளியிட்டு வருகிறார். சமாதானம் என்றும், பேச்சுவார்த்தை என்றும், அதிகாரப் பரவலாக்கம் என்றும், அரசியலமைப்பு என்றும் வார்த்தைப் பிரயோகங்களை கையாண்ட மேற்குலகின் கண்களுக்கு மண்தூவி வருகின்றார்.

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரை சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல. இராணுவத் தீர்வில் நம்பிக்கைகொண்ட கடும் போக்காளராகவே அவரை நாமும் எமது மக்களும் கருதுகிறோம். அவரது ஆறாண்டுகால அரசியல் வரலாறும், தமிழ் மக்களை தொடர்ந்தும் இராணுவ பொருளாதார கொடுமைகளுக்கு ஆளாக்கிவரும் அவரது அணுகுமுறையும் சமீபத்திய அவரது போர்த்தயாரிப்பு நடவடிக்கைகளுமே எம்மையும் எமது மக்களையும் இத்தகைய நிலைப்பாட்டிற்கு தள்ளியது. இராணுவச் செலவீனத்திற்கு ஒதுக்கப்படும் பெரும் தொகை நிதி, பாரிய அளிவிலான ஆயுதக் கொள்வனவு, இடைவிடாது படைக்கு ஆட்சேர்ப்பு, விலகிய இராணுவத்தினரை விரட்டிப் பிடித்தல் இப்படியாக இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தி போருக்கு தயார்படுத்தும் நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது சந்திரிகா ஒரு இராணுவவாதக் கடும் போக்காளர் என்பது புலனாகும்.

இம் மாதம் ஒன்பதாம் திகதி புதிய பாராளுமன்றத்தை திறந்துவைத்துப் பேசிய சந்திரிகா, தமிழரின் இனப்பிரச்சனை குறித்து வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் சந்திரிகாவின் குழப்பகரமான பார்வையும் அணுகுமுறையும் தெளிவாகும். இந்த அறிக்கையில் தமிழரின் இனப்பிரச்சனையின் தோற்றம் பற்றி விளக்கமுனையும் சந்திரிகா, கடந்த 50 ஆண்டுகாலமாக தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறார். ஆயினும் தமிழர் என்று குறிப்பிடாமல் சிறுபான்மை சமூதாயங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக பொதுப்படையாகக் கூறுகிறார். இந்நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார அதிகாரக் கட்டமைப்பில் பங்குகொள்வதற்கு சிறுபான்மை சமூகத்தினருக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. அதுதான் இனப்பிரச்சனையின் தோற்றப்பாட்டிற்கு உண்மையான காரணம் என்று சந்திரிகா விளக்கம் அளிக்கிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ் மக்களுக்கு எதற்காக அநீதி இழைக்கப்பட்டது? யாரால் இழைக்கப்பட்டது? எப்படி, எந்த வடிவங்களில் இழைக்கப்பட்டது? என்ற கேள்விகளுக்கு சந்திரிகா பதில் தரவில்லை. மாறாக தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்த அநீதிகள் அனைத்திற்கும் அந்நிய காலனித்துவம் மீது பழியைச் சுமத்திவிடுகிறார். சிறீலங்காவின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் காலனித்துவ அதிகார கட்டமைப்பில் இருந்து உருவாக்கம் கொண்டவை என்றும், இவை எமது சமூகத்தில் நிகழும் புறநிலைக்களுக்கு ஏற்றதாக அமையவில்லை என்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இந்த அரசியலமைப்புச்சட்டங்களே காரணமாக இருப்பதாகவும் சந்திரிகா கூறுகிறார். சந்திரிகா அளிக்கும் இவ்விளக்கத்தில் தமிழருக்கு எதிரான சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் கொடூரமான ஒடுக்குமுறை வரலாறு மிகவும் சாணக்கியமான முறையில் மூடிமறைக்கப்படுகிறது. அத்தோடு இந்த இன ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் பெற்றோரது பங்கும் இருட்டடிப்புச் செய்யப்படுகிறது. தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு அரசியலமைப்பில் குறைகாண்பது, அந்த

அரசியல் அமைப்பை அந்நிய காலனித்துவத்தோடு தொடர்பு படுத்துவதும் முழுப்பூசணிக்காயை சேற்றில் மறைக்க முயலும் கேலிக்கூத்தான விடயம்.

அந்நிய காலனித்துவ தலையீடு காரணமாகவே தமிழீழ மக்கள் தமது வரலாற்று தாயகம் மீதான இறையாண்மையை இழந்தார்கள் என்பது வரலாற்று உண்மை. ஆனால், தமிழினம் மீதான திட்டமிட்ட ஒடுக்குமுறையானது இலங்கைத்தீவு ஆங்கிலக் காலனித்துவத்தில் இருந்து சுதந்திரம் அடைந்த பின்னரே ஆரம்பமாகிறது. இந்த ஒடுக்குமுறைக்கு காரணகர்த்தாவாக விளங்குவது சிங்கள பௌத்த இனவாதமாகும். பௌத்த மதத்தில் வேர் பாய்ச்சி, சிங்கள சமூகக் கட்டமைப்பில் விருட்சமாக வளர்ந்திருக்கும் இப் பேரினவாத சித்தாந்தம். சிங்கள அரசியல் உலகையும் ஆழமாக ஊடுருவி நிற்கிறது. சிங்கள அரசியல்வாதிகளால், படைக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டங்களும் இந்த பேரினவாத சித்தாந்தத்தின் ஒரு வடிவம். ஆகவே தமிழருக்கு கொடுமை இழைத்துவருவது சிங்கள பௌத்த இனவாதமே தவிர சந்திரிகா கூறுவது போல ஆங்கில காலனித்துவ கருத்துலகம் அல்ல.

சிங்கள இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகத் தமிழர்கள் நிகழ்த்திய அரசியல் போராட்டங்கள் அமைதி வழியில் இருந்து ஆயுதப் போராக விரிவுபெற்று இறுதியில் முழு அளவிலான போர்வடிவம் பெற்றிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் படையான விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் இப்போர் நிகழ்ந்து வருகிறது. தன்னாட்சி உரிமையுடைய மக்கள் சமூகம் என்ற ரீதியில் இன அழிப்பை நோக்காகக் கொண்ட அரச அடக்குமுறையில் இருந்து விடுதலை பெற ஆயுதம் ஏந்திப்போராடும் உரிமை எமக்கு உண்டு. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு இசைவான இந்த உரிமையின் நிலை. ஆனால், சிங்கள அரசு இந்தப் போர் பற்றிய உண்மை நிலையையும் அதன் வரலாற்றுப் பின்னணியையும் உலகிற்கு இருட்டடிப்புச் செய்து வருகிறது. அதுமட்டுமன்றி தமிழரின் தேசவிடுதலைப் போரை “பயங்கரவாதம்” எனத்திரிபுபடுத்தி, இழிவுபடுத்தியும் வருகிறது.

தனது கொள்கைப் பிரகடன அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் மத்தியிலான போர் பற்றி சந்திரிகா குறிப்பிடும்போது, “இனப்பிரச்சினையின் ஒரு விளைவுதான் இந்தப் போர்” என்கிறார். ஆயினும் அதே அறிக்கையில் இப்போரை “ஆயுதப்பயங்காரவாதம்” என்றும் குறிப் பிடுகிறார். தமிழீழப் போரை இனப்பிரச்சனையின் வெளிப்பாடு என்று கூறும் அதே நாக்குத்தான் அதனை தமிழரின் ஆயுதப் பயங்கரவாதம் என்றும் வர்ணிக்கிறது. இனப்பிரச்சனையை சமா தான வழியில் தீர்த்து வைப்போம் என்று கூறும் சந்திரிகா பயங்கரவாதத்தை போர் மூலம் ஒழிப் போம் என்றும் முழங்குகிறார். இப்படியாக சந்திரிகா அரசு தமிழரின் போர்பற்றிய உண்மை நிலையைத் திரித்து, மறுத்து பயங்கரவாதம் எனப் பொய்சொல்லி, சிங்கள மக்களையும் உலகத்தையும் ஏமாற்றி வருகிறது.

தமிழீழப் போரானது ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் விடுதலைப் போர் என்ற யதார்த்த அரசியல் உண்மையை சிங்கள அதிகார வர்க்கம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இந்த மறுதலிப்புத்தான் தமிழரின் இனப்பிரச்சனையை சிக்கலாக்கி வருகிறது. இதுதான் போரை தீவிரப்படுத்தி வருவதற்கும் காரணமாக இருக்கிறது. இதுதான் இனப்பிரச்சனைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் இருந்து வருகிறது.

சமாதான வழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அதேவேளை, நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றத்தயங்கவும் இல்லை. சமாதான வழிமூலம் கிட்டப்படும் தீர்வானது நியாயமானதாக, நீதியானதாக, சமத்துவமானதாக தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதாக அமையவேண்டும் என்பதே எமது விருப்பம். நோர்வே நாட்டு சமாதானக் குழுவினரை அண்மையில் வன்னியில் நான் சந்தித்தபோது எமது இயக்கத்தின் இந்த நிலைப்பாட்டை தெளிவாக, அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கினேன்.

சமாதானப் பேச்சுக்களுக்கு நாம் நிபந்தனைகள் எதனையும் விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ண புறநிலையும், இயல்புநிலையும் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையே நாம் வலியுறுத்தி வருகிறோம்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக பரஸ்பரம் பகைமையுடனும், சந்தேகத்துடனும் ஒரு கொடிய போரில் ஈடுபட்டுவரும் இருதரப்பினரும் சண்டையை தொடர்ந்தபடி திடீரென சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. இதனால்தான் போர் நெருக்கடியை படிப்படியாகத் தளர்த்தி போர் ஓய்ந்த சமாதான சூழ்நிலையில், நல்லெண்ணப் புறநிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம். இயல்புநிலை என்னும் பொழுது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரச்சுமைகள், தடைகள் நீங்கி எமது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்பிற்கு திரும்பவேண்டும் என்பதையே நாம் கருதுகிறோம். ஒரு உறுதியான தளத்தில் உகந்த புறநிலையில், நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்கள் நிகழும்பொழுதுதான் அவை ஆக்கபூர்வமானதாக அமையும். ஆகவேதான் பேச்சுக்கான நல்லெண்ண புறநிலையின் அவசியத்தையும், தேவையையும் நாம் வலியுறுத்துகின்றோமே தவிர, பேச்சுக்களுக்கு நாம் நிபந்தனைகளை விதிக்கவில்லை.

போர் நெருக்கடி தளர்ந்து இயல்புநிலை தோன்றுவதற்கு இருதரப்பில் இருந்தும் நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென நோர்வே அரசு சில யோனனைகளை தெரிவித்திருக்கிறது. இதனை நாம் ஆர்வமாகப் பரிசீலனை செய்து வருகிறோம். எமது மக்கள் அனுபவிக்கும் துன்பச்சுமை குறைந்து பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை நாம் வரவேற் கிறோம். அதற்கான முன் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்பது தமிழ் மக்களுக்கு ஒரு புதிதான விடயம் அல்ல. தமிழ் மக்கள் சார்பில் எமது விடுதலை இயக்கமும் எமக்கு முந்திய தலைமைகளும், சிங்களத்துடன் எத் தனையோ தடவைகள் பேச்சுக்களை நடத்தியுள்ளன. பண்டா-செல்வா ஒப்பந்த காலத்தில் இருந்து பல தசாப்தங்களாக பல வரலாற்றுச் சூழல்களில் பல்வேறு நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆயினும் இப்பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்த்துவைக்க தவறிவிட்டன. இதனால், தமிழரின் பிரச்சனை மேலும் மேலும் சிக்கலடைந்து பெரும் போராக விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. இந்த துரதிஸ்ட நிலைமைக்கு பிரதான காரணம் தமிழரது பிரச்சனையின் அடிப்படைகளை, தமிழரது அரசியல் அபிலாசைகளை சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள மறுப்பதுதான்.

தமிழரின் பிரச்சனைக்கு சமாதான வழியில் நிரந்தரமான அரசியற்தீர்வு காணப்பட வேண்டுமாயின் தமிழர் பற்றிய சில அடிப்படை உண்மைகளை சிங்கள தேசம் ஏற்றக்கொண்டே ஆகவேண்டும். அத்தோடு தமிழ் மக்கள் எத்தகைய தீர்வை விரும்புகிறார்கள் என்பதையும் அவர்களது அடிப்படை அபிலாசைகள் என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்கள் தனித்துவமான இன அடையாளத்தை கொண்டவர்கள் ஒரு தேசிய இனக் கட்டமைப்போடு அந்த இனத்துவ பிரக்ஞையோடு வாழும் ஒரு மக்கள் சமூகம் அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயக மண்ணாக சொந்த நிலமுண்டு. எமது மக்கள் விரும்புவதெல்லாம் ஒன்றுதான். தமது சொந்த மண்ணில் நிம்மதியாக, நிறைவாக வாழவேண்டும் என்பதுதான். மற்றவர்களது அதிகார ஆதிக்கமோ, நெருக்குவாரங்களோ இல்லாத ஒரு அரசியல் சூழலில் தம்மைத்தாமே ஆட்சி புரிந்து, கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது மக்களின் ஆழமான அபிலாசையாகும். சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த புரிந்துணர்வின் அத்திவாரத்தில் இருந்து தான் ஒரு நியாயமான, நிரந்தரமான தீர்வைக் கட்டியெழுப்புவது சாத்தியமாகும்.

தமிழர் பிரச்சனையின் அடிப்படைகளை உணர்ந்து சமாதான வழியில் தமிழர்களுக்கு நீதி வழங்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது எமக்கு சந்தேகமே.



தமிழர்களுக்கு எதிராக தென்னிலங்கையில் குமுறும் இனக்குரோத வெறியாட்டங்கள், ஆட்சி அதிகாரத்தில் பேரினவாத சக்திகளின் மேலாண்மை, தொடர்ச்சியாக இராணுவ மயப்படுத்தப்படும் சிங்களசமூகம், மகாசங்கத்தினரின் தமிழ் விரோதப்போக்கு, அரசாங்கத்தின் இராணுவத்தீர்வுக் கொள்கை இவற்றையெல்லாம்பார்க்கும்பொழுது தமிழரின் தேசிய இனப்பிரச்சனை சமாதான வழியில் தீர்க்கப்படுமா என்பது கேள்விக்குறியாகிறது. அத்தோடு சந்திரிகா அரசு மேற்கொள்ளும் சில குருட்டுத்தனமான அணுகுமுறைகளும் இனப்பிரச்சனையின் தீர்வுக்கு முட்டுக்கட்டை யாகவும் அமைந்து விடுகின்றது. பெருமாளுக்கு முதலமைச்சராக முடிசூட்டி முந்திய இந்திய அரசு இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறுபோல, சந்திரிகா அரசும் தமிழ்விரோதக்குழு ஒன்றை வட கிழக்கில் ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தியிருக்கிறது. இப்படியான நடவடிக்கைகள்மூலம் இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்வதுடன் இனப்பிரச்சனையை மேலும் சிக்கலாக்கி விடுகிறது.

எனது அன்பான மக்களே,

எமது தேசியப் பிரச்சனை இப்பொழுது உலக நாடுகளின் கவனத்தையும், ஆர்வத்தையும் ஈர்த்து வருகிறது. இப்பிரச்சனை சமாதான வழியில் தீர்க்கப்படவேண்டும் என சர்வதேச சமூகம் விரும் புகிறது. உலக மனச்சாட்சியின் பார்வை எம் பக்கம் திரும்பியிருப்பது நல்லதொரு அறிகுறியாகவே எமக்குத் தெரிகிறது.

நாம் சமாதானப் பேச்சுக்கோ அல்லது சமாதான வழியிலான அரசியற்தீர்விற்கோ முட்டுக்கட்டை போடவில்லை என்பதை உலகிற்கு உணர்த்தி வருகிறோம். சமாதானப் பேச்சுக்கு உகந்ததாக சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டையும் தமிழர்களது அடிப்படைக் கோரிக்கைகளையும் உலக சமூகம் புரிந்து வருகிறது. தமிழருக்கு எதிரான ஒடுக்கு முறையின் பின்னணியில் உள்ள சக்திகள் யாரென்பதையும் உலகம் இனங்கண்டு வருகிறது.

உலக நாடுகளில் இருந்து பெறப்படும் நிதி உதவியையும், ஆயுத உதவியையும் ஆதாரமாகக் கொண்டே சிங்கள அரசு தமிழருக்கு எதிராக இந்தப் போரை நடத்தி வருகிறது. பெரியதொரு அழிவுப்போரை நடத்திக்கொண்டு, பெருமளவு அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழித்துக் கொண்டு சமாதானத்திற்காகவே சண்டையை நடத்துவதாக சந்திரிகா அரசு உலகத்தை ஏமாற்றி வந்திருக்கிறது. ஆயினும் சந்திரிகா அரசு நடத்தும் இப்போரின் நோக்கம் என்ன என்பதையும், இப்போரினால் புலிகளை வெற்றி கொள்ளவோ அன்றி தமிழரின் பிரச்சனையை தீர்க்கவோ முடியாது என்பதையும் மேற்குலகம் இப்பொழுது உணரத் தொடங்கியுள்ளது. எனவே சிங்கள இனவாத ஆட்சியாளரை சமாதானப் பாதைக்கு திருப்பவேண்டும் என்றால் சிங்களத்திற்கு பொருளாதாரத் தீனி போட்டுவரும் உலக நாடுகளிடம்தான் அந்தக் கடிவாளம் இருக்கிறது. தென்னிலங்கைச் சமூகக் கட்டமைப்பின் சகல மட்டங்களிலும் பூதாகரமாக வளர்ந்துவரும் சிங்கள பௌத்த பேரினவாதம், தமிழ் மக்களை காருண்ணியத்துடன் அரவணைத்துக் கொள்ளும் என நாம் நம்பவில்லை. சிங்கள தேசம் இனவாதப்பிடியில் இருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப் பதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.

காலமும் வரலாறும் எமது போராட்ட இலட்சியத்திற்கு நியாயம் வழங்கியே தீரும். அப்போது உலக மும் அதனை ஏற்றுக் கொள்ளும்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மை அழித்துக்கொண்ட மாவீரர்கள் சரித்திரமாக நின்று எமக்கு வழிகாட்டுவார்கள். அந்த தர்மத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

வே. பிரபாகரன்
தலைவர் தமிழீழ விடுதலைப் புலிகள்.

குறிப்பு: தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை 2000 .










# INVESTMENT PROPERTY CONDO (KENNEDY & HWY 401)

3 Bed Rooms + Den,
Central A/C + Heater,
Swimming Pool & Sauna
Jym & 2 Car Parking
Garage Indoor, Party Room
Dishwasher, Kitchen,
Washer Dryer,
One & Half Bath Room

**Surrounding Area:**
Kenndy Common, School,
Resort Park, Metro,
Foody World Super Market
LA . Fitness, Park & More!

Please Contact

**647-294-2996**

# எங்கள் தாயகம் எத்தனை அழகு

தாயின் மடிச்சுகத்தையும்,
தாயகமண்ணின் தனிச்சுகத்தையும்,
எழுதத் தொடங்கினால்....
ஏன் பேனா வற்றுவதில்லை?
“அமுதசுரபி” போலவும்,
“அட்சயபாத்திரம்” போலவும்.
ஏன் அள்ள அள்ளக் குறைவதில்லை?
எந்தையர் பூமி எத்தனை அழகு!
கள்ளிச்செடி படர்ந்த கலட்டித் தரையானாலும்,
பச்சை போர்த்த படுக்கைபோல,
பார்க்கும்போது கண்ணில் காதல் வழிகிறதே!
ஒழுங்கில்லாத ஒற்றையடிப் பாதைகள்கூட
உச்சி வகிடெடுத்த பேரழகியின் தலையைப்போல்
உன்னத அழகோடு ஓடிவருகின்றனவே
ஏன்?

தொட்டளைந்த பூமியின் சுகமும், மணமும்
எட்ட இருக்கும் நிலத்தில் ஏற்படாது.
எங்கள் அன்னைமண் எத்தனை எழில்.
பிஞ்சுப் பிள்ளைகளின் பூவிரல்கள்போல்போல....
வைகாசி மாதத்து மாமரங்கள்போல்...
துள்ளிக் குதிக்கும் பிள்ளைக் கன்றுகள் போல....
வெள்ளலைகள் கரையொதுக்கும்
நுரைப்பூக்களைப் போல....
எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தமிழீழம் சந்தனக்காடு
இதிகாசத்தில் படித்த இந்திரன் பூமி
“தால் ஏரி” காலெடுத்து நடக்கும் “காஷ்மீரை”
காணக்கண்கோடி வேண்டுமாமே.
“ஹாவாய்” தீவின் கடற்கரையில்
ஒருநாள் நடந்துவிட்டு இறந்தாலே
பிறந்தபலன் பூரணப்படுமாமே!
யார் சொன்னது?

தென்தமிழீழத்தைத் தெரியாத ஒருவன்
சொல்லியிருக்கலாம்.
மஞ்சள் வெய்யில் மேனிதழுவும் மாலைநேரம்
கோணமலையில் நின்று கீழே பாருங்கள்;
கோட்டை வாசலில் நிமிர்ந்து நின்று
பாதாளமலையின் பக்கமாக விழிகளை வீசுங்கள்.
உவமையற்ற அழகை உணர்வீர்கள்.
வார்த்தைகள் தோற்றுப்போகும்.

பேற்றுக்காலத் தாய்மை அழகோடு
நெற்பயிர்கள்
பால்மணிக்கதிர்கள் தள்ளும் பருவத்தில்
தம்பலகாமத்து வயல் வரம்புகளில்
காலாற நடந்து பாருங்கள்.

காலமழை பொய்க்காத காலத்தில்
கந்தளாய்க் குளம் நிறைந்திருக்கும் நேரத்தில்
உயர்ந்த அணைக்கட்டில் உட்கார்ந்து கொண்டு
தாள அசைவுக்குச் சதிராடும் பெண்களைப்போல
நீளப்பறக்கும் வெண்கொக்குகளை நிமிர்ந்து பாருங்கள்.
கந்தளாயின் காலடியில்
காஷ்மீர் கைகட்டி நிற்கும்.
நிலம் வெளிக்காத புலதிப்பொழுதில்
“வெருகல்” வேலன் திருவிழாக் காலத்தில்
மாவலி கங்கையின் மடியிலே விழுங்கள்.
கொட்டியாரக் குடாக்கடல் தேடி
கைநீட்டி வந்துகட்டித் தழுவும்
ஆற்றின் அருகில் அமர்ந்து கொள்ளுங்கள்
எங்கள் தாயகம் எத்தனை அழகு!

தென்தமிழீழம் சுந்தரப் பூமி
கன்னங்குடா,
பட்டித்திடல்
இன்னும் இன்னும் எத்தனை ஊர்கள்
அத்தனையும் அழகு.
வெள்ளிநிலா விளக்கேற்றிக்கொள்ளும்
நள்ளிரவில்
புளியந்தீவில் பொன்னாவரசு பூத்திருக்கும் காலத்தில்
மட்டுநகர் வாவிக்கு வாருங்கள்.
மேலே பெண்ணுருவம், கீழே மீனுருவம் கொண்ட
“நீரரமகளிர்”
குரலெடுத்துப் பாடிக் குளிப்பார்கள்.
படகெடுத்துப் பக்கத்தில் போனால்
முகம் மறைந்து முக்குளித்து விடுவார்கள்.
கற்பனையென்றாலும் எத்தனை சுகம்!

மட்டக்களப்பு புல்வெளிகளில்
மேய்ச்சல் முடிந்து வீடுதிரும்பும் பசுக்களின்
மடிசுரந்து வீதியெங்கும் வெள்ளமாகும்;
கன்றை நினைத்து கால்களை நனைக்கும்.
வண்டு துளைபோட்ட மூங்கில் காடுகள்
வாத்தியம் இசைக்கும்.

வாழைச்சேனை கரும்புக் காட்டில்
நிலத்து நீரைத் தண்டுகள் உறிஞ்சுவதில்லை
கரும்புச் சாறை நிலம்தான் குடித்துக் கொள்கிறது.
இலங்கை இந்து சமுத்திரத்தில் மிதக்கும்
ஒரு தீவு;
ஆனால் இரண்டு நாடுகள்.
தமிழீழம் பருவநிலை மாறுபடும் பகுதிகள் அடங்கிய
பரந்த தேசமல்ல....

ஒரேநாளில்
உதயத்தை காங்கேசன்துறையிலும்
அஸ்தமனத்தை அக்கரைப்பற்றிலும்
பார்த்துவிட்டுப் படுக்கைக்குப் போகலாம்.
மட்டக்களப்பின் முட்டித்தயிர்
புளிக்க முன்னர்
புங்குடுதீவு திருமணமொன்றின்
பந்தியிலே பரிமாறப்படும்.
யாழ்ப்பாணத்துக் “கறுத்தக் கொழும்பான்”
அழுக முன்னர்
திருக்கோவிலில் தெருக்களில் விற்பனைக்கிருக்கும்.
வடதமிழீழம் வரண்டது;
வரண்டதே தவிர சுருண்டதல்ல...
தென்தமிழீழம் செழிப்பானது;
செழிப்பானதே தவிர செருக்கானதல்ல...
திருமலை தமிழீழத்தின் தலைநகர்.
எங்கள் வானத்துக்கு நிலவு ஒன்றுதான்;
தலைவனும் ஒருவன்தான்.
இன்று,
மனங்களை அடைத்து நின்ற மலைகளெல்லாம்
விடுதலை அதிர்வால்
வெடித்துச் சிதறுகின்றன.

பிரதேசப் பிரிவுகள்
போராட்டத்தீயால் பொசுங்கி எரிகின்றன.
தென்தமிழீழம்
எங்கள் தாயகத்தின் தலைவாசல்;
தானியக் களஞ்சியம்;
பாலும் தயிரும் பயிருக்குப் பாய்ச்சும் நிலம்.
இன்று -
தமிழரின் குருதி பாயும் நிலம்.
அவர்களின் கண்ணீரைத் துடைக்க
கைகளை நீட்டுவோம்;
எதிரியைக் கலைத்து எல்லையைப் பூட்டுவோம்.

*- வியாசன்*






# ஈழப்போர் – 03
# ‘சத்ஜய’ படையெடுப்பும் புலிகளின் எதிர்ச் சமரும்

வன்னிப் படையெடுப்பிற்கான பிரதான பொருதரங்கத்தை சிங்களம் ஆனையிறவுத் தளத்திலிருந்து திறந்து விட்டது.

“சத்ஜய” நடவடிக்கை அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் – முல்லைத்தீவில் புலிகள் பெற்ற எண்ணுதற்கரிய வெற்றியையும், தம்மீது சுமத்தப்பட்டுவிட்ட அவமானகரமான தோல்வியையும் ஈடுகட்டிச் சமப்படுத்துவதாகவே இருந்த போதும் .

இப்போது – புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் இறுதி அத்தியாயம் என்ற வடிவத்தை சிங்களத் தலைமை அதற்குக் கொடுத்து விட்டது.

70 நாட்களாக மூன்று கட்டங்களில் நகர்த்தப்பட்ட “சத்ஜய” படையெடுப்பு, 12கிலோ மீற்றர்கள் முன்னேறி கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதுடன் – அடுத்த நகர்விற்கான தயார்படுத்தலுக்காக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

“சத்ஜய” நடவடிக்கைத் தொடரின் முதலாம் கட்டம் ஆடி 26ஆம் திகதி ஆரம்பித்தது.

உப்பளப் பகுதியிலிருந்த ஆனையிறவுத் தளத்தின் தென்புற முன்னரங்க நிலைகளிலிருந்து, பரந்தனை நோக்கிய முன்னேற்றத்தை சிங்களத்துப்புக்கள், இருள் கலையும் அதிகாலையில் ஆரம்பித்தனர்.

பிரதான வீதிக்கும் புகையிரதப் பாதைக்கும் அருகே நகர்ந்து, புலிகளின் தொடர் காப்பரண் பகுதியை உடைத்து முன்னேறும் எதிரியின் ஆரம்ப முயற்சி கைகூடாமல் போன அதே பொழுதில்.

மாற்று வழியாக பிரதான வீதிக்கு கிழக்கே 2கிலோ மீற்றர் தூரத்தில் தட்டுவன்கொட்டிப் பகுதியூடாக முன்னேற எடுத்த முயற்சி அவனுக்கு சாத்தியமானதாகியது.

பெருமெடுப்பில் நகரும் படையினரை மிகச் சில படைப்பிரிவுகள் கொண்டு வழிமறித்து மோதுவது சாத்தியமற்றது என்பதாலும் சாதகமற்ற அந்தக்களத்தில் கடும் எதிர்த்தாக்குதலில் இறங்குவது பெருமழிவுக்கே வழிவகுக்கும் என்பதாலும் .

மட்டுப்படுத்தப்பட்ட வகையான ஒரு சண்டையை நடாத்திய வண்ணம், தந்திரோபாயப் பின்வாங்கலொன்றைப் புலிகள் செய்யவேண்டியிருந்தது.

தனக்கெதிரான தீவரம் குறைந்த மோதலையே புலிகள் நடாத்தியதன் காரணமாகச் சுலபமாக முன்னேறிய எதிரியால் – அன்றைய பகற்பொழுது முடிவதற்குள்ளாகவே .

6 கிலோ மீற்றர் தூரம் நகர்ந்து பரந்தன் சந்தியைக் கைப்பற்றவும் அதுவரையான இடைத்தூரத்தில் பிரதான வீதிக்கு மேற்கே 1 கிலோ மீற்றருக்கும், கிழக்கே 2 கிலோ மீற்றருக்கும் அகன்று நிலைகொள்ளவும் முடிந்தது.

அன்றைய சண்டையில் தனது 16 துருப்புக்கள் கொல்லப்பட்டதாக அரசு தெரிவித்தது. எமது 16 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

தொடர்ந்த எட்டு நாட்களாக – புதிதாகக் கைப்பற்றிய பிரதேசத்தில் காப்பு நிலைகளைப் பலப்படுத்தியதுடன், தன் சண்டையணிகளை மீளொழுங்கு செய்து தயார்படுத்திக்கொண்ட எதிரியுடன் நடந்த மோதல்களில் மேலும் 5 போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஒன்பதாம் நாள் .

ஆவணி 4 ஆம் திகதி, “சத்ஜய” வின் 2 ஆம் கட்டத்தை எதிரி ஆரம்பித்தான்.

பரந்தனை சிரமமின்றிக் கைப்பற்ற முடிந்ததனால், முல்லைத் தீவில் புலிகளின் ஆட்தொகை வெகுவாகப் பலவீனப்பட்டு விட்டதாகக் கருத்திலெடுத்த சிங்களத் தலைமை புலிகளின் போர்வலு பற்றிய தவறான கணிப்பீட்டினைச் செய்ததால், “சத்ஜய”வின் 2 ஆம் கட்டத்தின் மீது பெரு நம்பிக்கை வைத்து, கிளிநொச்சி நோக்கிய இறுதி நகர்வு எனப் பிரச்சாரம் செய்தது.

சிங்களத்தின் புகழ்பூத்த போரணியான “சிறப்புப் படை”க் “கொமாண்டோ”க்கள் மேஜர் ஜெனரல் ஜனேக பெரேராவின் வழி நடாத்தலின் கீழ் களத்தை திறந்தனர்.

பரந்தனிலிருந்து நகரத்தொடங்கிய துருப்புக்கள், ஒரு கிலோ மீற்றருக்கும் மிகக் குறைவான தூரத்திற்குள் பிறை வடிவில் தம்மை வளைத்து நுட்ப வயூகமிட்டுக் காத்திருந்த புலிகளைச் சந்தித்த போது வெடித்த சமர் அசாதாரணமானது.

எதிரி பலமுனைகளுடு முன்னேற முயன்றான் புலிகளின் அரண்களை உடைத்தெறிய தன்னால் இயலுமான வரைக்கும் எத்தனித்தான்; ஒவ்வொரு முனையும் முறியடிக்கப்படும்போது இன்னொரு முனையைத் திறந்து முயன்றான். விடிந்ததிலிருந்து இருளும் வரை – பகற்பொழுது முழுவதுமே – பரந்தன் பகுதி பெரியதொரு போர்க்களமாக மாறியிருந்தது.



சத்ஜய கட்டம்-1, கட்டம்-2— படைநகர்வுகளும் எதிர்ச்சமர்களும்.

பிரதான வீதிக்குக் கிழக்குப் பக்கமாக முன்னேறியவர்களைப் புலிகள் இரு முனைகளில் மறித்தனர். ஒரு முனையில் இரு “ராங்க்” குகள் தாக்கியெரிக்கப்பட மேலும் ஒன்று சேதப்படுத்தப்பட்டன. இதே சமயத்தில் பிரதான வீதிக்கு மேற்கப் பக்கமாக முன்னேறியவர்களைப் பூநகரி வீதிக்கு வலதுபுறமும், இடதுபுறமும் இரு முனைகளில் எதிர்கொண்டு தடுத்தனர்.

முதல்நாள் சண்டைகளில் மட்டும் 75 படையினர் கொல்லப்பட்டதையும், தொடர்ந்து மூன்று நாட்களாக கடும் முயற்சியெடுத்த எதிரியை முறியடித்த சண்டைகளில் மேலும் 75 வரையான படையினர் கொல்லப்பட்டதையும் களச் செய்திகள் ஊர்ஜிதப்படுத்தின. இந்தச் சண்டைகளில் எமது 89 போராளிகள் வீரச்சாவடைந்தனர். அதைத் தொடர்ந்த நாட்களில் “சத்ஜய” வின் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கும் வரை, எதிரியின முன்னரங்கப் பகுதிகளில் நடந்த மோதல்களில் மேலும் 11

போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

“சத்ஜய”வின் இரண்டாம் கட்டத்தை முளையிலேயே முறியடித்த புலிகளின் சமர், படைத் தளபதிகளைத் திகைப்பில் ஆழ்த்தியது. யாழ்ப்பாணச் சமரிலேயே இல்லாத விதமாக வான்படையையும் களத்திலிறக்கியதோடு, “றிவிசர”வில் பிரயோகித்ததை விடவும் மிகக் கூடுதலான வளங்களை ஒழுங்கு திரட்டிய போதும் ஏன் தம்மால் முடியாமல் போனது என்பதே அவர்கட்கு ஆச்சரியம். புலிகளின் பெரும் படைக்கல பிரயோகம் தமக்கு அதிக சேதத்தைத் தந்ததனால், அவர்களை விட அதிகமான படைக்கல சக்தியைத் தாம் பிரயோகித்தபோது புலிகளுக்கும் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்க வேண்டும் அத்தோடு, முல்லைச் சமரில் ஏற்கனவே புலிகளின் ஆட்பலம் பெருமளவில் பலவீனப்பட்டிருக்கக்கூடிய சாத்தியப்பாடும் இருக்கையில், எப்படிப் புலிகளால் எதிர்த்து நிற்க முடிந்தது “றிவிசர”வை விடவும் உக்கிரமான தாக்குதலை நிகழ்த்திய போதும் ஏன் துருப்புக்களால் வெல்ல முடியவில்லை?

இந்தக் கேள்விகளுக்கு விடைதேட முனைந்த சிங்களப் படைத்துறைத் தலைமை, முல்லைத் தளத்திலிருந்தும் வேறு வழிகளிலும் புலிகள் பெற்றிருக்கும் ஆயுத கருவிகள் காரணமாக கிளிநொச்சிப் படையெடுப்பிற்கான தன் போர்முறைத் திட்டத்தில் முழுமையான மாற்றம் செய்யவேண்டியதை மட்டுமல்ல.

தமிழீழப் போரில் தனக்கு ஒரே வாய்ப்பாக இருந்த மரபுவழிச் சமர்முறையும் சிக்கலுக்குரியதாக மாறுவதையும் உணர்ந்தது.

இரண்டாம் கட்டத்தில் சறுக்கிய “சத்ஜய”வை மூன்றாம் கட்டத்திலாவது நிமிர்ந்த, சிங்களத் தளபதிகள் ஒன்றரை மாத காலமாகச் சிந்தித்தனர். பரந்தன் சண்டைகளில் பெற்ற பாடங்களிலிருந்து, அடுத்த நடவடிக்கையில் புதிய வழிமுறைகளைக் கையாள்வது பற்றி ஆலோசித்தனர்.

பரந்தன் பகுதி முன்னரங்க நிலைகளுக்கப்பால் கிளிநொச்சி வரையான நேர்ப்பாதையை மையப்படுத்தி அடுக்கடுக்கான போர்வியூகங்களை இட்டிருக்கும் புலிகளின் “மரணப்பொறி”களுக்குள் சிக்கிவிடாமல் கிளிநொச்சியை அடையும் மார்க்கத்தை, எதிரி தேடவேண்டியிருந்தது.

“சத்ஜய”வின் இரண்டாம் கட்டம் அந்த வியூகங்களுக்குள் சிக்கியே சின்னாபின்னமானது. முழு வளங்களையும் ஒருங்கு திரட்டி நாட்கணக்கில் முயன்றபோதும் உடைத்தெறிய முடியாத இறுக்க வியூகங்களாகவே அவை இருந்தன. “கிபிர”“ உந்துவிசைப் போர்விமானங்கள், “புக்காரா”, “சியா மாசெற்றி”, “எம். ஐ.24” தாக்குதல் வானூர்திகள் கொண்டு அவற்றை நெருக்க வந்த சிங்கள வான்படை எதையுமே சாதிக்கவில்லை. “ஆட்லறி”கள், பீரங்கிக் கவசவண்டிகள், 120 மில்லி மீற்றர் மோட்டர்கள். மற்றும் சிறுரக மோட்டர்கள், ஏவுகருவிகள் சகிதம் சிறப்புக் “கொமாண்டோ”க்கள் கையாண்ட – ஒரே சமயத்தில் பல முனைகளிலூடு நகரும் – தந்திரோபாயமும் துளியளவு பயனையும் தரவில்லை.

எனவே – அந்த “அழிவு வலய”த்தை ஊடறுத்து நுழையும் விஷப் பரீட்சையில் மீண்டும் முயற்சிக்காமல் – அதனை விலக்கி, மேவி வளைத்து – பரந்தன் சந்தியிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திலிருந்த கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கு, 15 கிலோ மீற்றர் நீளமான ஒரு அரைவட்டச் சுற்றுப்பாதையில் படையை நகர்த்த எதிரி தீர்மானித்தான், இதில் அவனுக்கு வேறு இலாபங்களும் இருந்தன.

சுற்றுப்பாதையொன்றில் நகர்வதன் மூலம் சமரரங்கை விரித்து பல கிலோ மீற்றர்களுக்கு அகட்டும்போது – குறிப்பிட்ட சில மையங்களில் ஒருங்குதிரட்டப்படுவதற்குப் பதிலாக – புலிகளின் பலம் ஜதாக்கப்படும்; அப்போது, தீவிரம் குறைந்த ஒரு எதிர்த் தாக்கத்தையே தனக்கு புலிகளால் கொடுக்கக்கூடியதாயிருக்கும். அத்தோடு.

திட்டமிட்ட ரீதியில் ஏற்கனவே தாயார்செய்யப்பட்டிருக்கும் பாதுகாப்பான சண்டையரண்களுக்குள்ளிருந்து புலிகளை வெளிக் கொண்டு வந்து, போரிற்கு அரண் செய்யப்படாத புதுப்பிரதேசங்களில் சண்டைக்கிழுத்து, முல்லைத்தீவுக்கு ஈடான உயிரழிவையும் கொடுக்கலாம் என்ற கணக்குகளையும் எதிரி போட்டான்.

அவ்வாறான ஒரு சுற்றுவளைவு நீள்பாதையைத் தேர்வதற்கு, எதிரிக்கு இரண்டு வழிகள் இருந்தன.




'சத்ஜய' கட்டம் 3 படை நகர்வும் அதற்கெதிரான புலிகளின் சமரும்

முதலாவது, கிழக்குப் புறத்தில் முரசுமோட்டைப் பகுதியூடாக கனகராயன் ஆற்றை எல்லையாகக்கொண்ட பரப்பினூடு நகர்ந்து, திருவையாறின் வழியாக கிளிநொச்சியை அடைவது.

இரண்டாவது, மேற்குப் புறத்தில் குஞ்சுப்பரந்தன் பகுதியூடாக உருத்திரபுரம் – ஜெயந்திநகர் பிரதேசத்தை எல்லையாகக் கொண்ட பரப்பினூடு நகர்ந்து, டிப்போ வீதி வழியாக கிளிநொச்சியை அடைவது.

இவற்றில் இரண்டாவது வழியில்தான் எதிரி நடவடிக்கையைச் செய்து முடித்தான். ஆனால், முதல் நகர்வை அவன் முதலாவது வழியிலேயே எடுத்தான்.

புரட்டாதி 22 ஆம் திகதி, “சத்ஜய”வின் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

முன்பு – “றிவிரச”வை விடவும் கூடுதலான வளங்களோடு “சத்ஜய”வின் இரண்டாம் கட்டம் முயற்சிக்கப்பட்டது. இப்போது – இரண்டாம் கட்டத்தை விடவும் கூடுதலான வளங்களோடும், சுற்றுப்பாதையில் நகர்ந்து புலிகளைச் சண்டைக்கிழுத்துக் கொல்லும் புத்திசாலித்தனமான தந்திரோபாயங்களோடும் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரியாவின் நெறிப்படுத்தலில், பிரிகேடியர் வசந்த பெரேரா களத்தை வழிநடத்தினார்.

பரந்தன் பகுதியில் – யாழ். வீதிக்குச் சமாந்தரமாக – கிழக்கே 2 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தமது முன்னரங்க நிலைகளிலிருந்து, முல்லைத்தீவு வீதிக்கு வடக்கே ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வெளியேறி.

முரசுமோட்டைப் பகுதியை நோக்கி நகர முயன்ற சிங்களத் துருப்புக்களை 2 ஆம் கட்டைக்கு வடபுறத்தில் இடைமறித்த புலிகள், உக்கிர எதிர்த்தாக்குதலை நடாத்தி வழிமறித்து நிறுத்தினர்.

மீண்டும் மறுநாள் விடியற் பொழுதில் – அதே திசையில் தொடர்ந்து நகரத் தொடங்கிய படையினரை, 3ஆம் கட்டைக்கும் முரசுமோட்டைக் குளத்துக்கும் இடையால் வியூகமிட்ட புலிகள், கடுமையான எதிர்ச்சண்டையை நிகழ்த்தி இடைமறித்துத் தடுத்தனர்.

கிழக்குத் திசையில் இரண்டு நாட்களாக நடந்த இந்தப் பெருஞ்சண்டைகளையடுத்து, இரண்டாம் நாள் நள்ளிரவு வேளை திடீரென, மேற்குத்திசையில் மிகவேகமான இரவு நகர்வொன்றைச் செய்ததுடன், முதலிரண்டு நாளாய் முரசுமோட்டைப் பகுதியில் தான் முன்னேறியிருந்த இடங்களிலிருந்து எதிரி பின்வாங்கவும் செய்தான்.

முரசுமோட்டைப் பகுதியூடாக நகர்வை இடைநிறுத்தியமைக்கு அல்லது மேற்கொள்ளாமைக்கு, மூன்று காரணங்கள் கூறலாம்.

ஒன்று – மறைவுகளும் காப்புகளுமற்ற, வயல் நிலங்களான ஒரு வெளியான பிரதேசமாகவே அந்த வழி இருந்தமை.

ரண்டு – புலிகளின் கவனத்தை திசை திருப்புவதற்கான ஒரு தந்திரோபாய நகர்வாகவே, அது மேற்கொள்ளப்பட்டமை.

மூன்று – புலிகள் கடுமையான எதிர்ச்சண்டைகளை நிகழ்த்தியமை.

இந்தக் காரணங்களில் ஒன்றுக்காக அந்த முனையிலிருந்து பின்வாங்கிய எதிரி – உண்மை நகர்வை, அடுத்த முனையில், இரவில் செய்தான்.





யாழ். வீதிக்குச் சமாந்தரமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தனது மேற்குப் பகுதி முன்னரங்க நிலைகளிலிருந்து, பூநகரி வீதிக்கு வடக்கே 2 கிலோ மீற்றர் தொலைவில் புறப்பட்ட எதிரித் துருப்புக்கள்.

குமாரபுரம், பெரியபரந்தன் பகுதிகளுக்கு வடபுறத்தால் நகர்ந்து, குஞ்சுப்பரந்தனூடாக வளைந்து, உருத்திரபுரம் பிரதேசத்தை அடைந்தனர்.

அந்த இரவு நகர்வுக்கு எதிராக தீவிரத்தன்மையற்ற ஒரு சண்டையிலீடுபட்டபடி புலிகள் பின்வாங்கலைச் செய்யவேண் டித்தான் இருந்தது. முடியுமான அளவுக்கு எதிரியைத் தாமதப் படுத்துவதைத் தவிர, முழுமையான ஒரு எதிர்ச்சண்டையை நடாத்த அது சாதகமான களம் அல்ல. சன்னங்களையும், குண்டுகளையும் அள்ளியிறைத்த வண்ணம் முன்னேறும் படை நகர்வை இடைமறிப்பதென்பதும், மட்டுப்படுத்தப்பட்ட படைக்கல வளத்தினையே கொண்ட புலிகளுக்குச் சாத்தியமற்ற காரியம்.

அவதானித்து, இனங்கண்டு, குறிபார்த்து சண்டையிட்டு, படைக் கல வளங்களை தேவைக்கு அளவாக மட்டுமே பயன்படுத் துவது என்பது பகல் சண்டைகளிலேயே சாத்தியமானது. இரவிலெனில், எதிரியின் நிலைகள் அசைவுகள் பற்றிய தெளி வான வேவுத் தகவல்கள் இருந்தாலே அது முடியும். எங்கு வருகிறான்? என்ன செய்கிறான்? எப்படி அசைகிறான்? எவ்வித வியூகத்தை இடுகிறான் என்பதை அறிய முடியாத இருளுக்குள் நகரும் துருப்புக்களைத் தடுத்துமறிக்க நினைத்து எதிர்



கொள்வது, அழிவைத் தருகின்ற ஒரு களமாகவே முடியும்.

அந்த இரவு நடவடிக்கையில், மேற்குத் திசையில் 6 கிலோ மீற்றர்கள் வளைந்து நகர்ந்த துருப்புக்கள், விடியும் பொழுதில் உருத்திரபுரம் கட்டுக்குளத்துக்கருகில் நிலைகொண்டனர்.

இரண்டாம் கட்டப் படையெடுப்பில் மிகக்கடுமையாகச் சண்டை யிட்டு வழிமறித்து மோதிய புலிகள், மூன்றாம் கட்டத்திலும் அதே வகையான முறியடிப்புச் சமரை நிகழ்த்துவர் என்பதைத் தான் ஏற்கனவே எதிரி எதிர்பார்த்திருந்தான். சண்டைக்கு அரண் செய்யப்பட்டிருக்கும் - காப்பு மிகுந்த - பிரதேசத்தில் மட்டு மன்றி, சண்டைக்குத் தயார் செய்யப்படாத காப்புகளற்ற - பிர தேசத்திற்கு சண்டையரங்கு மாற்றப்பட்டாலும் கூட

அதேவகை யான முறியடிப்புச் சமரை உக்கிரமாக நிகழ்த்துவர் என்றும் அவன் நம்பினான் அப்படி நடக்க வேண்டுமென்றுதான் விரும் பினான். அப்போது - அவர்கட்கு வாய்ப்பற்ற பிரதேசத்தில் தமக்கு முட்டாள் தனமாக முகம் கொடுக்கும் புலிகளுக்கு, பாரிய உயிரழிவை வழங்கலாம் எனத் திட்டமிட்டான்.

"எதிரி எதை விரும்புகின்றானோ அதை நீ செய்யாதே" என்பது ஒரு போரியல் அறிவுரை. புலிகளும், எதிரி விரும்பிய - புத்தி சாலித்தனமற்ற அந்த முடிவை எடுக்கவில்லை.

போரரங்கை வழிநடத்திக்கொண்டிருந்த தளபதிகள் பானு, தீபன் ஆகியோர்.

மாற்றமடைகின்ற களநிலவரங்களுக்கு ஏற்ப உடனுக்குடன் அறிவுறுத்தல்களை வழங்கிக்கொண்டிருந்த தலைவர் அவர் களின் ஆலோசனைக்கிணங்க, சமர்க்களத்தில் மாற்றத்தைச் செய்தனர்.

தம்மை அழிப்பதற்கென்றே திட்டமிட்டுக் கவர்ந்திழுக்கப்படும் அந்தப் பாதகமான மரபுவழிச் சண்டைக் களத்துக்குள் ஈர்க்கப் படாமல் புலிகள் விலகிக்கொண்டனர். ஆட்பல, படைக்கல வளங்கள் பற்றாக்குறையான - உள்ள வளத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய - புலிகளைப் போன்ற ஒரு கொரில்லா இயக்கத்திற்கு, அத்தகைய விலகல் அத்தியவசியமானது.

எதிரியின் தந்திரோபாயப் போர்முறை நகர்வுக்கு ஏற்ப, தமது போர்முறையின் தந்திரோபாயத்தையும் புலிகள் உடனடியாக

மாற்றினர்.

ஏதிரியை இடைமறித்துத் தடுத்துச் சமரிடுவதற்குப் பதிலாக.

அவனது நகர்வுக்கு எதிராக மட்டுப்படுத்தப்பட்ட சண்டை யொன்றை நடாத்தியபடி அவனை முன்னேற அனுமதித்து விட்டு.

வெற்றிக்கு வாய்ப்பான, சாதகமான" கள நிலைமைகளில் ஊடுருவற் தாக்குதல்களை நடாத்தி அவனுக்கு இழப்பை உண்டுபண்ணும் போர்முறைக்குப் புலிகள் மாறினர்.

புலிகளை சண்டைக்கிழுத்துக் கொல்லும் நுட்பமான திட்டம்

தவிடுபொடியானது மட்டுமல்ல எதிரிடையாக -

தம் வரலாற்றில் என்றுமே சந்தித்திராத ஒரு முறியடிப்புத் தாக்குதலுக்கும் சிங்களப்படை இலக்கானது.

2 ஆம் நாள் இரவு உருத்திரபுரம் கட்டுக்குளம் வரை நகர்ந்து நிலைகொண்டிருந்த படையினர், 3 ஆம் நாள் காலை, அங் கிருந்து 8 ஆம் வாய்க்கால்பகுதியை நோக்கி முன்னேறிய போது.

துருப்புக்களின் முன்னணித் தாக்குதற்படைப் பிரிவின் நகர் வினுள், சிறியளவான ஒரு திடீர் ஊடுருவற் தாக்குதலைப் புலிகள் நடாத்தினர்.

2 அல்லது 3 யுத்த "ராங்க்"குகளைச் சேதப்படுத்தியதுடன், ஜி.பி.எம்.ஜி, எல்.எம்.ஜிகள் உட்பட 12 ரைக்விள்களைக் கைப் பற்றினர்.

இந்தச் சண்டையை அடுத்து மறுநாள் எதுவித நகர்வையும் மேற்கொள்ளாது அமைதியாக இருந்த எதிரி - அதற்கடுத்த நாள் வேறொரு புதுவழி மூலம் நகரத் தயாராகிக்கொண்டிருந்த போது.

5 ஆம் நாள் - 26 ஆம் திகதி வியாழக்கிழமை - "சத்ஜய" துருப்புக்களுக்கு அழிவுக்குரிய நாளாகவே விடிந்தது.

அன்றுதான் பேரழிவு மிக்க அந்தப் பெருந்தாக்குதலை அவர்கள் எதிர்கொண்டனர்.

உருத்திரபுரம் புனித பற்றிமா கல்லூரிக்கருகில் நிலைகொண் டிருந்த "சத்ஜய" துருப்புக்களின் முன்னணிப் பகுதிக்குள் மூன்று முனைகளில் ஊடறுத்து நுழைந்த புலிகள், எதிரிக்கு மரண அடியைக் கொடுத்தனர். அந்த முன்னரங்க நிலைகளில் நிறுத் தப்பட்டிருந்த சிறப்புக் "கொமாண்டோ"ப் படையணிகளைச் சித றடித்தனர்.

காலை 5.30 மணியிலிருந்து 3 மணிநேரம் அந்த உக்கிரமான அதிரடித் தாக்குதலைப் புலிகள் நிகழ்த்தினர். வான்படையின் போர்விமானங்கள், "ஆட்லறி"கள், யுத்த "ராங்க்"குகள் மற்றும் கனரக - சிறுரக போர்க்கருவிகள் சகிதம் அந்தத் தாக்குதலை முறியடிக்கப் பகைவன் எடுத்த உச்சகட்ட முயற்சியை முறியடித்த புலிகள், தாக்குதலை வெற்றிகரமாக பூர்த்திசெய்த பின்பு களத்திலிருந்து வெளியேறினர்.

குறைந்தது 200 வரையான சிங்களச் சிப்பாய்கள் அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்பது உறுதியானது. 190 படையினர் கொல்லப்பட்டதாக சண்டே ரைம்ஸ் தனது 29.09. 1996 ஆம் திகதிய இதழிலும், 206 படையினர் கொல்லப்பட்ட தாக மிட்வீக் மிறர் தனது 16.10.1996 ஆம் இதழிலும் குறிப் பிட்டுள்ளன. 32 ஆயுத கருவிகளைப் புலிகள் கைப்பற்றினர். புலிகளின் 42 வீரர்கள் அந்தக் களத்தில் வீழ்ந்தனர். கரும் புலிகளின் அணியெதுவும் தாக்குதலில் பங்கேற்கவில்லை. ஆனால், சிங்கள அரசு, தாக்குதலைத் தாம் முறியடித்ததாகவும், அதில் புலிகளின் தற்கொலைப் படையினர் உட்பட 450 புலிகள் கொல்லப்பட்டதாகவும், அவர்களில் 136 போரின் சடலங்களைத் தாம் மீட்டுள்ளதாகவும் அப்பட்டமான பொய்ப் பிரச்சாரங்களைச் செய்தது. எனினும், இந்தத் தாக்குதலின் போது எமது 17 மாவீரர்களின் உடல்கள், களத்திலிருந்து மீட்டுவரப்பட முடி யாமல் விடுபட்டுவிட்டன என்பது உண்மையாகும். களப் பிரதேசத்தில் ஆங்காங்கே வயல் வெளிகளிலும், வீதியோரங் களிலும் தாம் பொறுக்கியெடுத்த 100 வரையான புலிகளின் உடல்களை ஒப்படைப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங் கம்மூலம் அரசு அறிவித்தது. எமது மாவீரர்களின் உடல்களைப் பெறுவதற்குச் சம்மதம் தெரிவித்துக் காத்திருந்தபோதும், பின்னர் உடல்களை அரசு வழங்கவில்லை.





6 ஆம் நாள் - சண்டையின் பிரதான மையமும், புலிகளின் கணிசமான சண்டையணிகளும் உருத்திரபுரம் பகுதியில் நிலைகொண்டிருந்தவேளை.

திடீரென, அதிகாலையில், பரந்தன் முன்னணி நிலைகளிலிருந்து கரடிப்போக்குச் சந்தியை நோக்கி, பிரதான வீதிக்கு மேற்குக் கரையால் நகர முற்பட்ட பகைவனை.

ஏற்கனவே அரண் செய்யப்பட்டிருந்த காப்பான நிலைகளிலிருந்து உக்கிர எதிர்த் தாக்குதலை நிகழ்த்திய புலிகள், பலத்த இழப்பைக் கொடுத்து வழிமறித்து நிறுத்தினர்.

7 ஆம் நாள் - மீண்டும் உருத்திரபுரப் பகுதியிலிருந்து, ஜெயந்தி நகரூடாக நகர்ந்த துருப்புக்கள் மீது, குருகுலத்திற்கு அருகில் புலிகள் ஒரு அதிரடியைக் கொடுத்தனர். யுத்த "ராங்க்" ஒன்று முழுமையாக அழிக்கப்பட்டது.

8 ஆம் நாள் - குருகுலப் பகுதியிலிருந்து திருநகரூடாக ஒரு அணியும், பரந்தனிலிருந்து இன்னொரு அணியும் கிளிநொச்சியை நோக்கி நகர்ந்தபோது.

திருநகரூடாக நகர்ந்த அணி கிளிநொச்சி மருத்துவமனையையும், பரந்தனிலிருந்து நகர்ந்த அணி கரடிப்போக்கு புனித திரேசா கல்லூரியையும் அடைந்தன. இந்தச் சண்டைகளில் 2 ரைவிள்கள் கைப்பற்றப்பட்டன.

9 ஆம் நாள் - "சத்ஜய" 3 ஆம் கட்டத்தின் இறுதி நாள் - புரட்டாதி 30 ஆம் திகதி, ஜெயந்திநகர், பகுதியிலிருந்து தென்திசையால் நகர்ந்த அணி, அம்பாள்குளம் சந்தியூடாக வளைந்து, டிப்போ வீதிவழியாக பிரதான வீதியை அடைந்தது.

சத்ஜய படையெடுப்பின் 3 ஆம் கட்டம் முடிவடைந்துவிட்டது.

இப்போது - ஆனையிறவுத் தளத்திலிருந்து, கிளிநொச்சி மத்திய கல்லூரி வரை, பிரதான வீதியை மையப்படுத்தி 3 கிலோமீற்றர் அகலத்தில் சிங்களப் படைகள் நிலைகொண்டுள்ளன.

"சத்ஜய" 3 ஆம் கட்டச்சமரில் தனது 269 படையினர் உயிரிழந்ததாக, சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் கூறுகிறது. எனினும், களத்திலிருந்து கிடைத்த செய்திகள், 500 இற்கும் குறையாத படையினர் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்துகின்றன. "சத்ஜய"வில் உயிரிழந்த படையினரின் தொகையை அரசு அரைப்பங்காகக் குறைத்தே வெளிப்படுத்தியது." என்று திரு.ரணில் விக்கிரமசிங்கா, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்திலும், "கொழும்பு மாவட்டத்திற்கு மட்டும் 300 படையினரின் சடலங்கள் வந்தன. ஏனைய மாவட்டங்களிற்கு எத்தனை வந்தனவோ தெரியாது" என கொழும்பு மாவட்ட உறுப்பினர் அல் ஹாஜ் எம்.எச். முகமட், நடாளுமன்ற உரையிலும் தெரிவித்திருப்பது இங்கு கவனத்திற்குரியதாகின்றது. "சத்ஜய" 3 ஆம் கட்டச்சமரில் எமது 133 வீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

கிளிநொச்சிச் சமரின் போரியல் பரிமாணம் வித்தியாசமானது வழமையைவிட மாறுபட்டது தமிழீழப் போரின் புதிய கட்டமொன்றைப் புலப்படுத்துவது. தனது யுத்த சரித்திரத்தில் முதற்தடவையாக விடுதலைப் புலிகளின் படைத்துறையானது, மரபுவழிச் சமர் ஒன்றை வெற்றிகரமாகக் கையாண்டுள்ளது. ஒப்பீட்டு ரீதியில் - "றிவிரச" படையெடுப்புக்கு எதிரான சமரை விடவும், "சத்ஜய" படையெடுப்புக்கு எதிரான சமர் முன்னேற்றகரமானது என்று சொல்லலாம். முன்னைய சமர்களில்



கிடைத்த அனுபவங்களும், புலிகள் புதிதாகக் களத்திலிறங்கிய போராயுதங்களும் இந்த மேம்பாட்டில் பங்கு வகிக்கின்றன. புலிகளின் கைகளிற்கு 120 மில்லி மீற்றர் மோட்டர்களினதும் மற்றும் பெயர் குறிப்பிட முடியாத சுடுகருவிகளினதும் வருகை, மரபுவழிச் சமர் முறையை எதிரிக்கு முதற்தடவையாக சிக்கலுக்குரிய தாக்கியுள்ளதுடன், மரபுவழிச் சமரொன்றைச் சந்திக்கவல்ல போர்த்திறனின் ஆரம்பக்கட்டத்தைப் புலிகளுக்கும் வழங்கியுள்ளது.

"சத்ஜய"வின் 2 ஆம் கட்டமும் 3 ஆம் கட்டமும், புலிகளது போர் வலுவின் இருவேறு பரிமாணங்களைக் காட்டுகின்றன.

நிலத்தை இழந்துவிடாமல் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடனும், அதற்காக எத்தகைய உயிர் விலையைக் கொடுக்கவும் தயாரான நிலையுடனும் இருந்தால், படையெடுப்பு நடவடிக்கையொன்றை முழுமையாகத் தடுத்து முறியடிக்கலாம் என்பதற்கு, 2 ஆம் கட்டச்சமர் சான்று.

ஆட்பலத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகத் தந்திரோபாயப் பின்வாங்கலொன்றைச் செய்யவேண்டியிருந்தது. ஆனால் அதற்காக, நிலத்தைத் தற்காலிகமாக இழக்க - விட்டுக்கொடுக்க - நேர்ந்தாலும் கூட, படையெடுப்பு நடவடிக்கை ஒன்றை எதிர்கொண்டு மோதி, குறைந்த சேதத்துடன் எதிரிக்கு மிகக் கூடிய அழிவைக் கொடுக்கமுடியும் என்பதற்கு, "சத்ஜய"வின் 3 ஆம் கட்டச் சமர் சான்று.

கெரில்லாப் போருபாய யுத்த முறையில் புலிகள் பெற்றுவிட்ட பூரணப்பட்ட வளர்ச்சி நிலைக்கு, முல்லைத்தீவுத் தாக்குதல் ஒரு குறியீடு. மரபுவழி யுத்த முறையில் ஈடுபட புலிகள் பெற்றுள்ள புதிய போர் வலுவுக்கு, கிளிநொச்சிச் சமர் ஒரு அடையாளம் இதனை - தமிழீழ யுத்தகளத்தில் வருங்காலத்தில் நிகழப்போகும் பெரும் மாற்றங்களின் எதிர்வுகூறல் என்றுதான் சொல்ல வேண்டும்!

தி. இனியவன்

ஐப்பசி – கார்த்திகை 1996 விடுதலைப்புலிகள்


PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com | info@pspmotors.com


வேலை இழப்பா?
வருமான பிரச்சனையா?
வேலை தேடுகிறீர்களா?
கவலையை விடுங்கள்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
வாருங்கள் உங்கள் வாழ்க்கைப் பயணத்தில்
வழிகாட்டும்
உங்கள் நண்பன்
நாதன் பாலசிங்கம்
416.513.1000


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA
SUBRA MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330
TD Canada Trust | Scotiabank | FIRST NATIONAL | radius financial
RFA | EQUITABLE BANK | HOME TRUST | MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1



# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வ

# திருமலை – மூதூர் கடற்கரைச்சேனைப் படுகொலை 08, 09, 10. நவம்பர் 1985

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம், ஒன்பதாம், பத்தாம் திகதி களில் கறடபடையினர், விமானப் படையினர், இராணுவத்தினர் கூட்டாக இணைந்து மூதூர் கடற் கரைச்சேனைப் பகுதி மீது தாக் குதல் நடத்தினார்கள். இத்தாக் குதலில் தரை வழியாற் சென்ற இராணுவத்தினரால் ஆலயங்களில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் மோசமாகத் தாக்கப்பட்டார்கள். வீடுகளிலிருந்த பலர் இராணுவத் தினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரி ழந்தார்கள். உயிரிழந்தவர்களின் உடல்களை இராணுவத்தினர் வீடுகளுடன் சேர்த்து எரியூட்டினர். ஆலயங்களிற் தங்கியிருந்த எழு பதிற்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்து அழைத்துச் சென் றனர். இவர்கள் இதுவரை திரும்பி வரவில்லை. மூன்று நாள் தாக் குதலில் இருபதிற்கும் மேற்பட்டவர் கள் உயிரிழந்தார்கள். பலர். காயம டைந்திருந்தனர். நூறிற்கும் மேற் பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன.

# தம்பலகாமம் படுகொலை 12.11.1985

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி திருகோண மலை மாவட்டத்தின் தம்பலகாமத் தில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒன்பது தமிழர்கள் சுடப்பட் டனர். தம்பலகாமத்தில் இதே இடத்தில் நவம்பர் மாதம் இருபத்த றாம் திகதி (1985) அன்று இராணு வத்தினர் மூன்று விவசாயிகளைச் சுட்டனர். பின்னர் அவர்கள் எரியூட் டப்பட்டனர்.

தம்பலகாமம் கோயிலடியில் நடந்த வேறொரு சம்பவதில் ஐந்து தமிழர் கள் கடையினுள் வைத்து உயி ருடன் எரிக்கப்பட்டனர். இதில் குபேந்திரன், நவரட்ணம் என்போர் உயிரிழந்தனர். மிகுதி மூவரும் எரிகாயத்துடன் மீட்கப்பட்டனர்.

# கந்தளாய்ப் படுகொலை 09.11.1985

கந்தளாய்ப் பிள்ளையார் கோயில டியில் வசித்த திரு. மயில்வாகனம் என்பவரது வீட்டிற்கு 09.11.1985 அன்றிரவு ஆயுதம் தரித்த சிங்கள இராணுவ படைகள் சென்று வீட்டி லிருந்த ஆறு பேரையும் ஆயுத முனையில் கடத்திச் சென்றார்கள். பின்னர் இவர்களின் உயிரற்ற உடல்கள் அல்லை வீதியில் நான் காம் கட்டைப் பகுதியில் மிகவும் மோசமான நிலையிற் காணப் பட்டன. கடத்திச் செல்லப்பட்ட ஆறு பேரில் மயில்வாகனத்தின் இரண்டு மகள்களும் அடங்குவர். இவர்கள் இரண்டு பேரின் பிரேத பரி சோத னையின் படி இவர்கள் மோசமான முறையில் பாலியல் வல்லுறவிற் குட்படுத்தப்பட்ட பின்னரே படு கொலை செய்யப்பட்டடுள்ளார்கள் என்பது தெரியவந்தது.



# மூளாய் வைத்தியசாலைப் படுகொலை 05.11.1987






மூளாய்க் கிராமம், யாழ். மாவட் டத்தில் வலிகாமம் மேற்கு சங் கானைப் பிரதேசசெயலர் பிரிவினுள் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு மருத்துவ வசதியினை வழங்கும் இடமாக மூளாய் வைத்தியசாலை அமைந் துள்ளது.

பெரும் இன்னல்களுக்கும், பெரும் மருத்துவ நெருக்கடிகளுக்கும் மத் தியில் வாழ்ந்த மூளாய்க் கிராமத்து மக்கள், 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி சிகிச்சைக்காக மூளாய் வைத்தியசாலையில் இருந் தபோது இந்திய இராணுவத்தின ரின் பீரங்கித் தாக்குதலிற்குள்ளா கினர். ஐந்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்ததுடன், பலர் காய மடைந்தார்கள். மருத்துவமனை யும் சேதமடைந்தது.

05.11.1987 அன்று மூளாய் வைத் தியசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. நாகர் மகேந்திரன் (44)
2. கந்தையா மகாதேவன் (48)
3. கந்தசாமி சிறீதரன் (18)
4. ஜயாத்துரை பேரின்ப நாயகம் (58)
5. யோசேப் யோகராசா (35)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

# நெடுங்கேணிச் சந்திப் படுகொலை 11.11.1987

வவுனியா மாவட்டத்தின் வடக்கே அமைந்துள்ள வவுனியா வடக்குப் பிரதேசசெயலர் பிரிவின் பிரதான நகரமாக நெடுங்கேணி உள்ளது. இங்க வாழ்கின்ற மக்கள் பெரும்பாலானோர் விவசாயத்தையும் கூலித்தொழிலையுமே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் விடுதலைப்புலிகளிற்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் மோதல் தொடங்கிய பின் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, தண்ணீரூற்றுப் போன்ற பிரதேசங்களில் இந்திய இராணுவத்தின் இராணுவ நடவடிக்கை நடைபெற்ற போது, அக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெருமளவானோர் இடம்பெயர்ந்து நெடுங்கேணியிலும் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தஞ்சமடைந்த மக்கள் பாடசாலைகள், கோயில்கள், பொது இடங்கள் என்பவற்றில் தங்கினார்கள். மக்கள் செறிவாகத் தங்கியிருந்த கட்டிடங்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்குவானூர்திகள் நடத்திய றொக்கற் தாக்குதலில் பதினைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

**நெடுங்கேணி, மாறாஇலுப்பையைச் சேர்ந்த ட. தவமணி சம்பவம் பற்றி விபரிக்கையில்:**

“என்னுடைய மகள் நந்தினிக்கும் சுகயீனம் என்ற காரணத்தால் நெடுங்கேணி வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெறவேண்டி வந்தது. அதனால் நானும் அங்கு நின்றிருந்தேன். அன்றைய நாள் மாலை 05 மணியிருக்கும் இந்திய இராணுவத்தின் எம்.ஐ.ரக உலங்குவானூர்தி ஒன்று வைத்தியசாலையைச் சுற்றி வந்தது. அங்கு கூடி நின்ற மக்கள் அனைவரும் வைத்தியசாலை என்பதால், குண்டு போடமாட்டார்கள் என்ற எண்ணத்தில் வைத்தியசாலைக்குள் ஓடி வந்தார்கள். அதை அவதானித்த உலங்குவானூர்தி வைத்தியசாலையின் முன்பக்கத்தில் குண்டுகளை வீசியது. இதனால் குண்டுச் சன்னங்கள் எங்கும் பட்டு கண்ணாடி யன்னல்கள் அனைத்தும் நொருங்கி வீழ்ந்தது. அந்த நேரந்தான் எனக்குத் தலையிற் காயம் பட்டது. இதன் போது காயமடைந்தவர்கள் விழ ஏனையோர் கலவரப்பட்டு ஓடினார்கள். மகளைக் கூட்டிக்கொண்டு பின்புறமாக ஓடலாமென எத்தனித்த போது மகளின் காலால் இரத்தம் வழிவதை அவதானித்தேன். அத்துடன் மகளும் மயக்கமுற்று வீழந்துவிட்டார். பின்னர் துணைக்கு எவரும் இல்லாத நிலையில் கையில் அகப்பட்ட துணியால் நானே மகளின் காலுக்குக் கட்டுப்போட்டதுடன், எனது காயத்திற்கும் கட்டுப் போட்டேன். வைத்தியசாலையிலிருந்த மருத்துவர்கள் அனைவரும் பாதுகாப்புத் தேடி ஓடிவிட்டதால் மருந்து கட்டக்கூட ஒருவரும் இருக்கவில்லை. இதனால் தனியார் மருத்துவமனை வைத்தியரின் உதவியுடன் இரவு 10:00 மணியளவில் எங்களுக்கு மருந்து கட்டப்பட்டது. அதன்பின்னர் அடுத்தநாள் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருந்ததால், வாகனங்கள் எதுவும் இருக்கவில்லை. பின்னர் பயணிகள் பேருந்து ஒன்றின் மூலமாக வவுனியா மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டோம். அதன் பின்னர் மூன்று மாதங்கள் தங்கிச் சிகிச்சை பெற்றோம். தற்போது கூட எனது தலையில் குண்டுச் சன்னம் உள்ளதால் பெரியளவில் ஒருவித வேலையும் செய்யமுடியாதுள்ளது. அதே போன்று தான் மகளின் நிலையும் உள்ளது. மேற்படி சம்பவத்தின் போது நெடுங்கேணி வைத்தியசாலையில் நின்றிருந்த பதினைத்து பேர் இறந்தனர், இருபத்தைந்து பேர் காயமடைந்ததாகக் கேள்விப்பட்டோம்.”

**இச்சம்பவம் தொடர்பாக முள்ளியவளையைச் சேர்ந்த சிவராசா யோகரத்தினம் தெரிவிக்கையில்:**

“1987 ஆம்ஆண்டு இந்திய இராணுவம் தண்ணீரூற்று முள்ளியவளைப் பிரதேசத்தில் தாக்குதல்களை மேற்கொண்ட நேரத்தில் அங்கிருந்த மக்கள் பீதி காரணமாக இடம் பெயர்ந்துகொண்டிருந்தார்கள். அந்த நேரம் எமது கிராம சேவையாளராக இரந்த சிதம்பரப்பிள்ளைக்கு உதவியாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். இந்தவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கு எங்களால் முடிந்த வாகன உதவிகளைச் செய்து நெடுங்கேணிக்கு கொண்டுசென்று பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தங்க வைத்து நிவாரணப் பணிகள் செய்துகொண்டிருந்தோம். அன்றைய நாள் மாலை 5:00 மணியிருக்கும் இந்திய இராணுவத்தின் முதலைக் கெலி என்றழைக்கப்படும் எம். ஐ. 24 ரக உலங்குவானூர்தி வானத்திற் சுற்றிக்கொண்டிருந்தது. இதனாற் பயமடைந்த நாங்கள் பாதுகாப்புத் தேடி ஒளிந்துகொண்டோம். அந்த நேரம் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்னால் முதலாவது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக அகப்பை வாங்க வந்த எமது பகுதி இலங்கை போக்குவரத்துக் கழக பேருந்துச் சாரதியான பொன்னம்பலம் இராமநாதன் என்பவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் கரியாலயத்தில் வேலை செய்த மகாதேவன் என்பவரின் மகன் மகேந்திரன் ஒரு உழவு இயந்திரத்தில் வந்துகொண்டிருந்தார். அவரும் அவ்விடத்திலேயே மரணமானார். அதே போன்று குளவிசுட்டானைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் கரியா லயத்தில் வேலைசெய்யும் சிவராசா என்பவரின் சகோதரன் தம்பிஐயா அண்ணை என்பவரும் இடம் பெயர்ந்த மக்களை வாகனத்தில் ஏற்றியிறக்க உதவிபுரிந்த பாரவூர் திச் சாரதி துரைச்சாமி என்பவரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்கள். அதன்பின்னர் இரண்டாவது தாக்குதல் இடம் பெயர்ந்து வந்து நெடுங்கேணி மகாவித்தியாலயத் தில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது நடத்தப்பட்டது. இதன் போது பல பொதுமக்கள் உடல் சிதறிய நிலை யில் இறந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதன் பின்னர் இறந்தவர்கள் காயமடைந்தவர்களென அனைவருக்கும் நெடுங்கேணிப் பகுதியில் தனியார் வைத்தியசாலை நடத்தி வந்த வைத்தியர் ஜெயநாதன் மற்றும் வைத்தியர் கஜேந்திரா என்பவர்களுடன் அரச வைத்திய அதிகாரியும் இணைந்து சிகிச்சை செய்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவிற்கும் இறந்தவர்களை வீடுகளிற்கும் அனுப்பி வைத்தோம். இச்சம்பவம் நடந்து பல வருடங்கள் கடந்த நிலையிலும் , அதனை நினைக்கும்போது அனைத்துச் சம்பவங்களும் நேற்றைய தினம் நடந்ததுபோல் கண்முன்னே வருமள விற்கு அந்த நிகழ்ச்சி எனது மனதில் மாறாவடுவாகவுள் ளது.”




**11.11.1987 அன்று நெடுங்கேணிச் சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:**

1. கந்தையா சிறிதரன் (22)
2. கதிர்காமு கார்த்திகேசு (44)
3. தம்பையா நற்குணம் (31)
4. மகாதேவன் மகேந்திரன் (31
5. முகமதுசரிபு றகீம் (26)
6. முத்தையா துரைராசா (64)
7. அப்துல்காதர் முகமது லிமாஸ் (24)
8. பொன்னம்பலம் இராமநாதன் (-)




குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான சுப்பசொனிக் விமானக் குண்டு வீச்சு 13.11.1996







குருநகர்க் கிராமம் யாழ்ப்பாண நகரத்திலிருந்து தெற்குப் புறமாக இரண்டு மைல் தூரத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. குருநகர்ப் பகுதியில் 1861 ஆம் ஆண்டு அடிக்கல் நட்டப்பட்டு 1881 ஆம் ஆண்டு புனித யாகப்பர் ஆலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயச் சூழலில் 1973 ஆம் ஆண்டு இறந்த "அருட்திரு யோசவ் றேயை" அவர்கள் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்ட நினைவுக்கல்லும் உள்ளது.

13.11.1993 அன்று சனிக்கிழமை காலை 7:20 மணிக்கு அவ்வூர் மக்கள் இறைவழிபாட்டுக்காக ஆலயத்தில் ஒன்று கூடியிருந்த நேரம் குடாநாட்டு வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிங்கள விமானப்படையின் சீன நாட்டுத் தயாரிப்பான "சுப்பர்சொனிக்" விமானங்கள் இரண்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது இரு குண்டுகளை வீசின. இவ்வாலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்தவர்களில் பதின்மூன்று பேர் உயிரிழக்க, இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததுடன், தேவலாயமும் சேதமடைந்தது.

குருநகர் புனித யாகப்பர் தேவாலயம் மீதான தாக்குதலை அரசியற் தலைவர்களோடு உலக நாடுகள் பலவும் கண்டித்திருந்தன. தேவாலயத்தின் மீதான் குண்டு வீச்சினால் மண்டபத்தினைத் தாங்கிய தூண்கள் துண்டங்களாகின. அந்தத் தூண்கள் இன்றும் யாகப்பர் சிலையின் அருகே ஞாபகச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளன. புனித யாகப்பர் ஆலயத்தில் உயிர் நீத்த மக்களின் நினைவாக குருநகர் மக்களால் ஆலயப் படிக்கட்டில் "நீதிக்கான நினைவாலயம்" என்னும் நினைவுச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

**13.11.1996 அன்று புதின யாகப்பர் தேவாலயத்தில் படுகொலையில் கொல்லப்பட்டடோர் விபரம்:**

1. குரூஸ் அக்கினேஸ் (60)
2. கபிரியஸ் அன்ரன் (48)
3. அன்ரன் புஸ்பலீலா (41)
4. அன்ரன் அஞ்சலா (40)
5. அக்கினேஸ் குருசுப்பிள்ளை (80)
6. ஆரோக்கியநாதர் சில்வன் சஜீவன் (18)
7. ஜோன்லூத்து சேவியர் (45)
8. தோமஸ் பெனடிற் (55)



9. மேரி ஜெயசீலி தாசியஸ் (50)
10. மேரிசிந்துயா மதுரநாயகம் (2.5)
11. மேரிவெண்ணிலா அந்தோனிப்பிள்ளை (27)
12. சிங்கராயர் ஜானி கனோஜி (08)
13. சிங்கராசா யூஜின் காமலிற்றா (15)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# பாலிநகர் படுகொலை 03.11.1999

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவில் வவுனிக்குளத்தினை அண்மித்த பகுதியிற் பாலிநகர்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் விவசாயம் மற்றும் வியா பாரத் தொழில்களில் ஈடுபட்டுவந் தனர். பாலிநகரைப் பொறுத்தவரை அது 1999 ஆம்ஆண்டு காலப்பகுதி களில் அதிகளவு மக்கள் தொகை யை கொண்டிருந்தது. அம்மக்களில் பெரும்பாலனோர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மாங்குளம் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந் து வந்தவர்களாவர். பாலிநகர்ச் சந்தி இக்காலப் பகுதியில் சிறு நகரப் பண்பு கொண்டதாகவும், அதிக மக்கள் செறிவைக் கொண்ட தாகவும் காணப்பட்டது.

03.11.1999 அன்று பாலிநகர் மக்கள் தமக்கு நடக்கவிருக்கும் அவலத்தை அறியாதவர்களாக தமது வழமையான செயற்பாடு களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் கள். அன்று காலை பாலிநகர்ச் சந்தியில் மக்கள் தமது பல்வேறு பட்ட தேவைகளுக்காகக் கூடிநின்ற போது, காலை 11:30 மணியளவில் சிங்கள விமானப்படையின் "கிபிர்" வமானங்கள் குண்டுத்தாக்குதல் களை நடத்தின.

பாலிநகர்ச் சந்தி யில் விமானம் குண்டத்தாக்குதலை மேற்கொண்டு விட்டது என்பதை அறிந்த மக்கள், தமது உறவினர் களைத் தேடித் தாக்குதல் நடந்த இடத்துக்கு ஓடிச் சென்று கொண்டிருந்தபோது அம் மக்கள் மீதும் "கிபிர்" விமானங்கள் மீண்டும் தாக்குதலை நடத்தின. அன்றைய விமானத் தாக்குதலில் ஆறு பொதுமக்கள் உடல் சிதறி உயிரிழந்ததுடன், எட்டுப் பேர் காய மடைந்தனர்.

**03.11.1999 அன்று பாலிநகர் படுகொலையில் கொல்லப்பட் டோர் விபரம்:**

1. பெருமாள் சுரேஸ்குமார் (18)
2. வீரையா துரைராசா (55)
3. தாமோதரம்பிள்ளை கிருஸ்ணராசா (60)
4. வைத்திலிங்கம் சுதாகர் (17)
5. கிருஸ்ணராசா ஜெய சீலன் (-)
6. குமாரவேலு புண்ணிய லிங்கம் (42)

குறிப்பு:- இச்சம்பவத்திற் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

# கிளிநொச்சி மருத்துவமனை அருகாமைப் படுகொலை 02.11.2006



கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை வளாகத்தை அண்மித்த பகுதிகளில் சிறீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் 2006 நவம்பர் 02 ஆம் நாள் பிற்பகல் 2 மணியளவில் நான்கு தடவைகள் குண்டத் தாக் குதல்களை மேற்கொண்டன. அதன்போது 16 குண்டகள் வீசப் பட்டன. இவற்றில் 15 குண்டுகள் வெடித்துள்ளன. இதன்போது பொது வைத்தியசாலைக்கு அருகிலிருந்த ஐவரும் உயிரிழந்துள்ளனர். உயிரி ழந்தவர்களில் இருவர் பாடசாலை மாணவர்கள். குண்டு வீச்சுத் தாக்குதல் காரணமாக உயிரிழந் தவர்களின் வீடு முழுமையாகச் சிதைவடைந்ததுடன் மேலும் கால்நடைகள் பலவும் பலியாகிய தோடு பயன்தரு மரங்கள் பலவும் அழிவடைந்தன.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவமனை வளாகத்தில் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக் குதலில் வைத்தியசாலை பலத்த சேதமடைந்தது. இங்கு வைத் தியசாலை ஊழியர்கள் மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற் றுவந்த மூன்று நோயாளர்களும் காயமடைந்துள்ளனர். விமானக் குண்டுச் சன்னங்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக் கட்டடத் தின் நோயாளர் விடுதிகளையும் தாக்கியுள்ளன. வைத்தியசாலை யின் கர்ப்பிணிப் பெண்களுக்கான பிரசவ விடுதி மற்றும் குழந்தை களுக்கான விடுதிகள் என்பவற்றை குண்டுச் சன்னங்கள் தாக்கியுள் ளன. அதனால் அவற்றின் கூரைப் பகுதிகள் மிக மோசமாகச் சேதடைந் துள்ளன. இதேவேளை சத்திர சிகிச்சைக் கூடம் உட்பட வைத்திய சாலையின் பல்வேறு பகுதிகளிலும் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன.

இத்தாக்குதலையடுத்து வைத்திய சாலை விடுதிகளிற் தங்கிநின்று சிகிச்சைபெற்றுவந்த 300 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள், வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கென வந்த 700 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் வைத்தியசாலை வளாகத்தை விட்டுச் சிதறி ஓடினர். நடக்கமுடியாத நோயாளரை உறவி னர்கள் வந்து கூட்டிச்சென்றனர். இத்தாக்குதலையடுத்து வைத்திய சாலையின் செயற்பாடுகள் அனைத் தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

இத்தாக்குதலின் காரணமாக பாடசாலை மாணவர்கள், மக்கள் என்ப பலரும் பெரும் அச்சத்துடன் வீதிகளிற் சிதறி ஓடினர். கிளிநொச்சி நகரப் பகுதி உட்பட கிளிநொச்சிப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் அச்ச மடைந்து வீதிகளிற் சிதறி ஓடினர். இதன் காரணமாக ஏ-09 நெடுஞ் சாலை மற்றும் உள் வீதிகள் அனைத்திலும் சன நெருக்கடி அதி கரித்திருந்தது. தாக்குதல் நடை பெற்ற இடத்தையும் இறந்தவர் களின் உடல்களையும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் நேரிற் சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக சிறீலங்கா விற்கு நிதி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் (ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கா) தூதுவர்கள் தமது கவலையினை வெளியிட்டுள் ளனர்.

**இதில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு:**

1. முருகேசு சண்முகரத் தினம் (56)
2. சண்முகரத்தினம் சசி (20)
3. சண்முகரத்தினம் கிரிசாந் (18)
4. முருகேசு மார்க்கண்டு (62)
5. இரத்தினம் சரஸ்வதி (-)













# முத்த வெளியில் திரண்ட சனங்கள்!

30.10.2023



இந்திய அமைதிகாக்கும் படையினரால் யாழ்.பொது வைத்திய சாலையில் தமிழ்மக்கள் கொல்லப்பட்ட நாள் அது என்பதனால், சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியை வேறொரு நாளில் வைக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேட்டிருந்தது. அக்கோரிக்கையை சந்தோஷ் நாராயணன் ஏற்கவில்லை. ஆனால் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் போரில் உயிர் நீத்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சியில் ஈழப்போரைப் பிரதிபலிக்கும் பாடல்கள் பாடப்பட்டன. அப்பொழுது அங்கு கூடியிருந்த மக்கள் ஆர்ப்பரித்து அதைக் கொண்டாடினார்கள்.

அது ஒரு மழை நாள். அன்று பின்னேரம் மழை விட்டுத் தந்தது. முத்த வெளியில் கடந்த 15 ஆண்டுகளில் இதுவரை காணாத சன வெள்ளம். அந்த இடத்தில் இதற்கு முன் வர்த்தகக் காட்சிகள் நடந்திருக்கின்றன. அவற்றுக்கும் மக்கள் திரண்டு வந்தார்கள். ஆனால் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சிக்கு முன்னப் பொழுதும் இல்லாத அளவுக்கு சனம் திரண்டது. முனியப்பர் கோயிலுக்கு முன்னுள்ள வெளியிலும் சாலைகளின் இரு புறங்களிலும் வாகனங்கள் வரிசையாக நின்றன. பால் வேறுபாடு இன்றி, வயது வேறுபாடு இன்றி பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சி அது. பாடகர்கள் பாடப் பாட அங்கு கூடியிருந்த இளையோர் உற்சாகமாக ஆடினார்கள்.

அது தமிழ் மக்களின் கூட்டு மனோநிலையைக் காட்டியது. அவர்கள் கொண்டாட விரும்புகிறார்கள். கொண்டாடுவதற்கு கிடைக்கும் எந்த ஒரு தருணத்தையும் அவர்கள் இழக்க விரும்பவில்லை. பெருவிழாக்கள், பெருஞ் சந்தைகள் தொடக்கம் தனிப்பட்ட கொண்டாட்டங்கள் வரை மக்கள் ஆடிப்பாடி சந்தோசமாக இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் சன்னியாசிகள் இல்லை. இச்சைகளைத் துறந்தவர்கள் இல்லை. எனவே கொண்டாடுவார்கள்.



அப்படிப்பட்ட கொண்டாட்டங்களை எப்பொழுது ஒழுங்குபடுத்த வேண்டும் எப்பொழுது ஒழுங்குபடுத்தக் கூடாது என்பதனை தீர்மானிக்க முற்படும் கட்சி அல்லது மக்கள் இயக்கம் ஒன்றில், ஏற்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அல்லது அங்கு திரளும் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். ஏற்பாட்டாளர்கள் கேட்கவில்லை என்று சொன்னால் தமது மக்களை அந்த நிகழ்ச்சியைப் புறக்கணிக்குமாறு கேட்க வேண்டும். ஆனால் அவ்வாறு தமிழ் மக்களை வழிநடத்தும் அளவுக்கு தமிழ் தேசியப்பரப்பில் ஒரு கட்சியோ மக்கள் இயக்கமோ இல்லை. அதாவது தமிழ் மக்கள் மத்தியில் பொதுக் கருத்தைத் திரட்டுமளவுக்கு சக்திமிக்க கட்சியும் கிடையாது; மக்கள் இயக்கமும் கிடையாது.

முதலாவதாக கட்சிகளிடம் 2009க்குப் பின்னரான இளைய தலைமுறையின் கூட்டு மனோநிலையை வசப்படுத்தவல்ல பொருத்தமான ஒரு கலைத்தரிசனம் இருக்க வேண்டும். சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியில் பங்கு பற்றிய ஊடகவியலாளர் ஒருவர் என்னிடம் கேட்டார்... மக்களுடைய இக்கூட்டு மனோநிலையை கட்சிகள் விளங்கி வைத்திருக்கின்றனவா? மக்களை விடுதலைக்கான கலையை நோக்கி ஈர்க்கத்தக்க செயல் திட்டங்கள் எந்த ஒரு கட்சியிடமாவது உண்டா? எந்த ஒரு கட்சியிடமாவது கலை பண்பாட்டு இயக்கங்கள் உண்டா? என்று.

கலை இல்லாத ஒரு படை மந்தப்படை என்று சீனப் புரட்சியின் தலைவர் மாவோ சே துங் சொன்னார். “பண்பாடுதான் தேசிய விடுதலையின் திறப்பு” என்று ஆபிரிக்க அறிஞரும் சுதந்திரப் போராட்டத் தலைவருமான அமில்கார் கப்ரால் சொன்னார்.

ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் எல்லா விடுதலை இயக்கங்களிடமும் கலை கலாச்சார அமைப்புகள் இருந்தன. ஆயுதப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கிய காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக் கழகம் என்ற அமைப்பு இயங்கியது. அது விடுதலையை ஒரு மறுமலர்ச்சியாகப் பார்த்தது. பண்பாட்டு மறுமலர்ச்சி. அரசியல் மறுமலர்ச்சி.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் கலை ஒரு பிரிக்கப்படவியலாத பகுதியாக இருந்தது. பொங்குதமிழ் பேரெழுச்சிகளிலும் அப்படித்தான். ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் அரசியல் அரங்கில் காணாமல் போனவற்றின் பட்டியலில் கலை பண்பாட்டு இயக்கங்களும் சேர்ந்து விட்டன. எழுக தமிழ்களுக்கு இசை இருக்கவில்லை; கலை இருக்கவில்லை.

பொங்குதமிழ் எழுச்சிகளை ஒழுங்கமைத்தவரும் அரங்கச் செயற்பாட்டாளரும் ஆகிய கலாநிதி சிதம்பரநாதன் கந்தர் மடத்தில் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம் என்ற பெயரில் ஓர் அமைப்பை நடத்தி வருகிறார்.

ஆனால் கட்சிகள் மத்தியில் அவ்வாறான கலை விளக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. தமது மக்களை தமது அரசியல் இலக்குகளை நோக்கித் திரட்டுவதற்குத் தேவையான கலைத் தரிசனம் எந்த ஒரு கட்சியிடமும் கிடையாது. சில பாடல்கள் சில நாடகங்கள் தவிர, கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் ஒரு பெரிய கலை வறட்சி நிலவுகிறது. கடந்த ஆண்டு நிகழ்ந்த கோட்டா கோகமவின் கலை வெளிப்பாட்டோடு ஒப்பிடுகையில் இது பாரதூரமான வறட்சி.

ஓர் ஆயுதப் போராட்டத்தின்போது சமூகம் பெருமளவுக்கு மூடப்பட்டிருக்கும். அது காவலரண்களால் திட்டவட்டமாக மூடப்பட்டிருக்கும். ஆனால் போரில்லாத நாட்களில் அவ்வாறல்ல. குறிப்பாக போரில் தோற்கடிக்கப்பட்ட ஒரு சமூகத்தை எப்படித் திறப்பது? எங்கே திறப்பது? எதை நோக்கித் திறப்பது? என்பதனை போரில் வெற்றி பெற்ற தரப்பே தீர்மானிக்கின்றது.

கடந்த 15 ஆண்டுகளில் அவ்வாறு திறக்கப்பட்ட வழிகளின் ஊடாக நுண்கடன் நிதி நிறுவனங்கள் வந்தன. பிளாஸ்டிக் வியாபாரிகளும் அரும்பொருட்களைக் கவர்ந்து செல்வோரும் வந்தார்கள். போதைப்பொருள் வியாபாரிகளும் முகவர்களும் வந்தார்கள். கிரீஸ் மனிதன் வந்தான். குள்ள மனிதன் வந்தான். வேறு யார் யாரோ எல்லாம் வந்தார்கள். இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட ஒரு மக்களை எப்படிப் பண்பாட்டு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தோற்கடிப்பது என்று சிந்தித்து திட்டமிட்டு வெளியில் இருந்து பல்வேறு வகைப்பட்ட சக்திகளும் தமிழ்ச் சமூகத்தில் உட் பாய்ச்சப்படுகின்றன.

ஒரு காலம் இளையவர்கள் உன்னதமான இலட்சியங்களால் வழிநடத்தப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது அப்படியல்ல. இளையவர்களை எப்படி அரசியல் நீக்கம் செய்யலாம்? அவர்களை எப்படிப் போதைக்குள் மூழ்கடிக்கலாம்? அவர்களுடைய கைகளில் எப்படி வாள்களைக் கொடுத்து மோதவிடலாம்? அவர்களுடைய நம்பிக்கைகளை; விசுவாசத்தை; கவனக் குவிப்பை எப்படி இடம் மாற்றலாம்? அவர்கள் மத்தியில் இருந்தே எப்படி முகவர்களை உருவாக்கலாம்? என்றெல்லாம் சிந்தித்து செயல்படுவதற்கு அரச பலமும் அரச வளங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அது ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்படுகின்றது; ஒருங்கிணைக்கப்படுகிறது. அது ஒரு பண்பாட்டுச் சிதைப்பு; ஒரு பண்பாட்டு நீக்கம். அதை எதிர்கொள்வதற்கு தமிழ்ச் சமூகம் தயாராக உள்ளதா? அதை குறித்து தமிழ்க் கட்சிகளிடம் பொருத்தமான அரசியல் கலைத் தரிசனங்கள் உண்டா?

இந்த மண் எங்களின் சொந்த மண் என்று பாடிய ஒரு மண்ணை விட்டு எப்படி வெளியேறலாம் என்று இளையவர்கள் சிந்திக்கும் ஒரு காலகட்டம் இது. வெளிநாட்டுக்கு போவதற்காக தங்களை தயார்படுத்தும் இளையோர் மத்தியில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாக அண்மையில் ஒரு மனநல மருத்துவர் சுட்டிக்காட்டினார். இது என்னுடைய நாடில்லை; இங்கே நான் இருக்கப் போவதில்லை, இருக்கின்ற கொஞ்ச காலத்துக்கு எப்படியும் இருந்து விட்டு போகலாம் என்று சிந்திக்கும் ஒரு போக்கு அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். எப்படியும் இருந்துவிட்டுப் போகலாம் என்பதுதான் பண்பாட்டுச் சிதைவு.

1956இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட பொழுது நாடாளுமன்றத்தில் கொல்வின்.ஆர்.டி.சில்வா பின்வருமாறு சொன்னார்... “தமிழர்களை நீங்கள் அவமதித்தால்; கேவலமாக நடத்தினால்; துஷ்பிரயோகம் செய்தால்; ஒடுக்கினால் அவர்களுக்குக் கரைச்சல் கொடுத்தால், அந்தப் போக்கின் விளைவாக சிலோனில் (இலங்கையில்) தனக்கென்று குறிப்பிட்ட ஒரு மொழியை, ஒரு பண்பாட்டைக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட அந்த இனத்துவ இருப்பிற்குள் இருந்து ஒரு புதிய தேசியவாதம் எழுவதற்கு நீங்கள் காரணமாக அமைவீர்கள். இப்பொழுது அவர்கள் கேட்பதை விடவும் அப்பொழுது அவர்கள் அதிகமாக கேட்பார்கள். அதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டிவரும்”

அதாவது பலமான ஒரு பண்பாட்டை கொண்டிருக்கும் தமிழர்களை ஒடுக்கினால் வரக்கூடிய விளைவுகளை குறித்து அவர் எச்சரிக்கின்றார். அதுதான் உண்மை. தமிழ் மக்கள் ஆழமான பண்பாட்டு வேர்களைக் கொண்டவர்கள். கீழடி ஆய்வுகளின்படி தமிழ் வேர்கள் மேலும் ஆழத்துக்குச் செல்கின்றன. ஆழமான பண்பாட்டு வேர்களைக் கொண்ட மக்களை; மிகப் பலமான பண்பாட்டு நடுத்தர வர்க்கத்தை கொண்டிருக்கும் மக்களை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கடித்தாலும், அரசியல் ரீதியாக, பண்பாட்டு ரீதியாகத் தோற்கடிப்பது கடினம் என்பதைத்தான் கடந்த 14 ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன.

ஆயுதப் போராட்ட காலகட்டமும் கடந்த 14 ஆண்டுகளும் ஒன்றல்ல. மாறிவரும் தொழில்நுட்பச் சூழலை; மாறிவரும் அரசியல் பண்பாட்டுச் சூழலை; தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் கூட்டுக் உளவியலின் மீது எப்படிச் செல்வாக்கு செலுத்துவது? அதை அரசியல் நீக்கம் செய்ய முற்படும் சக்திகளிடம் இருந்து அதை எப்படிக் காப்பாற்றுவது? அதைப் பண்பாட்டு நீக்கம் செய்ய முற்படும் சக்திகளிடம் இருந்து எப்படிக் காப்பாற்றுவது? அதை விடுதலைக்கான பண்பாட்டை நோக்கி எப்படி வழி நடத்துவது?

கொல்வின்.அர்.டி.சில்வா கூறியதுபோல தமிழ் மக்களின் தனித்துவமான பண்பாடுதான் தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் பிரதான மூலக்கூறுகளில் ஒன்று ஆகும். ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாக வனையும் அம்சங்கள் ஐந்து. நிலம் அதாவது தாயகம் இனம்; பொதுமொழி; பொதுப் பண்பாடு; பொதுப் பொருளாதாரம் என்பனவே அந்த ஐந்து மூலக் கூறுகளும் ஆகும்.

எனவே 2009 க்குப் பின்னரான பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்த விரும்பும் எவரும் அதன் தக்கபூர்வ விளைவாக தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுகிறார்கள். அதை மறுவளமாகச் சொன்னால் தமிழ்மக்களை ஒரு தேசமாக திரட்டாமல் கட்சிகளாகப் பிரிக்கும் எவரும் பண்பாட்டு விழிப்பை ஏற்படுத்த முடியாது.

நன்றி: நிலாந்தன்

# JATHU RENOVATION




உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com

# அகரம் Akaram

வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant

தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)

இவற்றிற்கான ஆலோசனைகளையும், தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள

அழையுங்கள் (Call):
437.345.4203

# The ESTATE
BANQUET AND EVENT CENTRE



The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"

The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar

430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com

Call today to Save energy

Free Estimate!
Call today
$50 OFF

Broken Glass...?
We will fix it within 24 hour.



Let us help with...

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

# PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# வன்னியின் ஆற்றங்கரைகளில் உறங்கும் முதுமனிதர்!

தி. தவபாலன்

## அக்கராயன் – ஆனைவிழுந்தானில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் சிற்பங்கள்




**இலங்கைத் தீவின் மூத்த நாகரிகத்துக்குரிய தொல் பொருட்கள் கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் எடுக்கப்பட்டுள்ளன.**

**இத்தகைய தொல்லியல் சான்றுகள் சிங்களப் பகுதகளில் எடுக்கப்படவில்லை. மனித சமுதாயம் தன் ஆரம்பகால உருவாக்கங்களை களிமண்ணால் செய்து சுட்டுப்பயன் பருத்தியுள்ளது. உலகளவில் இது 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானது. இதற்கான சான்றுகள் சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்டு காலக்கணிப்பும் செய்யப்பட்டது.**

தமிழகத்திலும் இப்படி எடுக்கப்பட்டன.

தமிழர் தாயகத்தில் இத்தகு சான்றுகள் மிகத் தொன்மையாக வன்னி - மன்னார் பகுதிகளில் எடுக்கப்பட்டுள்ளன. கற்கால மனித வாழ்வின் தொடர்ச்சி வன்னியிலேயே இருந்து வருகின்றது. கல்லாயுதங்கள் எடுக்கப்பட்ட சான்றுகளின்படி அவை ஒரு இலட்சத்து இருபத்தையாயிரத்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

இலங்கையில் உலோகப்பயண்பாடு 3,800 ஆண்டுகளின் முன் ஆரம்பமானது. இதற்கான சான்றுகள் மன்னார் மாந்தையில் மட்டுமே எடுக்கப்பட்டது. இலங்கையின் முதல் துறைமுகமான மாந்தையூடாக திருகோணமலை சேருவலை செப்புத் தாது இந்தியாவுக்கு ஏற்றுமதியானதாக தொல்லியல் சான்றுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளதாக சிறீலங்காவின் முன்னாள் தொல்லியல் ஆணையாளர் S.U. தெரனியகல அண்மையில் தெரிவித்திருக்கிறார்.

இதற்கடுத்தபடியான தொல்லியல் சான்றுகள் வன்னியில் அண்மைக்காலமாக அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

பூநகரியை மையமாகக் கொண்டு இயங்கிய கிராமங்கள் கிளிநொச்சி நகரம்வரை பரந்திருந்ததற்கான சான்றுகளாக இவை உள்ளன.

பூநகரி கிராஞ்சியில், கடற்கரையில் மணலுள் களிமண் நாடாவினால் உருவாக்கப்பட்டு - சூளையில் சுடப்பட்ட 3 அடி விட்ட மண்வளையக் கிணறு உள்ளது. இது 4,800 ஆண்டுகளுக்கு முன்பானது என காபன் - 14 என்ற அணுக்கதிர்வீச்சு காலக் கணிப்பு மூலம் உறுதி செய்யப்பட்டது.

அதைவிட அக்கராயன் பகுதியில் பெருமளவில் தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அக்கராயன்குள அலைகரை காட்டுக்குள் நிலை ஆறின் கரையோரங்களில் மூவாயிரம் ஆண்டுகள் வரை தொன்மையான பெருங்கற் பண் பாட்டுக்காலத்துக்குரிய கற்குவை, கற்றகடு வகை ஈமச்சின் னங்கள் ஒரு தொகுதியாக கண்டு பிடிக்கப்பட்டன.

மூன்று அடி உயர ஒன்றரை அடி சுற்றளவுடைய பாரிய சுடுமண் சிற்பம் அங்கு எடுக்கப்பட்டது. இலங்கையில் முதல் நாணய மான லக்குமி நாணயங்கள், மண்ணாலான முத்திரைகள், ஏராளமான தொல் நாணயங்கள், எழுத்து வடிவங்களை கொண்ட உலோக முத்திரை, ஆபரண மனிகள் என ஏராள மான தொல்பொருட்கள் நிலை ஆற்றுக் கரையில் தொல்லியல் தேடலாளர் ந. குணரட்னம் என்பவரால் எடுக்கப்பட்டுள்ளன.

அக்கராயன் வலதுகரை காட்டுக்குள் கலவலப்பு என்ற ஆறின் கரையில் - தொல்கால குள அணை ஒன்றினருகே மிகப்பெரிய செங்கல் ஈமச்சின்ன கட்டுமானம் இவரால் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் சுடுமண் சிற்பங்கள், ஈமச்சின்ன பாத்திரங்கள் உலோக மோதிரங்கள், தங்கச்சிமிழ், பானைகள் என ஏராளாமாக கண்டுபிடிக்கப்பட்டன. 2,700 ஆண்டு தொன்மையானதாக முதற்கட்ட காலக்கணிப்பு உறுதி செய்யவும் இது இலங்கையின் முன்னோடியான கட்டுமானமாக இருக்கலாம் என் தொல்லியலாளர்கள் கருதுகின்றனர்.

மேலும் அக்கராயன் முழுமையிலும் ஆங்காங்கு மக்களே தொல்லியல் சான்றுகள் எடுத்து பாதுகாத்து வருகின்றனர்.

அக்கராயனிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள கிராமமான ஆனைவிழுந்தானில் “நியாப்” திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்ற குளத்தின் - ஆறு இயல்பாகவே புவியியல் அமைப்பில் நீர் தேங்கும் இடத்திலிருந்து 50 மீற்றர் மேற்காக தொல்லியல் மையம் ஒன்று அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.




**"தொல்லியல் சின்னங்களைக் கண்டெடுப்பவர்கள் உடனடியாக அவை பற்றி விழிப்பாக செயற்பட வேண்டும். அக்கராயனில் மணல் அள்ளுவதன் மூலம் எமது மூதாதைகளின் வாழிடச் சான்றுகள் அழிக்கப்படுகின்றன."**




குள அணைக்காக புல்டோசர் கொண்டு மண் அகழப்பட்டபோது இவை வெளிப்பாடானது அதிசயிக்கக்கூடிய அளவுக்கு இருக்கின்றது. சுமார் ஒரு அடி உயரம் கொண்ட பெண் உருவச் சிலைகள், அதே அளவுடைய விலங்கொன்றின் உருவம், 6 அங்குல உயரமுடைய பெண் உருவ சுடுமண் சிற்பங்கள் ஏராளமாக கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த உருவங்கள் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் சிற்பங்களுக்கு ஒப்பானவையாக இருக்கின்றன.

இவை எமது மூதாதைகளின் நவீனத்துவ சிந்தனையை, கலையை வெளிப்படுத்துவதாகவுள்ளது. இன்று ஆபிரிக்க பழங்குடிகள் மத்தியில் இருக்கும் மனித உருவங்களில் சிற்பங்களைப் போல இவை தோற்றமளிக்கின்றன. இவை எமது வரலாற்றை இந்த மண்ணுடன் மேலும் பிணைக்கச் செய்யும் சான்றுகளாகும். ஆனைவிழுந்தான் தொல்லியல் மையத்தில் ஆரம்பத்தில் மண் அள்ளுகையில் கிடைத்தவையே இந்த சுடுமண் சிற்பங்களாகும். இவற்றைவிட அங்கு அகழப்பட வேண்டியவை இன்னும் இருக்கின்றன.

இலங்கை மண்ணின் மூதாதைகளான தமிழ் மக்களை வந்தேறு குடிகளாக்கி - வரலாறு நிராகரிக்கப்பட்ட மக்களாக்கி யுள்ளது சிங்கள பேரினவாதம்.

நாம் யாரென்பதை உறுதிப்படுத்துபவை எமது தொல்லியல் சான்றுகள். இவற்றை அழித்தால் எம்மை நாமே அழித்தவர் களாவோம்.

ஆகவே தொல்லியல் சின்னங்களைக் கண்டெடுப்பவர்கள் உடனடியாக அவை பற்றி விழிப்பாக செயற்பட வேண்டும் அக் கராயனில் மணல் அள்ளுவதன் மூலம் எமது மூதாதைகளின் வாழிடச்சான்றுகள். அழிக்கப்படுகின்றன. அது தடுக்கப்பட வேண்டும்.

உண்மையில் இந்த மண்ணில் இனவாத வரலாற்று ஆசிரியர் களாலும் பொறுப்பற்ற வரலாற்ற ஆசிரியர்களாலும் தமிழர் தாயக ஆற்றங்கரை நாகரீகங்கள் மறைக்கப்படுகின்றன. அவை வெளிக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இன்று உலகம் முழுவதும் பரவி உள்ள தமிழீழத் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து இத்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் இதனை களத்தில் இறங்கி அறிவியல் பூர்வமாக ஆய்வுகளை நடத்தி நாம் யார் என்பதை உலகிற்கு நிரூபிக்க வேண்டும்.

இன்றைய புதிய தொல்லியற் சான்றுகள் இலங்கையூடாக தமிழன் இந்தியாவுக்கும் சென்றதாகவும் கூறுகின்றன.

ஒளிப்படங்கள் தி. தவபாலன்
வெளிச்சம் - கார்த்திகை - மார்கழி 2003




*தமிழர்களின் பூர்வீகத் தீவான இலங்கையில், சிங்களவர்கள் குடியேறுவதை காட்டும் இலங்கை அரசின் தபால் தலை*

1956-இல் "விஜயனின் வருகை" என்ற தலைப்புடன் சிறப்பு தபால் தலை ஒன்றை அன்றைய சிங்கள இனவாத அரசு வெளியீட்டது. தமிழ் அரசி கரையில் வீற்றிருக்க, விஜயனின் தலைமையிலான சிங்களவர்கள் தங்களது "சிங்க உருவம்" பொறித்த கொடியுடன் கப்பலில் கரை ஒதுங்க வருகின்றனர்.

சிங்களர்கள் வந்தேறிகளாக இலங்கை கரையில் ஒதுங்கும் உண்மையை உலகிற்கு சொல்லும் பொருட்டு அந்த தபால் தலை இருந்தது. இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த சிங்கள தலைவர்கள் இத் தபால் தலைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். "விஜயன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவன் என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல. தவிரவும், விஜயன் வந்தபோதே இங்கு குவேனி என்ற தமிழ்ப் பெண் இருந்திருக்கிறாள் என்று கூறினால், இலங்கையின் பூர்வீக குடிகள் தமிழர்கள் என்பதை நாமே ஒப்புக்கொண்டது போலாகி விடும். எனவே, இந்தத் தபால் தலையை வாபஸ் பெற வேண்டும்" என்று கூறினார்கள்

அதுகாறும் நாங்கள்தான் இத் தீவின் பூர்வ குடிகள் என்று

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.**
**இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**
**437.345.4203**



# நித்திய புன்னகை அழகன்...!

நித்திய புன்னகை அழகன்
இங்கு நீழ்துயில் கொள்ளுகிறான்
நாங்கள் தொட்டு எழுப்பவும்
சொல்லி அழைக்கவும்
ஏதும் பேசாமலே தூங்குகின்றான்...

தம்பியே தமிழ்ச்செல்வனே...
எங்கள் தானைத் தலைவனின்
பிள்ளையே...

உன்னை இழந்தது உண்மையா?
பதில் சொல்லையா எங்கள் செல்வமே...
உன்னை இழந்தது உண்மையா?
பதில் சொல்லையா எங்கள் செல்வமே...

நித்திய புன்னகை அழகன்
இங்கு நீழ்துயில் கொள்ளுகின்றான்...
நாங்கள் தொட்டு எழுப்பவும்
சொல்லி அழைக்கவும்
ஏதும் பேசாமலே தூங்குகின்றான்...

பூவிரிதல் போல உந்தன்
புன்னகை போனதா?
பேசவந்த பாவியரால்
பாசமரம் சாய்ந்ததுவா...

சாவிரித்த பாயினிலே
நீ உறக்கம் கொள்ளுகிறாய்...
தலைவனுக்கு என்ன பதில்
சொல்லிவிட்டு செல்லுகிறாய்?

தம்பியே தமிழ்ச்செல்வனே
தமிழ் ஈழத்தை
நெஞ்சிலே தாங்கினாய்...
அண்ணனின் உயிர் பிள்ளையே
பகை வீசிய குண்டினால் தூங்கினாய்

நித்திய புன்னகை அழகன்
இங்கு நீழ்துயில் கொள்ளுகின்றான்
நாங்கள் தொட்டு எழுப்பவும்
சொல்லி அழைக்கவும்
ஏதும் பேசாமலே தூங்குகின்றான்...

நீ நடந்த தேசமெல்லாம்
தீ எரிந்து சாய்கிறதே...
பேசவென நீ அமர்ந்த
ஆசனங்கள் வேகிறதே...

பாவியர்கள் காலை வந்து
சாவிரித்து கொண்டனரே...
நாளை இதற்கான பதில்
நம் தலைவர் சொல்லுவரே

தம்பியே தமிழ்ச்செல்வனே
நீ சாகவில்லை
எம்மை ஆளுகின்றாய்...
அண்ணனின் அருகாகவே
நீ என்றுமே உயிர் வாழுவாய்...

நித்திய புன்னகை அழகன்
இங்கு நீழ்துயில் கொள்ளுகின்றான்
நாங்கள் தொட்டு எழுப்பவும்
சொல்லி அழைக்கவும்
ஏதும் பேசாமலே தூங்குகின்றான்...

தம்பியே தமிழ்ச்செல்வனே...
எங்கள் தானைத் தலைவனின்
பிள்ளையே...
உன்னை இழந்தது உண்மையா?
பதில் சொல்லையா எங்கள் செல்வமே...
உன்னை இழந்தது உண்மையா?
பதில் சொல்லையா எங்கள் செல்வமே...

நித்திய புன்னகை அழகன்
இங்கு நீழ்துயில் கொள்ளுகின்றான்
நாங்கள் தொட்டு எழுப்பவும்
சொல்லி அழைக்கவும்
ஏதும் பேசாமலே தூங்குகின்றான்...

உன்னை இழந்தது உண்மையா?
பதில் சொல்லையா
எங்கள் செல்வமே...
அண்ணனின் உயிர் பிள்ளையே
பகை வீசிய குண்டினால்
தூங்கினாய்...

அண்ணனின் அருகாகவே
நீ என்றுமே உயிர் வாழுவாய்...

உன்னை இழந்தது உண்மையா?
பதில் சொல்லையா
எங்கள் செல்வமே...

நித்திய புன்னகை அழகன்
இங்கு நீழ்துயில் கொள்ளுகின்றான்



தமிழீழத் தேசிய 27.11.2023

# மாவீரர் நாள்



நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்
மாண்ட வீரர் கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில் தமிழ் மண் குளிக்கும்!



# பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் குறித்து ச. பொட்டு அம்மான் அவர்கள் கூறுகையில்!

தமிழ்ச்செல்வனைப் பற்றியும் நினைவுக்குறிப்பொன்றை எழுதவைப்பதாக காலம் கட்டளையிட்டுவிட்டது. காலத்தின் ஓட்டத்தில் மாற்றங்கள் வரும். சில மாற்றங்களை நாம் கற்பனை செய்தும் பார்ப்பதில்லை. மாற்றம் நிகழ்ந்துவிட்ட போதிலும் அந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் மனம் கிடந்து மறுகும். அப்படிப்பட்ட மாற்றம்தான் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் மறைவு.

சபையில் புன்சிரிப்பும், எம்மிடையே கலகலத்த அதிரடிச் சிரிப்புமாக உலாவந்த தமிழ்ச்செல்வன், பிரிகேடியர் தமிழ்ச்செல்வனாக வணக்கத்திற்கு உரியவனாகிவிட்டான். தமிழ்ச்செல்வனைப் பற்றி எதிலிருந்து தொடங்குவது? அவனது வீரச்சாவிற்கு முந்திய பின்மாலைப்பொழுது…, அநுராதபுர எல்லாளன் நடவடிக்கையாளர்களுக்கான வீரப் பதக்கம் வழங்கும் நிகழ்வு…, தலைவர் உரையாற்றுகிறார், அவரது உரையில் தமிழன் சார்ந்த பெருமிதம், தமிழினம் சுதந்திரம் பெறத்தகுதியான இனமாக, வீரமுள்ள இனமாக வளர்ந்துவிட்டது என்ற நிம்மதி. எல்லோரும் மகிழ்ச்சியிலும், பெருமிதத்திலும் கலந்திருந்தோம்.

உணவுக்காகக் காத்திருந்த வேளையில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்த தமிழ்ச்செல்வன் உணவுண்ண தாமதிப்பது நல்லதல்ல என தலைவர் சங்கடப்பட்டு அவசரப்படுகிறார். தனக்கென தனியாக அவசரமாகத் தருவிக்கப்பட்ட உணவைப் புறக்கணித்து, “எமது வான்புலிகளைச் சிட்டுக்குருவிக்கு ஒப்பிடுவதா? அல்லது வண்ணத்துப் பூச்சிகளுக்கு ஒப்பிடுவதா?” எனத் தலைவரின் உரையை மீள எடுத்துச் சொல்லி பாராட்டும் இழையோட வான்புலிகளுடன் அன்பும், பம்பலுமாக தமிழ்ச்செல்வன் கேலி பேசுகிறார்.

கதைத்து – காத்திருந்து – உணவுண்ட பின்னரும் கதைத்திருந்தோம். நிகழ்வின் மகிழ்விலும், உணவின் சுவையிலும் இருந்த உரையாடல் தலைவரைப் பற்றியும், அவரது பாதுகாப்பு, ஆரோக்கியவாழ்வு என்பன பற்றியதாகவும் அமைந்து விடைபெற்றபோது நாம் அறிந்திருக்கவில்லை அதுதான் எங்களது கடைசிச் சந்திப்பு என்று, எல்லாவற்றிலும் மாற்றம்வரும். ஆனால் சிலது மாறாது. காலமும், கோலமும் நவீனமானாலும், அறிவும் ஆற்றலும் மேம்பட்டு வளர்ந்தாலும், உடையிலும் பேச்சிலும் மெருகு பெற்றாலும், உள்ளத்தாலும் இன்னும் பலவற்றினாலும் மாறாமலிருந்தான் தமிழ்ச்செல்வன்.

தலைவருக்கு இப்போது தமிழ்ச்செல்வன் இளவயது மெய்க்காப்பாளனோ அல்லது இளம் போர்த் தளபதியாகவோ அல்ல. அவன் அரசியல் தலைவன். மக்களை வழிநடத்தும் மக்களின் தலைவன்.



ஆனால் இவனோ இப்பொழுதும் அண்ணையின் குழந்தையாகவே தன்னை நினைப்பான். தன் திருமணத்தின் போது அண்ணை வரவேண்டும். ஆட்கள் வந்தால் அண்ணை வர மாட்டார். தமிழ்ச்செல்வனது திருமணச்செய்தியை நாம் கேள்விப்பட, அதற்கிடையில் தமிழ்ச்செல்வனது கடிதம் திருமண அழைப்பு என்றும் இல்லாது, செய்தியென்றும் இல்லாது வாழ்த்தும், ஆசியும் வேண்டி, சேதிசொல்லும் கடிதம். மடல்கிடைத்து நாம் அங்குபோகையில் பாலாஅண்ணை வீட்டில் தலைவரின் முன்நிலையில் திருமணம்முடிந்து தம் வீட்டில் இருக்கிறார்கள் மாப்பிள்ளையும், பொம்பிளையும்.

ஒருநாள் கடற்கரையில் கடலலை கால்தொட பேரலையின் சத்தத்தில் பயந்துபோனாள் குழந்தை, “ஐயோ பெரியப்பா” என்று சொல்லி தலைவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டாளாம் தமிழ்ச்செல்வனின் மகள் அலை, “என்னடா உன்ரை மகள் அலை கடலலைக்குப் பயப்படுகிறாள்” என பம்பலாய் சொன்ன தலைவரின் வார்த்தை தமிழ்ச்செல்வனுக்கு வேதம் – சவால் – செய்தி. சிலநாட்கள் கழித்து ரேகா சொன்னான், “அலைக்கு இப்போ வீட்டில் கிணற்றடித் தொட்டியில் நீர்நிறைத்து நீச்சல்ப் பயிற்சி நடக்குது.”

உலகத்திற்குத் தமிழ்ச்செல்வன் பிடிகொடுக்காத இராசதந்திரி. கதைத்துப்பேசி வாகாக உரையாடக்கூடிய ஆற்றலுள்ள பெரிய மனிதன். ஆனால் இவனோ இந்திய இராணுவ காலத்திலும், ஆனையிறவுக் களத்திலும், இன்னும் பல களங்களிலும் சுழன்றாடிய போராளி. எம்விடுதலைக்கு வழிவிடாது எம்மக்களைக் கொன்றுகுவிக்கும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது வெஞ்சினம் கொண்ட அதேபோராளி.

தமிழ்ச்செல்வன் தங்கள் பக்கம் வருகிறார் என எங்காவது ஓரிடத்தில் அல்லது ஒருமுகாமில் தடல்புடல் உணவு தயாராகியிருக்கும். ஆனால் இவனோ இந்தியன் ஆமிக்காலத்தில் அம்மை வருத்தக்காரரைச் சுகமாக்கித் தருகிற ஆச்சியிடம் – மந்துவில் ஆச்சியிடம் – பழஞ்சோற்றுக்குழையலுக்குப் போயிருப்பான்.

முக்கிய சந்திப்பில் வெளிஆட்கள் வந்துபேசி, பேசிமுடித்து உணவுநேரம், ஆடம்பர மேசையில் அறுசுவை உணவு காத்திருக்கும். கதைக்க இனி விடயம் இல்லையென்ற நிலையிலிருந்து, சந்தர்ப்பமும் சரியாக அமைந்துவிட்டால், வனவள சத்தியின் இடத்தில் கூழ் – அதுவும் மட்டுவில் தலைவரின் கைவண்ணத்தில் கூழ் – நினைவுக்குவந்து ஆளை அங்கு இழுத்துப்போகும்.

ஆண்டின் முதலாம்நாள் – தன்மனதில் நினைத்த சிலவற்றை தலைவர் பகிர நினைக்க – எனக்குக் கிடைத்தது வாய்ப்பு



யாழ்மாவட்டத்தில் மகளிர்பிரிவானது "சுதந்திரப்பறவைகள்" எனும் பெயரில் அரசியல், சமூகப் பணிகளில் ஈடுபட்டிருந்தது. மகளிர் பிரிவினருக்கு யாழ்ப்பாணத்தில் இராணுவப் பயிற்சிகளை வழங்க முடிவெடுத்தபோது அதற்காக தலைவரின் நெறிப்படுத்தலில் ஆரம்பப்பணிகளை முன்னெடுத்தது தமிழ்ச்செல்வன்தான்.

தென்மராட்சிப் பொறுப்பாகவிருந்த கேடில்சின் வீரச்சாவைத் தொடர்ந்து தென்மராட்சிப் பொறுப்பாக நியமிக்கப்பட்டதில் அடையாளப்படுத்தப்பட்டது தமிழ்ச்செல்வனது ஆளுமை. ஆளுமையும், அறிவும், அதிகாரமும் உயர்ந்து முன்நின்ற போதும் உள்ளிருந்த ஆத்மா அவனாகவேயிருந்தான். அதுவே தமிழ்ச்செல்வனது பெருமை.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்காலம். நாம் திட்டமிடுவதற்கு அவகாசம் எதையுமே எமக்குத்தராத திடீர்நெருக்குதல். தேசத்தின் விடுதலைக்கான பற்றுறுதி, எதற்காகவும் விடுதலைப்போராட்டத்தை விட்டுக்கொடுக்காமல் இருப்பதை மட்டும் முன்நிறுத்திய முடிவுகள். யாழ்ப்பாணம் கொக்குவில் எமது தலைவர் தங்கியிருந்த வீட்டிலேயே அவரைக் கொன்றுவிடும் முடிவில் தரையிறங்கினர் இந்திய இராணுவ அதிரடிப் பராத்துருப்பினர். இன்னொரு தளத்தில் நின்று விடுதலையை வழிநடாத்தவேண்டியது தலைவரின் கட்டாயமானது.

தலைவரிடமிருந்து மனைவியாரும், பிள்ளைகள் இருவரும் பிரிந்து, தனித்திருப்பது தவிர்க்கமுடியாத தானபோது அவர்களைப் பாதுகாக்கப் பொறுப்பேற்றது தமிழ்ச்செல்வன். ஆரம்பசிலநாட்கள் அவன் ஒழுங்கு செய்து கொடுத்த வீடுகளில் மாறிமாறி நின்ற போதும், இந்தியப்படை வெறியாட்டமாடி மக்களை அச்சுறுத்தி, தலைவரது குடும்பமென குறிப்பிட்டு தேடத்தொடங்க, மதியக்காவும், பிள்ளைகளும் மிகவும் சிரமப்பட்டனர்.

மூன்றுவயதுக்குட்பட்ட குழந்தைகள் இருவருடன் தம்மையே குறிவைத்துநடந்த பெரும்தேடுதல்களில் சரியான உணவுமின்றி வீடுகளில், வயல்களில், ஆளில்லாக் காணிகளில் என்று அவர்கள் அக்காலப் பகுதியில் ஆருமின்றி அலையும்நிலை வந்தது. எல்லாஊரையும் ஒரே வேளையில் வளைக்கும் பெரும்படை முற்றுகை. ஏதாவதொரு ஊருக்குள் தலைவரின் குடும்பம் சுற்றிவளைக்கப்பட இன்னொரு ஊருக்குள் அதே மாதிரி தமிழ்ச்செல்வனும் அகப்பட்டிருப்பான்.

இந்த நேரம் பார்த்து அந்தப்பகுதியில் இந்தியப் பத்திரிகை நிருபர்கள் இருவர் ஆண் பெண்ணாக நடமாட, அது தலைவரும், அவரது மனைவியும்தானென எண்ணி இந்தியப்படை தம் தேடுதலை உச்சமாக்க தலைவரின் குடும்பத்தினர் பட்டபாடு கொஞ்சமல்ல. மதியக்காவும், பிள்ளைகளும் தங்கியிருந்த வீட்டின் தகவலறிந்து சென்றனர் இந்தியப் படையினர். ஆட்களைப் பிடிக்கமுடியாவிட்டாலும் உண்மையான தகவலொன்றை அறிந்துவிட்டனர். தலைவரின் மகள் குழந்தை துவாரகா நோயுற்றிருந்த தகவல் அது.

அவசர மருத்துவ உதவி தேவைப்பட்ட தீவிரநோயுற்ற பிள்ளையும், தாயும் தப்பிவிட்டதை அறிந்த படையினர் செய்தி வெளியிட்டு விட்டனர். வயிற்றோட்டத்தால் மகள் துவாரகா இறந்துவிட்டதாக இந்தியா வெளியிட்ட செய்தியின் உண்மை - பொய் தெரியாது கலங்கிநின்றது தேசம். எல்லோருடனும் எல்லாத்தொடர்புகளும் பாதிக்கப்பட்டிருந்த நேரமது. பலநாட்கள் கழித்து தமிழ்ச்செல்வனின் சிறுகடிதக் குறிப்பிலேயே தன் மகள் உயிருடனிருப்பதை அறிந்தார் தலைவர். அக்காவும், பிள்ளைகளும் மட்டுவில் சென்ற பின்னர் காணிக்கை அண்ணரின் வீட்டடியைச் சுற்றியே சுழலும் தமிழ்ச்செல்வனின் மனம்.

'எம் நாட்டின் தலைவரின் வீட்டாரை காப்பாற்றித்தந்த பெருந்தகை காணிக்கை அண்ணர்' தலைவரது மனைவியும்,



'தலைவரிடமிருந்து காலைவேளை அழைப்பு' தலைவர் தனது எதிர்பார்ப்புக்களினை, எண்ணங்களினை எடுத்துச் சொல்கிறார். உரையாடலுக்கிடையில் செய்தி, "தமிழ்ச்செல்வன் பிள்ளைகளுடன் வந்துள்ளார்" தமிழ்ச்செல்வனது மகன் ஒளிவேந்தனது பிறந்தநாள். தலைவரின் ஆசிவேண்டி பெரியப்பாவிடம் பிள்ளைகளை அழைத்து வந்திருந்தான். திடீர் வருகை, பிள்ளைகளுக்குப் பொருத்தமான உணவில்லை. பெரியவர்களின் உணவுதான். பேச்சுவாக்கில் தமிழ்ச்செல்வன் சொல்லிவிட்டார், "அலைக்கு இடியப்பம் அவ்வளவு விருப்பமில்லை, சாப்பிடமாட்டாள்" ஆனால் பிள்ளையோ இடியப்பத்தை விரும்பிச் சாப்பிட்டாள். நா ஊறுபட்டுவிடக்கூடாது, கேட்டு சாப்பிட்டாள். "வீட்டில் அப்பா தாற இடியப்பம் வேறை, இது பெரியப்பா தாற நல்ல இடியப்பம்" என்று சொல்லி தலைவர் பிள்ளையைக் கொஞ்ச தமிழ்ச்செல்வனின் புன்சிரிப்பு அசட்டுச் சிரிப்பாகி, "இனி இடியப்பம் அவிக்கவும் இஞ்சைதான் பழக வேணும்" என்று சொல்லிச்சிரித்தான்.

எல்லாம் சரிதான் தலைவருக்கு விட்டுக்கொடாமல் தமிழ்ச்செல்வன் போட்டிக்கு நிற்கும் வேளையும் ஒன்றுண்டு. அது கைத்துப்பாக்கிச் சூட்டுக்களம். தலைவர் சுடுவார். அநேகமாய் ரவைகள் பத்தும் பத்தில் (மையம்-புள்) படும். சிலவேளை ஒன்பது அல்லது எட்டு ரவை மையத்தில்பட்டு மீதிரவை சற்றுவிலகிப் பட்டுவிட்டால் தொடங்கும் போட்டி. "நீ ஒருக்கா சுட்டுப்பார்" என்று தமிழ்ச்செல்வனை அழைக்க, சிலவேளைகளில் அவன் பத்து ரவையையும் மையத்திற்குச் சுட்டு துப்பாக்கியில் பிழையில்லை என்று நிரூபிப்பான்.

அடுத்த சுற்றில் நான் சுடுகிறேன்பார் என்று தலைவர் தயாராக, கைத்தடியைப் பின்பக்கமாக முட்டுக்கொடுத்து காலை நிலத்தில் ஊன்றி தமிழ்ச்செல்வன் போட்டிக்குச்சுட களைகட்டும் போட்டி. அலெக்ஸ், ஆதவன் (கடாபி) என சூட்டு விற்பன்னர்களுடன் களைகட்டும் போட்டி, இருள் சூழ்ந்த வேளையில் முடிவதும், அல்லது இருள் சூழ்ந்த பின்னரும் மின்சூழ் வெளிச்சத்தில் தொடர்வதுமாய் நடந்து முடியும் போட்டி.

தமிழ்ச்செல்வன் அடிப்படைப்பயிற்சி முகாமில் அடையாளம் காணப்பட்டதே அவனது சூட்டுத்திறனால் என்பர். உடற்பயிற்சியில் எல்லோரும் ஓடிப்பயிற்சி செய்ய, பயிற்சிப்பொல்லுடன் நடந்தே மைதானத்தை வலம் வருவார் தமிழ்ச்செல்வன். பயிற்சி நிறைவு நாளன்று சூட்டுப்பயிற்சியின்போது சுடக் கொடுத்த ஒரேயொரு ரவையை மையத்திற்குச் சுட வியந்தார் பொன்னம்மான். அது குருட்டாம் போக்கில் பட்டிருக்குமோ என்று அடுத்தது கொடுக்க அதுவும் மையத்தில் பட அடுத்தடுத்து ஒவ்வொன்றாகக் கொடுக்க அத்தனை ரவைகளும் மையத்தில்பட, 'இனி உனக்கு ரவையில்லை ஓடடா' என பொன்னம்மான் செல்லமாய், பெருமையாய் ஓட விரட்டியதில் அடையாளம் காணப்பட்டான் தமிழ்ச்செல்வன்.

அதன்பின்னர், பொன்னம்மான் தலைவருக்கு தமிழ்ச்செல்வனை அறிமுகம்செய்ததும், சிலகால மருத்துவப்பணிகளின் பின்னர் தலைவரின் உதவியாளராக ஆனதும் பழையகதை.

அடிப்படைப்பயிற்சிமுகாமில் செய்யாத அல்லது செய்யத்தவறிய உடற்பயிற்சிகளை தலைவரின் கவனிப்பில் செய்ய வேண்டி வந்தது இன்னொரு பம்பல்கதை. பயிற்சிமுடித்து சொர்ணம், இம்ரான் ஆகியோரின் பொறுப்பிலிருந்த தலைவரின் மெய்க்காப்பாளர் அணியில் செயற்பட்டதுமாக இருந்த அவன் தலைவர் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய போது யாழ்ப்பாணத்தில். 1987 இன் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து தலைவர் நாடு திரும்பி, வேலைகளை மேற் பார்வையிட்டு ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்.



பிள்ளைகளும் அங்கேதான் நிற்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தித் தெரிந்தபின் அவர்களை நோக்கிய இந்தியத் தேடுதல் அதிதீவிரமான போதும் நெஞ்சுரத்துடன் கைகொடுத்த நாட்டுப் பற்றாளர் அவர். தமது தேடுதலிலிருந்து தலைவரது மனைவி, பிள்ளைகளைக் காப்பாற்றி அனுப்பியது அவர் தானென்று தெரிந்த போது இந்தியப் படையினர் தமது கைக் கூலிகளை ஏவிவிட்டு காணிக்கை அவர்களைச் சுட்டுக் கொன்றிருந்தனர். கிராமத்துச் சுற்றிவளைப்பில் இந்தியப்படை முற்றுகைக்குள் மதியக்காவும், பிள்ளைகளும் – முற்றுகைக்கு வெளியே நெஞ்சு பதறக் காத்திருப்பான் தமிழ்ச்செல்வன். ‘அவன் அவர்களைச் சந்திப்பதும் பிரச்சனை’ அவர்களை அடையாளம் காட்டுவதாய் அமைந்துவிடும். விலகியே இருப்பான். ஆனால் விலகாமல் இருப்பான்.

“தமிழ்ச்செல்வன் வீரச்சாவடைந்த வேளையில் அலெக்ஸ் போல்” – அந்தக் காலத்தில் அவனது நம்பிக்கைக்குரிய போராளி வின்சன் – கெங்காதரன் மாஸ்ரரின் மகன் – மட்டுவில் சென்று மதியக்காவையும், பிள்ளைகளையும் பார்த்து விட்டு வர வேண்டும். இப்போது வந்துசேர்ந்திருக்க வேண்டுமே? காணவில்லையே? வின்சனுக்கு என்னவானது? அக்காவிற்கு, பிள்ளைகளுக்கு என்னவானது? நெஞ்சுபதற அன்று தமிழ்ச்செல்வன் மனம் துடித்து நின்றதை இன்றும் மறக்கமாட்டார்கள் அவனது நண்பர்கள்.

ஆள்மாறி ஆள்விட்டு – அங்கும், எங்கும் விசாரித்தபோது வந்தது வின்சனின் வீரச்சாவுச் செய்தி! மட்டுவில் செல்லப்பிள்ளையார் கோயிலடி சிலுவில் வயல்வெளியில், மதியக்காவும், பிள்ளைகளும் தங்கியிருந்த வீட்டுக்கு அருகில் கிடந்தது வின்சனின் வித்துடல் இந்தியப்பத்திரிகை நிருபர் அனிதா பிரதாப் எழுதிய “இரத்தத்தீவு” (Island of Blood) எனும் நூலில் குறிப்பிடப்படும் வின்சன் இவராவார்.

அக்காவையும், பிள்ளைகளையும் காணிக்கை அண்ணரின் வீட்டருகில் இருந்த நடராசா ஐயாவின் வீட்டில் – மட்டுவில் மகேஸ் வீட்டில் – சந்தித்துவிட்டு திரும்பும் வேளையில் இந்தியப் படை எதிர்கொண்டது. தப்பும் முயற்சியும் முடியாமல் போக, சயனைட் அருந்தி தலைவரின் குடும்பத்தையும், தமிழீழத்தின் மானத்தையும் காத்து தன்னுயிர் கொடுத்து நின்றான் வின்சன்.

வின்சன் வீரச்சாவடைந்த சோகமும், தலைவரின் குடும்பத்தைப் பாதுகாத்து விட்டான் என்ற நிம்மதியுமாக, அன்றைய தமிழ்ச்செல்வனின் உணர்வுகள் – அவனது நினைவில் அழியாதவை.

இனி வேறு வழியில்லை என்றானபோது குழந்தைகளைத் தனியாக வேறிடம் அனுப்புவதென்றும், தாயாரை தனியே நகர்த்துவதென்றும் முடிவானது. “தாயும் – இருபிள்ளைகளும்” என்ற அடையாளத்தைநோக்கி வேட்டையாட அலையும் இந்தியப் படைகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற இந்தமுடிவு தவிர்க்க முடியாததானது.

இந்தியப்படை சூழ்ந்துநிற்க கச்சாய் – புங்கம்பிள்ளையார் கோயிலடிக்கரையில் கந்தண்ணை ஒழுங்குசெய்த மரத்தோணியில் ஏற்றி மதியக்காவை சொர்ணத்திடம் பொறுப்புக் கொடுத்தார்கள் தமிழ்ச்செல்வனும் அவனது அணியினரும். தென்மராட்சியில் இந்திய இராணுவத்தினருக்கு முகம் கொடுக்கத்தக்க, புடம் போடப்பட்ட போராளிகள் பலர் தமிழ்ச்செல்வனின் அணியில் இருந்தனர்.

தலைவரின் குடும்பம் தென்மராட்சியிலிருந்து இடம்மாறிய பின்னரும் அங்கு புலி அணியினரைத் தேடிய பாரதப் படையினர் பாவம், பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

மிருசுவிலில் தினேசுடன் பரணியும், அம்மாவும், மகேந்தியும் நிற்பதாய் தேடிப் போவார்கள். எல்லாச் சோதனையும் முடிந்து ஊர்ச்சனத்தை வீட்டிற்கு அனுப்பிவிட்டு படையினர் முகாம் திரும்பும்வேளை, சுற்றி வளைப்புக்குப் போகாத குடுகுடு ஆச்சியின் சோற்றுக் குழையல் உருண்டையில் பசிபோக்கிக் கொண்டிருப்பார்கள் இவர்கள்.

மட்டுவிலில் புலிகள் நிற்பதாக அறிந்து ஊரை வளைத்திருப்பர் இந்தியப் படையினரும், அவர்தம் கைக்கூலிகளும். வயலிற்கு வேலைசெய்யும் கணவனுக்கு என்று சொல்லி அந்த அம்மா கொண்டுவந்த கஞ்சியைக் குடித்துக் கண்பனிப்பர் குணாவும், பாப்பாவும், மந்துவிலில் ஆஞ்சியும் (இளம்பருதி), ரவி அண்ணையும் அப்போதும் கூடநிற்பதைத் தெரிந்துதான் பெரும் படையாய்ப் போனார்கள் இந்தியப் படையினர். வீதியின் முன்புறத்துச் சிறுவனும், தோட்டத்துப் பெரியவரும் முன்னரே சொன்னதால் சேற்றுநிலத்து கண்ணாப்பற்றைக்குள் இறங்கி – இந்தியப் படையை ஏமாற்றி வருவார்கள் இவர்கள்.

சாதாரண கிரிக்கெட் விளையாட்டில் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்து போனமைக்காகவே தமிழர்களைக் கொல்வதற்காக பீரங்கிகளை இயக்க உத்தரவிடும் இந்தியப்படை அதிகாரிகள் போராளிகளிடம் ஏமாந்தால் விட்டு விடுவார்களா என்ன? போராளிகள் தப்பிவிட்டதனால் ஏற்பட்ட களைப்பும், கோபமும் எம்மக்கள் மீது திரும்பும்.

இந்தியப் படையினரால் எமது தாய் நாடு முழுவதும் பட்டபாட்டிற்கு தென்மராட்சியும் விதி விலக்காகவில்லை. எந்தவொரு யுத்த முனைப்புமில்லாத சூழல். சாவகச்சேரி நகரத்து நவீன சந்தை. 1987 ஒக்ரோபர் 27 பகல் பட்டப்பகல் பதினொரு மணி; சந்தையில் திரளாகக் கூடிநின்ற எம்மக்கள்மீது உலங்கு வானூர்தி மூலம் குண்டுவீசி ஆரம்பித்தது தென்மராட்சிக்கான படுகொலைப்படலம். காலை சாவகச்சேரி சந்தையில், அங்கேயே அன்றிரவு பஸ்சில், நுணாவில், கைதடியில், பளையில், மிருசுவிலில் என தென்மராட்சியின் நிலமெங்கும் எமது மக்களது குருதிதெறிக்க வைத்தனர் இந்தியப்படைகள். எங்களது நாட்டிற்கு ஏனிவர்கள் வந்தார்கள்? ஏன் எம்மைக் கொல்கிறார்கள்? என்ற வினாக்களுக்கு விடைதெரியாமலேயே சாகும் எமதுமக்களுக்காக அழுது கொதிப்பார்கள் தமிழ்ச்செல்வனும், அவனது தோழர்களும். அவர்களது கொதிப்பும், துடிப்பும் இந்தியப்படையினருடனான களங்களில் வெடிக்கும்.

இந்திய இராணுவ காலத்தின் 1988 இன் பிற்பகுதி, மணலாற்றுக் காட்டிலிருந்த தலைவர் என்னிடம் யாழ் மாவட்டப்



பொறுப்பைத்தந்து வழியனுப்பி வைத்தார். தலைவரின் சொற்படி வல்வெட்டித்துறையில் எனது பாதுகாப்பிடத்தை அமைத்துக் கொண்ட பின்னர், நாம் ஆயுதஅணியாகச் சென்றது தென்மராட்சிக்குத்தான்.

யாழ்ப்பாணம் புறப்படும்போது தலைவர், “வல்வெட்டித்துறையில் நின்றுகொண்டு செயற்படு, அங்கேயுள்ள சனம் உனக்குப் பாதுகாப்பைத் தரும்” என்றும், புதியவர்கள் வந்தால் இலகுவாக அடையாளம் காணக் கூடியபடியாக அவ்வூரில் புவியியல், சமூக அமைப்புள்ளமை போன்ற விடயங்களைச் சொல்லித்தந்து வழியனுப்பினார். அவ்வேளையில் உடனிருந்த கிட்டண்ணை “வல்வெட்டித்துறைக்குப் போகவேண்டா மென்று சொல்லவில்லை, அதற்குப் பிறகு நீ போய் தினேசைப் பிடி” என்றார். அதாவது தினேஸ் உங்களுடன் ஒத்துழைப்பான் என்பதும், தென்மராட்சியின் பெரும் தென்னை மரங்களும், மாஞ்சோலைகளும், புதர்க்காடுகளும் நல்ல பாதுகாப்பைத் தரும் என்பதும் கிட்டண்ணையின் கருத்தாக இருந்தது.

அங்கு தென்மராட்சியில் நாவற்குழியிலிருந்து பளைவரை இருந்த அனைவரையும் மிருசுவிலில் ஒன்றாக்கித்தந்தான் தினேஸ். தென்மராட்சி அணியினரின் கைத் துப்பாக்கிகளுக்கும் ஓய்வு கொடுத்து பெரிய சுடுகலன்களுக்கு (றைபிள்கள்) மாறினோம். அணியானோம். தென்மராட்சி – மந்துவிலில் சில காலமும், வரணியில் ஏதோவொரு இந்துக்கோயிலின் அருகாமையில் அதற்கு பொற்கோயில் என பெயரிட்டு பல மாத காலமுமாக அணியாய் தளமமைத்துச் செயற்பட்டோ மென்றால் அது தமிழ்ச்செல்வனது தளம். வரணியூரில் எமதுதேவைக்கு வசதியாக, வாகாக உணவுசெய்து தருவதற்கும், ஊர்ப்புதினம் பார்த்துச் சொல்லவுமாக விநாயகத்தை நியமித்து, தன்னுடன் நின்ற குணா, குணத்தார், செல்வராசா ஆகியோரை ஆமிபார்த்துச் சொல்ல காவல்விட்டு, ஆஞ்சி (இளம்பருதி), ரவியண்ணை, விநாயகம், ரவி, டானியல், ரட்ணா என தனது ஆளணியை என்னோடுநிற்கவிட்டு தளமமைத்துத் தந்தான் தினேஸ். தென்மராட்சியில் தமிழ்ச்செல்வனது அணியினரது வீரம் செறிந்த நாட்கள். வீரம் மட்டுமல்ல போரிடுவதில் போட்டியும், நகைச்சுவையும் கலந்திருந்த மறக்க முடியாத நாட்கள் அவை.

வடமராட்சி நெல்லியடியில் டேவிட்டின் அணி பிறண் இலகு இயந்திரத் துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றிவிட்டது. மகேந்தியிடமிருந்து சில நாட்களில் பெருமிதத்துடன் தொலைத்தொடர்பு நடை பேசியில் ஒரு செய்தி. குணாவின் அணி கனகம்புளியடியில் பிறண் இலகு இயந்திரத் துப்பாக்கி ஒன்றை எடுத்துள்ளது.

தினேஸ் என்றபெயர் எதிரிகட்கு தெரியுமென்பதால் அவனோடு எப்போதுமிருக்கும் மகேந்தியின் பெயரில்தான் தமிழ்ச்செல்வனின் தொடர்புகள். தமிழ்ச்செல்வனது திட்டப்படி வாகனமொன்றில் சென்ற அணி வெற்றிகரமான தாக்குதலைச் செய்திருந்தது. தக்காளி என்ற உறுப்பினர் பெண் உடையில் சென்றிருந்தார். பொம்பிளை உடுப்புப்போட்டு தக்காளி நடந்ததையும், தக்காளியை பெண் என நினைத்து எதிரிகள் ஏமாந்ததையும் கதைக்க வெளிக்கிட்டால் சோறு தண்ணி தேவையில்லை. நுணாவிலிலும் இப்படித்தான் கண்ணிவெடி வைக்கமுற்பட அதை இந்தியப்படை கண்டுபிடித்துவிட்டது.

அப்போதைய கண்ணிவெடிநிபுணர் பரணியை களத்திலிறக்கிவிட்டான் தமிழ்ச்செல்வன். கண்ணிவெடியை வைத்துவிட்டு வந்ததையும், எதிரிக்குத் தகவல் சொல்பவர் இவராகவும் இருக்கலாம் என்று நம்பிய ஒருவரிடம், “கண்ணிவெடி வைத்திருக்கு. ஒருவரிடமும் சொல்லவேண்டாம். கொஞ்சம் விலகியிருங்கோ கவனம” எனச் சொல்லிவிட்டு வந்ததையும், மேஜர் தாப்பா என்ற அதிகாரியும், இன்னும் பலபடையினருமாக சூழ்ந்துவந்து எடுக்க, எதனைச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதோ அதனை அந்தக் கண்ணிவெடி செய்து முடித்ததையும் அதாவது எடுக்க வெடித்ததையும் கூறும் போது அந்த இடம் கலகலத்து அதிரும்.

“சாரங்கட்டிய புலியென்று எதிரிநாடு சொன்னதனால், சாரத்தை மாற்றி எல்லோரும் காற்சட்டைகளுக்கு மாறுவோம்”, கதைத்துவிட்டோம். “ஜீன்சிற்கு மாற விரும்புவோர் வாருங்கள்” என்று சொல்ல அங்கிருந்த அணியில் கையை உயர்த்தியவர்கள் இரண்டு பேர் தான். கொஞ்ச நாட்களாக ஜீன்ஸ் போட கையை உயர்த்தியவர்களைப் பார்த்து ஒரே சிரிப்பு – அறுவை – பகிடி, இன்னும் கொஞ்சநாள் கழித்து ஜீன்ஸ் போடாமல் சாரத்துடன் திரிபவர்களைப் பார்த்து அதே சிரிப்பு – அறுவை பகிடி ஆமி ஒருமுறை கலைக்க, அங்குநின்ற ஏழெட்டுப்பேர் ஒன்றாக ஓட ஒருவர்பின் ஒருவராய் ஓடிய எல்லோரும் இரும்புப் படலை ஒன்றை படாத பாடுபட்டு ஏறிக்கடந்து பாய்ந்தோட உயரமேற முடியாத கடைசி ஆள் பதறிப் போய் தள்ள படலை முன்னரே திறந்துதான் இருந்ததாம்.

கச்சாய் றோட்டுப்பக்கமோ அல்லது அந்தப்பகுதியில் எங்கோவோர் இடத்தில் கந்தண்ணையைக் கட்டிப்பிடித்த ஆமியை தோளிலிருந்த துவக்கால் அப்படியே சுட்டுச்சாய்த்துவிட்டு எதிரியின் இரத்தம் தன் உடலெல்லாம் தோய, திரும்பிப் பார்க்காமல் ஒரே ஓட்டமாய் ஓடிவந்ததை சொல்லும் போதும் அந்த இடமெல்லாம் சிரிப்பில் அதிரும்.

தமிழ்ச்செல்வன் மற்றும் தென்மராட்சி அணியெல்லாம் நாமிருந்த பொற்கோயில் தேடிவந்தால் பம்பலில் கலகலப்பில், சிரிப்பில் அதிரும் எமதிடம். என்னுடன் அணிகளுக்குப் பொறுப்பாகவிருந்த செல்வராசா மாஸ்ரர் குளிக்கும் நேரம்தவிர மற்ற நேரமெல்லாம் தன்னுடலில் இருக்கும் ரவைக்கூடுதாங்கியை (கோல்சர்) கழற்றமறுக்கும் செல்வராசா மாஸ்ரர் வந்து முறைப்படுவார், “இவர்கள் வந்தால் ஒரே சிரிப்பும் சத்தமும். சொல்லுக் கேட்கிறார்கள் இல்லை” என. நடேஸ், பாபுவின் வீரச்சாவிற்குப் பதிலடித்தாக்குதல்.

இந்தியப்படைகளுடன் சேர்ந்து எமதுமக்களைக் கொன்றுகொண்டிருந்த கைக்கூலிகள் மீது புகையிரத நிலையத்தடியில், சங்கத்தானையில், உசனில் என பற்பல தாக்குதல்கள் நடந்திருந்தன. மேலும் ஆங்காங்கே இந்தியப்படையை எதிர்கொண்டு சுட்டதும். தேடிப்போய்ச் சுட்டதுமான பல தாக்குதல்கள் இருந்தாலும்கூட தென்மராட்சியில் தமிழ்ச்செல்வன் அணிக்கு மகுடமாய் அமைந்தது மிருசுவிலில் அமைந்திருந்த இராணுவ



நிலையைத் தாக்கி அழித்ததுதான்.

மிருசுவில் - கண்டிவீதி நெடுஞ் சாலையில் - தேவாலய சுற்றாடலில் அமைந்திருந்தது இந்தியப்படை நிலை, மேஜர் சிறி சாரதியாக வர, ரூபனை நடுவிலிருத்தி கைகளில் குண்டுகளேந்தி வெள்ளைச்சட்டை அணிந்து, வயதானவர்போல் தலைப்பாகைக்கட்டுடன், வஞ்சினம் பொங்கும் நெஞ்சுடன் முன்னிருக்கையில் அமர்ந்து சென்றான் தமிழ்ச்செல்வன். அவனது தலைமையில் பார ஊர்தியொன்றில் சென்ற எமது அணியினரின் தாக்குதலை இந்தியப்படை எதிர்பார்க்கவில்லை. நாம் எதிர்பார்த்திருந்ததை விடவும் படையினரது எண்ணிக்கையும் அதிகம்தான்; நல்ல வேளையாகபக்க உதவியாக ஈருருளிகளில் சென்ற ரவியண்ணை, ரேகா, பாப்பாவையும் உட்படுத்திய அம்மாவின் அணியும் இன்னொரு பக்கத்தால் தாக்குதலைத் தொடுக்க, வெற்றி எமதானது.

நாம் தங்கியிருந்த பொற்கோயிலுக்கு நெஞ்சில் படுகாயமடைந்த ராகுலனுடன் சேர்ந்துவந்தது வெற்றிச் செய்தியுடன் கப்டன் கில்மனின் வீரச்சாவும், வித்துடல் விடுபட்டுவிட்டதென்ற சோகச் செய்தியும், எமது தரப்பில் கப்டன் கில்மன் வீரச்சாவடைய, ராகுலன், பரணி, வீமன் ஆகிய மூவர் காயமடைந்த அத்தாக்குதலில், அங்கு நின்ற தமது நான்கு அணியினரில் ஒரு அணியினர் முழுப்பேருமே ஒரு ரவைகூட திருப்பிச் சுடமுடியாமல் இறந்து போனதையும், மற்றைய அணியில்கூட ஒருவர்மட்டும் தப்பமுடிந்ததையும் சர்தேஸ்பாண்டே என்ற இந்திய இராணுவ அதிகாரி “யாழ்ப்பாணம் – இடுபணி” (Jaffna Assignment) என்ற நூலில் விபரிப்பதிலிருந்தே தாக்குதலின் தீவிரத்தையும், திட்டத்தின் துணி கரத்தையும் புரிந்துகொள்ளலாம். அதில் கூட ஒரு வீரச்சாவு மற்றும் சிலகாயத்துடன் பெரியவெற்ற கிடைத்துவிட்டதனாலும், பிறண் இலகு இயந்திரத்துப்பாக்கி உட்பட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதனாலும் நாம் பெருமையும், மகிழ்ச்சியும் அடைந்தோம். இவர்களின், அதாவது தினேசின் அணியினரின் கவலை என்னவென்றால் “கால் கஸ்ரோ” அதாவது சுவீடன் நாட்டின் போர்பஸ் என்ற நிறுவன வடிவமைப்பான உந்துகணைசெலுத்தியை கைப்பற்ற முடியாமல் போனதுதான், “சனியன் கால்கஸ்ரோக்காரன் ஓடிவிட்டானம்மான்” என்பான் தமிழ்ச்செல்வன்.

மிருசுவிலில் நண்பர்களான இளைஞர்களைப் பிடித்து இந்தியப் படையினர் சுட்டுக்கொன்றிருந்தனர். அதிலொருவர் சிவஞானசுந்தரம் – சிவரஞ்சன் என்பவர்.

அக்காலப்பகுதியில் இந்தியப் படையினர் அப்பாவி இளைஞர்களை இவ்வாறு கொல்வது அவர்களது வழமையான நடவடிக்கையாகவே இருந்தது.

இதில் வழமையில்லாமல் நடந்தது என்னவென்றால் படுகொலைக்குள்ளான இளைஞனது அண்ணனான சிவசோதி தமிழ்ச்செல்வனைச் சந்தித்ததுதான மாணவனாக இருந்த தனது தம்பியின் படுகொலைக்காக பழிவாங்கத் துடித்துக்கொண்டிருந்தான் சிவசோதி என்ற இளைஞன்.

அவனைத் தயார்செய்து, இந்தியப்படையினரது பலவீனமான நிலையைக் கண்டறிந்து, வேவுபார்க்கவென கற்பித்து அந்தத் தாக்குதலுக்கான திட்டத்தைத் தானே தயாரித்ததுடன், தானே நேரடியாக தலைமைதாங்கிக் களத்தில் இறங்கினான் தமிழ்ச்செல்வன். அதுவுமல்லாமல் தனதுசுடுகலனை வேறொரு போராளியிடம் கொடுத்துவிட்டு கையெறி குண்டுகளுடன் எதிரியின் பிறண் இலகு இயந்திரத்துப்பாக்கி (LMG) நிலைக்குள் பாய்ந்துசென்று, அதனைச் செயலிழக்கச் செய்தவுடன் தனதுசுடு கலனைப் பெற்றுத்தாக்குதல் செய்தான்.

பதினைந்து பேரளவில் பங்குகொண்ட இந்தத்தாக்குதலில் தமிழ்செல்வனுடன் பரணி, சிறி, ரூபன், வீமன், கந்தண்ணை, செல்ரன், ராகுலன், சேது, அம்மா, ரவிஅண்ணை, ரேகா, பாப்பா ஆகியோருமிருந்தனர்.

தனது சகோதரனது படுகொலைக்குப் பழிவாங்கவென இயக்கத்தைத்தேடி தமிழ்ச்செல்வனைச் சந்தித்த சிவசோதி, பின்னர் சிறந்தபோராளியாக, ஆற்றலுள்ள வேவுவீரனாக தமிழ்ச்செல்வனால் வளர்த்தெடுக்கப்பட்டான்.

நன்கு அறியப்பட்ட டென்சில் கொப்பேக்கடுவ மற்றும் படை அதிகாரிகள் மீதானதாக்குதலில் பங்குகொண்டு பரிசுபெற்ற அணியை வழிநடத்திச் சென்றவன், அன்று சிவசோதியாக பின்னாளில் பீற்றர் அல்லது கார்வண்ணன் என அறியப்பட்ட போராளியே.

யாழ்மாவட்டப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் மருத்துவப் பிரிவை விரிவாக்குவதிலும், மருத்துவர்களை உள் வாங்குவதிலும் தமிழ்ச்செல்வன் காட்டிய ஆர்வம் முக்கியமானது.

ஜெயசிக்குறுக்களத்தில் எம்மை அழித்துவிடலாம் என்ற மமதையுடன் சிங்களம் பெரும்போரைத் தொடுத்தது. இடைவிடாது தொடர்ந்துநடந்த இச்சமர்களில் காயமடையும் போராளிகளின் எண்ணிக்கை, நூறுகளைத் தாண்டி ஆயிரங்களாக அமைந்தது. இவ்வளவு பெரும் எண்ணிக்கையாக காயமடைந்த போராளிகளை இவர்கள் எவ்வாறு பராமரித்துக்கொள்கிறார்களோ என சிங்கள ஆட்சியாளர்களும், ஆய்வாளர்களும் ஆச்சரியப்பட்டுக் கொள்ளும் அளவுக்கு எமது மருத்துவப்பிரிவின் பணியானது அக்காலப்பகுதியில் இருந்ததை யாரும் மறுக்க முடியாது.

தமிழ்ச்செல்வன் தான் வீரச்சாவடைவதற்கு சிலநாட்களுக்கு முன்னர் ரேகாவிற்குச் சொன்னானாம், “வைத்தியைக் காப்பாற்றியிருக்கலாம். அவனுக்குப் பொருந்திப்போகும் இரத்தவகை இருப்பில் இருக்கவில்லை” என.

பூநகரிப்பெருந்தளம் மீதான எமது தாக்குதலின்போது எதிரியின் விமானக் குண்டுவீச்சில் தமிழ்ச்செல்வன் பாரிய காயமடைந்தவேளை அவரைப் பாதுகாக்கும் முயற்சியில் காயமடைந்து வீரச்சாவடைந்த போராளிதான் வைத்தி. சிறந்த போராளியாக, மிகச்சிறந்த மெய்ப்பாதுகாவலனாக தனது கடமையைச்செய்து தமிழ்ச்செல்வனின் உயிரைக் காப்பாற்றினான் அவன். பதின்நான்குவருடங்கள் கடந்தபின்னரும் மறவாதநினைவுடன் மருத்துவப்பிரிவின் தேவைபற்றியும், தன்னைக் காப்பாற்றி உயிர்கொடுத்த தோழனைப்பற்றியும் ஒருங்கேநினைக்கும் மனத்துடன் இருந்தான் என்பதுதான் தமிழ்ச்செல்வனை சராசரி மனிதர்களிலிருந்து வேறுபடுத்தி உயர்வானபோராளியாக நினைக்கவைப்பதாகும்.



பல்முனைஆற்றல்கொண்ட தமிழ்ச்செல்வனின் ஆளுமையின் இன்னொரு வெளிப்பாடாக சூரியக்கதிர் நடவடிக்கைக்குப் பின்னான யாழ்ப்பாணச் செயற்பாடுகளைச் சொல்லலாம்.

எதிரியின் முற்றுகைக்குள் இருந்த யாழ்ப்பாணத்திற்குள் தேர்ந்தெடுத்த போராளிகளை நிலைப்படுத்திச் செயற்படுத்தினான். யாழ்ப்பாணத்திற்குள் வெற்றிகரமாக நின்றுபிடித்த அவனது போராளிகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக வரலாற்றில் பதிவாகிவிட்ட இராணுவவெற்றிகளைக்கூட ஈட்டினர். அதற்கு மேலாக மக்களையும், மாணவர் சமூகத்தையும் ஒருங்கிணைத்து வெகுசனப்போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தமையானது தமிழீழவிடுதலை வரலாற்றில் இன்னொரு மைல்கல்லாக பதிவான வெற்றியாகும்.

இந்த எழுச்சியானது எமதுவிடுதலைப்போரை பயங்கரவாதமாக உலகின்முன் சித்தரிக்கமுனையும் சிங்களஅரசை நிலைகுலையச் செய்தது. மக்கள் அணிதிரண்டு பொங்கிப்பிரவாகித்த இந்நிகழ்வுகள் இலங்கைத்தீவையும் தாண்டி உலகஅரங்கையே ஒருகணம் எம்மக்களை நோக்கித் திருப்பியதெனலாம்.

தமிழ்ச்செல்வனின் பல்வேறு அரசியல், நிர்வாக, சமூகப் பொறுப்புகளின் மத்தியில்கூட தெரிவுசெய்யப்பட்ட அவனது போராளிகளின் மூலமாக நாம் பெற்ற இவ்வெற்றிகள் அவனது முதிர்ந்த அனுபவத்தினதும், ஆளுமையினதும் வழி நடத்தலின் பெறுபேறே.

தாயகத்தில் மட்டுமல்ல புலம் பெயர்ந்த எமதுமக்களிடையேயும் கூட தமிழ்ச்செல்வனின் தொடர்புகளும், அணுகுதல்களும், கருத்தூட்டல்களும் எமது விடுதலைப்போருக்கான பயனுள்ள பின்புலத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதும் எப்போதும் நினைவில் கொள்ளப்படத்தக்கதாகும்.

அது 1991 ஆ.க.வெ. சமரின் ஒரு கடினமான கட்டம். கடலால் இறங்கி தரையால் நகர்கின்ற எதிரியை வழிமறித்துச் சண்டையிடுகிறது தமிழ்ச்செல்வனின் அணி. கனரகவாகனம் – ஆயுதங்களுடன் நகரும் எதிரியை இலகுரக ஆயுதங்களுடன் வழிமறித்து நிற்கும் கடினமானசண்டை அது; வீரர்கள் வீழ்ந்துவிட்டனர். வியூகம் உடைந்துவிட்டது.

பின்வாங்கவேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்ட நிலைமை. அங்கு தமிழ்ச்செல்வன் அப்போது தினேஸ் - தினேசாக இல்லை. ஆவேசநிலையில் தன்நிலை உணராது, எதிரியை எதிர்ப்பதில் மட்டும் குறியாகநின்று போரிடும் தினேஸ். “தினேஸ் பின்வாங்க மறுக்கிறார்” என்று நடைபேசியில் செய்திவந்ததும், வரமாட்டேன்… வரமாட்டேன்… என்று குழறக்குழற ஆளைக் குண்டுக்கட்டாய்த் தூக்கிக் கொண்டுவந்து சேர்த்ததும் மாறாதநினைவுகள். களத்தில் தனது நுரையீரலைத் துளைத்தரவையின் வலியையும் உணராது ரவைபட்டதே தெரியாமல் அவனைக் கட்டிவைத்ததுதான் என்ன? இதனை விளங்கிக்கொண்டால்தான் தமிழீழ அரசியலுக்கான தமிழ்ச்செல்வனின் தகைமையை விளங்கிக்கொள்ளலாம்.

தமிழனின் அடிமைவாழ்வை மாற்றியமைக்க சரியான அரசியல் தலைமை இல்லாமல் போனதே எம்மினத்தின் இன்றுவரையான அவலநிலைக்கான காரணம். எம்மினத்தின் அடிமைவாழ்வை உணர்ந்தும், தெரிந்தும் இருந்த எமது இனத்தின் மூத்த தலைவர்கள் கூட நிலைமையை மாற்றியமைக்க சரியான, துணிவான முன்முயற்சிகளை செய்யத் தவறினர்.

கொடுங்கோலர்களால் புரிந்துகொள்ளமுடியாத அகிம்சைவழிப் போராட்டம் தோல்வி அடைந்து, தமிழர்களுக்கு உரிமை எதையும் வழங்கமுடியாதென்று சிங்களத் தலைமைகள் ஏமாற்றி மறுத்தபோது, தந்தை செல்வாகூட “தமிழினத்தை இனி கடவுள்தான் காப்பாற்றவேண்டும்” என ஆற்றாமையுடன் தான் உரைத்தாரே தவிர எம்உரிமையைப் பெறத் தீவிர வழியிலோ அல்லது இராசதந்திரவழியிலோ காத்திரமாகப் போராடத்துணியவில்லை.

“இந்த வல்வெட்டித்துறையிலிருந்து ஐம்பது இளைஞர்கள்

முன்வாருங்கள்” என்று அங்கு சொன்னதுபோல் ஒவ்வொரு ஊரிலும் சொன்னார்கள். போராட்டத்தில் நாட்டை அமைப்பேன் என்றும் சொன்னார்கள். இயல்பாக கிளர்ந்த இளைஞர்களின் எழுச்சியைக்கூட வெற்றுக்கோசங்களால் திசைதிருப்பும் அரசியல் ஆக்கினார் அமிர்தலிங்கம்.

சுயாட்சி என்றும், ஐம்பதுக்கு ஐம்பது என்றும் தமிழரின் வாழ்வும் அரசியலும், பேச்சிலும் எழுத்திலுமாக காலத்தைக் கழித்துவர - இனத்தை மாற்றியும், நிலத்தை விழுங்கியும், மொழியை, கல்வியை பாழ்படுத்தியும் சிங்களம் தன்னாதிக் கத்தைத் தொடர்ந்தது.

தமிழர்கள் தூங்கினர். அல்ல, அல்ல தமிழ் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் தூங்கினர். கியூபா, வியட்நாம், பங்களாதேஸ் வரிசையில் தமிழீழமும் விடுதலை பெறக் கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்பைக் கைநழுவ விட்டனர்.

கையாலாகாத் தனத்துடனான எம்மவரின் கயமை அர சியலைக் கண்முன்னே பார்த்துப்பார்த்து பக்குவப்பட்டு தேர்ந்து தெளிந்த தமிழனால் - ஆம் எங்கள் தலைவரால் - விடுதலைக் கான அரசியலுக்கு அடித்தளம் அமைந்தது. வீரமும், செயலூக் கமும் கொண்ட ஆயுதப்போராட்ட அரசியல் உருவானது.

உயிர் மீதான அச்சமே கோழைத்தனத்தை உருவாக்குகிறது என்றும், தேசத்தின் விடுதலையை நகர்த்த வேண்டிய பொறுப் பில் உள்ளோர் இந்த அச்சநிலையைக் கடந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதையும் அடிக்கடி சொல்வார் தலைவர்.

இந்திய அரசு எம்மக்களது விடுதலையைப் பணயம்வைத்து ஆடிய நாடகத்தில் விட்டுக்கொடுத்து விடாமல் தலைவர் உறுதியாக நின்றதற்கு காரணம் உயிர்வாழ்வு பற்றிய நம் பிக்கை அல்ல தேசத்தின் விடுதலை பற்றிய தெளிவு.

தமிழீழ விடுதலைக்குரிய அரசியலுக்கான தமிழ்ச்செல்வனின் தகைமையை அவனது துணிவுக் கூடாகவும், அர்ப்பணிப்புக் கூடாகவும் பார்த்தார் தலைவர்; தேசவிடுதலைக்கான அரசியல் பற்றிய பரந்துவிரிந்து விசாலமான தனதுகனவுகளை தமிழ்ச் செல்வனின் மனதில் பதியவைத்தார் தலைவர்.

மக்கள்மயப்பட்ட அரசியல்அலகுகள் பற்றிய தலைவரின் எண் ணங்களை செயல்ப்படுத்துவதில் தமிழ்ச்செல்வன் மூச்சாகச் செயற்பட்டான். வறுமைப்பட்ட மக்களின் குழந்தைகள் போசாக் கின்றி இருப்பதுபற்றி தலைவரும், தமிழ்ச்செல்வனும் கதைத் துக் கொண்டிருப்பர். கொஞ்சநாள்செல்ல மொழுமொழுவென்று அழகான குழந்தையொன்றின் புகைப்படத்தையும், மிகவும் மெலிந்த இன்னொரு குழந்தையின் புகைப்படத்தையும் ஒன்றாகக் காட்டுவார் தலைவர்.

இந்தப் பிள்ளையைத்தான் எமது சிறுவர் போசாக்குப்பூங்கா பொறுப்பேற்று மொழுமொழு பிள்ளையாய் தாயிடம் திரும்பப் பொறுப்புக்கொடுக்கிறது என்று சொல்லும்போது தலைவரின் சொல்லில் மகிழ்ச்சிபொங்கும். குழந்தைகளுக்குச் சிறுவர் போசாக்குப்பூங்கா என்றால் ஆதரவற்ற முதியவயோதிபர் களைப் பராமரிப்பதற்கென மூதாளர் பேணலகம் இன்னொரு தளத்தில் செயற்படும்.

ஒவ்வொரு வயதினருக்கும், சமூகத்தில் ஒவ்வொரு மட்டத் தினருக்குமென ஆரோக்கியம் - சுகாதாரம் - கல்வி என ஒவ்வொரு தளத்திலுமாகக் கட்டுமானங்களை உருவாக்கி அரசியல் பணிசெய்த தமிழ்ச்செல்வனது ஆளுமை விசால மானது.

யாழ்ப்பாணம் - வலிகாமத்தில் இருந்து ஒருபொழுதில் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்தனர். நெருக் கடிகளைச் சந்தித்தோம் உண்மைதான். ஆனால் பட்டினிச் சாவோ அல்லது நோயுற்றதாலான சாவோ எதுவாயினும் ஒன்றேனும் நடந்ததாக யாரேனும் சொல்லமுடியுமா?

முழுப்பிரச்சனைகளையும் எமது இயக்கமே பொறுப்பேற்று தீர்த்துவைத்தது என்று சொல்லமுடியாதுதான். எமதுமக்களும், நிறுவனங்களும், சமூகத்தின் அனைத்து மட்டத்தினரும் சேர்ந்து சுமந்ததால் வந்தவெற்றிதான் இது. இல்லை என்று கூறமுடியாது.

ஆனால் அதற்காக எம்சமூகத்தை ஒருங்கிணைத்து, நெறிப் படுத்தி, இரவுபகல் பாராது களத்தில் முன்நின்று வழிநடத்தி அரசியல் நிர்வாக ஆற்றலை வெளிப்படுத்தினான் தமிழ்ச் செல்வன்.

அதுபோல்தான் தென்மராட்சியிலிருந்து வன்னிக்கும், வன் னிக்கு உள்ளேயுமான இடம்பெயர்வுகளுமாக எம்மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு அலைந்துதிரிந்த பொழுதெல்லாம் அவர்களுடன் நின்றனர் எம் அரசியல்ப்போராளிகள்:

எம்மக்களுக்கு சிறப்பாக வாழ்வளிக்க முடியாதுபோனாலும் சீரழிந்து போகாமல் பார்த்துக்கொண்டோமென்றால் அது நிர்வாகசேவை, பொருண்மியமேம்பாட்டு நிறுவனம், தமிழீழ சுகாதாரசேவை, குழந்தைகள், பெண்கள் நலன்பேணல் அமைப்புகள் ஆகிய தமிழ்ச்செல்வனின் ஆளுகையில் அமைந்திருந்த அரசியல் கட்டுமானங்களால்தான்.

கடல்பொங்கி ஆழிப்பேரலை கோரத்தாண்டவமாடியது. பாதிக்கப்பட்ட ஆசியாவின் பலநாடுகளுடன் ஒப்பிடுகையில் நாம் சந்தித்த அழிவு கொஞ்சமல்ல பேரழிவு.

மீளஎழுந்தோம். பேரினவாதஅரசு ஆழிப்பேரலை மீள்கட்டு மானத்திட்டத்தை செயற்படவிடாமல் முடக்கித் தடைசெய்த போதும் மீளஎழுந்தோம்.

விரைவான அனர்த்த முகாமைத்துவத்திற்காக உலக அரங்கில் நாம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களானோம் என்றால், அதுவும் உலக உயர்மட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்டு முறை யாகப் பாராட்டப்படும் வகையில் செயற்பட்டுக் காட்டினோம் என்றால், எல்லா வளங்களும் கொண்ட நாடுகளை விட சிறப் பாக, வேகமாக இங்கு அவசர புனர்வாழ்வு மற்றும் சுகாதார, ஆரோக்கியப் பிரச்சனைகளைக் கையாண்டுள்ளோமென்றால் மேற்படி எமது தமிழ்ச்செல்வனின் ஆளுகையில் அமைந்த சமூக, அரசியல் கட்டுமானங்களால் தான்.

போரின் உச்சநெருக்கடியிலும்கூட, எதிரியின் பொருண்மியத் தடைகளின் போதும்கூட பிச்சை எடுக்கும் ஒருவரைக் கூட எம்மண்ணில் காணமுடியாதபடிக்கு சமூக மட்டத்தில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதென்றால் அரசியல் வேலைத்திட்டங்களின் வீச்சைப்புரிந்துகொள்ளலாம்.

எமது அரசியல் வேலைத்திட்டங்களின் பின்னணியில் தலைவரது சிந்தனையும். வழிநடத்தலும் இருந்தது என்பது உண்மைதான். இன்னும் சொல்லப்போனால் தலைவரது எண்ணங்களின் செயல்வடிவங்கள்தான் இவை என்பதும் உண்மைதான்

ஆனாலும் தலைவரின் எண்ணங்களையும், வழி நடத் தலையும் புரிந்து, தெளிந்து செயலில் நடைமுறைப் படுத்துவதற் கான அர்ப்பணிப்பு, அறிவு, திறமை, ஆளுமை என்பன ஒருங்கே பெற்ற ஆற்றலோனாகத் தமிழ்ச்செல்வன் மிளிர்ந்து, செயற்பட்டான் என்பதே உண்மை.

விடுதலைக்கான அரசியல்பணி ஒருவகையில் சவாலானது. இறைமையுள்ள நாடு என்ற சொற்பதமானது ஆக்கிர மிப்பாளர் களது எல்லாக் கொடுமைகளுக்குமான கவசமாக அமைந்து விடும். அதேவேளை விடுதலை வேண்டிப் போராடும் இனத் தின் தற்காப்பிற்கான போராட்டமானது பயங்கரவாதமாக முறை யிடப்படும்.

இராசதந்திர அழுத்தத்திலிருந்து நாகரீகமற்ற நேரடி அச்சுறுத் தல்வரை பல பேச்சுமேசைகளில், பல படிமுறைகளில் இந்தியா எம்மை பணியவைக்க முயன்ற படிப்பினைகளையும், சிங்கள அரசு பேச்சுக்களின்போது எம்மை ஏமாற்ற முயலும் தொடர்ச் சியான அணுகுதல்பற்றியும் தலைவரிடமும், தேசத்தின்குரல் பாலா அண்ணை அவர்களிடமும் நிறையவே கற்றறிந்து புடம்போடப்பட்டவனாக இருந்தான் தமிழ்ச்செல்வன்.

எம்மக்கள் மத்தியில் இருந்த மெத்தப் படித்தவர்களது வலிமை யற்ற பேச்சுக்கள், அதாவது சரணாகதிக்கான சமாளிப்புகள் இராசதந்திரமாகக் கூறப்பட்டது ஒருகாலம் தமது இனத்தையே அடிமைகொள்ளவைக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணை போய் காட்டிக்கொடுப்பதை இராசதந்திரமாகக் கூறப்பட்டது இன்னொருபக்கம்.

விடுதலைக்கான நியாயத்தை விட்டுக்கொடுக்காமல் இருப் பதிலும் சரி, அதேவேளை உரையாடலைச் சிறப்பாக முன் னெடுத்து சபையின் நிலையை தனது ஆளுமைக்குள் எடுப் பதிலும் சரி தமிழ்ச்செல்வன் தேர்ந்த இராசதந்திரியாகச் செயற்பட்டான்.

மறுத்துரைக்க முடியாதபடி முன்வைக்கப்படும் அவனது கருத்துக்களுடன், உலகம் முழுவதும் அறியப்பட்டு விட்டதான அவனது புன்சிரிப்பும் சேர்ந்து அவனைச் சந்திப்பவர்களைக் கட்டிப்போடும்.

ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் அவன் கையாண்ட விதமும்கூட தேர்ந்துமுதிர்ந்த அரசியல் தலைவ னாக அவனை உலகிற்கு அடையாளம் காட்டிநின்றது.

எமதுமக்களின் துயரங்களைக் கருத்திலெடுக்கக்கூடாது என்ற தீர்மானமான முன்கூட்டிய முடிவுடன் வருபவர்களைத் தவிர மற்றெல்லோரும் தமிழ்ச்செல்வனின் சொல்வன்மையினால் கட்டுண்டு எம் நியாயங்களை உணர்ந்துசென்றனர் என்பதே உண்மை.

தலைவர் உணர்வூட்டியது பாதி மற்றும் பாலா அண்ணையிடம் கேட்டறிந்ததும், தானாக கற்றுணர்ந்ததும் மீதியாக முதிர்ந்த அரசியல்தலைவனாக, இராசதந்திரியாக, பேச்சுவார்த் தையாளனாக தமிழ்ச்செல்வன் பரிணமித்தான்.

தமிழ்ச்செல்வனது இராசதந்திரத் திறனானது அவனது சிறப் பாற்றலினதும், நேர்மையான விடுதலைப் பற்றினதும் வெளிப் பாடு என உறுதியாகக் கூறலாம்.

ஈழத்தமிழினத்து வரலாற்றில் மட்டுமல்ல, ஒடுக்கப்பட்டு விடுதலை வேண்டிநிற்கும் இனங்களின் சார்பிலும்கூட தமிழ்ச் செல்வனது இராசதந்திரத் திறனும், அணுகுதலும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும்.

தலைவர் அரசியல்பொறுப்பாளராக தமிழ்ச்செல்வனை மிக உயர்வாக மதித்தார். தமிழ்ச்செல்வனது கருத்தறியாது தலைவர் செயற்படுத்தும் விடயங்கள் அரிதாகவே இருக்கும்.

அதேவேளை நிர்வாக விடயங்களில் அல்லது மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் தவறு நிகழும்போது கண்டிக்கவும் தவற மாட்டார். பொதுமக்களுக்கு எங்காவது தொற்றுநோய் ஏற்பட் டிருப்பதாகவோ, எம்மால் தீர்க்கப்படக்கூடிய குறைபாடுகள் கவனிக்கப்படாமல் இருப்பதாகவோ, நிர்வாக விடயங்களில் நியாயமின்மை நிகழ்ந்ததாகவோ முறைப்பாடுகள் கிடைக்கும் வேளையில் தலைவரது கோபம் வெளிப்படும். தலைவரது இந்தக் கண்டிப்பை யாராவது வேறுவிதமாக விளங்கி தமிழ்ச்செல்வனை குறைசொல்லி அவனது பணிகளைப் பங்கப்படுத்த முற்பட்டாலும் உடனே தலைவருக்குக் கோபம் வரும்.

தமிழ்ச்செல்வனது செயற்பாடுகளின் தாக்கத்தையும், அவரது சாதனைகளையும் எடுத்துக்கூறவும் தயங்கமாட்டார் தலைவர். அன்பும், கண்டிப்பும், உறவும், உரிமையும், கோபமும், பாசமும் கொண்ட அவர்களது உறவு அற்புதமானது.

எங்காவது, யாராவது ஒருபோராளி அல்லது பணியாளர் தவறு செய்து அதுவொரு விடயமாக ஆகிவிட்டதென்றால் தலைவரிடம் வரும்போது சங்கடத்துடனும், சஞ்சலத்துடனுமிருப்பான் தமிழ்ச் செல்வன். தலைவரிடம் கதைத்துத் தெளிவுபடுத்தியபின் புறப்படும்போது, “இடைக்கிடை பேச்சுவாங்கித் தெளிந்தால் தான் நல்லது” என சிரித்துக்கொண்டே சொல்வதைக் காணலாம்.

எம் இன விடுதலைவேண்டி உலகம் முழுக்க ஒலித்த அவனது குரல்... இன்னும் ஓயவில்லை, இனியும் ஓயாது, எம் விடுதலை வரை ஓயாது.

வாழ்ந்தபோது செய்ததையே அவன் வீழ்ந்தபோதும் செய்தான். கைத்தடி தாங்கிய அந்தப் புன்னகைச் செல்வனின் முகம் உலகின் மனச்சான்றின் முன்னே, உலகத் தமிழினத்தின் முன்னே எழும்பிய வினாக்களுக்கான விடையை, சிங்களம் சொல்லும்காலம் வரும்.

தமிழ்ச்செல்வன் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டான் என்பது எவ்வளவுதூரம் உண்மையோ, தமிழ்ச்செல்வன் எம்மை விட்டுப் பிரியமாட்டான் என்பதும் அதேயளவு உண்மை.

தமிழீழம் பற்றிய கனவாக, அந்தக்கனவின் செயல் வடிவத்திற் கான நிர்வாக அலகுகளாக, அந்த நிர்வாகங்களை இயக்குகின்ற ஆளுமைகளாக வாழ்கிறான், வாழ்வான். என்றும் வரலாற்றில் வாழ்வான் - வரலாறாய் வாழ்வான்.

நினைவுப்பகிர்வு:- ச.பொட்டு அம்மான்
(புலனாய்வுத்துறை பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப்புலிகள்)

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”




தமிழீழ
மரநடுகை மாதம்
'கார்த்திகை'
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்




# பாலஸ்தீன இஸ்ரவேல் யுத்தம் தமிழர்கள் யாருடைய பக்கம்?

22.10.2023

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் வேகமெடுக்கத் தொடங்கியபோது 1970களின் இறுதியாண்டுகளிலும், 1980களின் முற்கூறிலும், தமிழ் இயக்கங்களான ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்றன பாலஸ்தீனத்தில் படைதுறைப் பயிற்சிகளைப் பெற்றன. அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் தாயகத்தில் "பிஎல்ஓ ரெய்னிஸ்" என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களிற் பலர் அந்த இயக்கங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்திருக்கிறார்கள். அவர்களிற் சிலர்-சுரேஷ் பிரேமச்சந்திரன், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் - இப்பொழுதும் தமிழ் அரசியலரங்கில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பக் காலகட்டங்களில் பலஸ்தீனம் தமிழ் மக்களின் நட்பு சக்தியாக இருந்தது. அந்நாட்களில் கவிஞர் நுகுமான் தொகுத்த பாலஸ்தீனக் கவிதைகள் என்ற தொகுப்பு தமிழ்ப் போராளிகளால் விரும்பி வாசிக்கப்பட்டது. அந்நூல் பல இளம் கவிஞர்கள் மீது செல்வாக்குச் செலுத்தியது. அக்காலகட்டத்தில் இஸ்ரவேல் இலங்கை அரசாங்கத்திற்கு போர்த் தளபாடங்களை வழங்கியது. அது கெடுபிடிப் போர்க் காலகட்டம்.

1992இல் இஸ்ரவேலிய உளவு நிறுவனமாகிய மொசாட்டின் உளவாளிகளில் ஒருவரான விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி என்பவர் ஒரு நூலை வெளியிட்டார். By Way of Deception: The Making and Unmaking of a Mossad Officer எனப்படும் அந்த நூல் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியது. அந்த நூலை வெளியிட்ட விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கனடாவில் தஞ்சமடைந்து விட்டார். அந்த நூலானது மொசாட் எவ்வாறு இலங்கைத்தீவில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுக்கும் உதவிகளை புரிந்தது என்ற தகவல்களை வெளிப்படுத்தியது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் ஒரே மைதானத்தின் இருவேறு பகுதிகளில் பயிற்சி வழங்கப்பட்டது பற்றிய விபரங்கள் அந்நூலில் உண்டு.

மேலும் இலங்கை அரச படை அதிகாரிகள் தொடர்பாக தரக்குறைவாகச் சித்தரிக்கும் பகுதிகளும் உண்டு. இலங்கை அரச படை அதிகாரிகள் ஒருவர் துறைமுகத்தில் "வக்யூம் கிளினரோடு" இணைக்கப்பட்டிருந்த ஸ்கானிங் திரையைக் காட்டி இதில் என்ன தெரியும் என்று கேட்டபொழுது, நீருக்கடியில் ரகசியமாகச் சுழியோடி வருபவர்களின் குருதிப்பிரிவு உட்பட எல்லா விவரங்களையும் இது காட்டும் என்று ஒரு மொசாட்




அதிகாரி அவருக்கு கூறுகிறார். ஏன் அப்படி பொய் சொன்னாய் என்று கேட்டதற்கு அவர்கள் இப்பொழுதுதான் காட்டிலிருந்து வந்திருக்கிறார்கள் என்ற தொனிப்பட அவர் பதில் கூறியதாக ஒரு ஞாபகம். இந்த நூலை விடுதலைப் புலிகள் இயக்கம் "வஞ்சகத்தின் வழியில்" என்ற தலைப்பில் மொழி பெயர்த்து தனது போராளிகளுக்கு விநியோகித்ததாகவும் ஒரு ஞாபகம். அந்த நூல் இலங்கை அரசு படைகளை அவமதிக்கிறது என்று கூறி அப்போதிருந்த ஜனாதிபதி பிரேமதாச விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கிக்கு எதிராக வழக்குத் தொடுக்க முற்பட்டதாகவும் ஒரு ஞாபகம்.






இந்நூல் வெளிவந்த அடுத்தாண்டு, 1993இல் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின் விளைவாக இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் ஒஸ்லோ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின்படி பலஸ்தீனர்களுக்கு ஒரு தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இக்கட்டமைப்பு இலங்கைத்தீவில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிகம் நட்பாக காணப்பட்டது. தொடக்க காலத்தில் இருந்தே மகிந்த பாலஸ்தீனத்தின் நண்பனாக இருந்து வருகிறார். பாலஸ்தீன-சிறீலங்கா சகோதரத்துவ அமைப்பின்




ஸ்தாபகத் தலைவர் அவர். 2014 ஆம் ஆண்டு அவர் பாலஸ்தீன அதிகார சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு விஜயம் செய்தார். அங்கே அவருக்கு அந்நாட்டின் அதி உயர் விருது ஆகிய “Star of Palestine” – பாலஸ்தீன நட்சத்திரம் விருது வழங்கப்பட்டது. அங்குள்ள ஒரு வீதிக்கு மகிந்தவின் பெயர் சூட்டப்பட்டது. இனப்படுகொலை மூலம் மகிந்த, தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்ததாக தமிழ் மக்கள் குற்றஞ் சாட்டிக் கொண்டிருந்த ஓர் அரசியற் சூழலில், ஐநாவில் மகிந்தவுக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், பலஸ்தீனம் மேற்கண்டவாறு மஹிந்தவைக் கௌரவித்தது.

இப்படிப்பட்டதோர் வரலாற்றுப் பின்னணியில், இப்பொழுது வெடித்திருக்கும் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான போரில் தமிழ் மக்கள் எப்படிப்பட்டதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்? தர்மத்தின் அடிப்படையில் சொன்னால், போராடும் தேசிய இனம் என்ற அடிப்படையில் சொன்னால், பாலஸ்தீனத்தைத்தான் ஆதரிக்க வேண்டும். காசாவில் இப்பொழுது என்ன நடக்கின்றதோ அது தான் வன்னி கிழக்கிலும் நடந்தது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக பெரும்பாலான அரபு நாடுகள் உண்டு. ஆனால் தமிழ் மக்களுக்கு ஆதரவாக வெளிப்படையாக எந்த ஒரு நாடும் அன்றைக்குக் குரல் கொடுக்கவில்லை. தமிழ்மக்கள் தனித்து விடப்பட்டிருந்தார்கள். ஏறக்குறைய முழு உலகத்தாலும் சுற்றி வளைக்கப்பட்டிருந்த ஒரு நிலை. பலஸ்தீனர்களுக்கு உணவு, மருந்து, தார்மீக ஆதரவு போன்றவற்றைக் கொடுப்பதற்கு அரபு நாடுகள் உண்டு. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு யார் இருந்தார்கள்?

அதேசமயம் இஸ்ரவேலுக்கு அதன் தொட்டப்பாக்களாகிய மேற்கத் திய நாடுகள் தொடர்ந்து தார்மீக ஆதரவையும் ஆயுத தளபாடங் களையும் வழங்கி வருகின்றன. குறிப்பாக ஆசிய வட்டகைக் குள் இந்தியா போர் தொடங்கிய உடனேயே இஸ்ரவேலுக்கு தன் ஆதரவை தெரிவித்துவிட்டது.

இப்பொழுது மேற்சொன்னவற்றை தொகுத்துப் பார்க்கலாம். ஒரு காலம் தமிழ் மக்களுக்கு ஆதரவாக காணப்பட்ட பாலஸ்தீனம் பின்னாளில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிஉயர் விருதை வழங்கியது. அதே சமயம் இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுதங்களை விநியோகித்த இஸ்ரவேல் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் பயிற்சிகளை வழங்கியதாக விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கூறுகிறார்.



இப்பொழுது இஸ்ரவேலை ஆதரிக்கும் மேற்கு நாடுகள் ஐநா மனித உரிமைகள் பேரவையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன. அப்படியென்றால் இது விடயத்தில் ஈழத் தமிழர்கள் யாருடைய பக்கம் நிற்க வேண்டும்?

தர்மத்தின் அடிப்படையில் சொன்னால் பாலஸ்தீனத்தின் பக்கம் தான். இராஜதந்திரத்தின் அடிப்படையில் பார்த்தால்?

முதலில் அரசியலில் தர்மம் சார்ந்த நிலைப்பாடுகள் உண்டா என்று பார்க்கலாம். நவீன அரசியலைப் பொறுத்தவரை அறம், தர்மம், நீதி என்று எதுவும் கிடையாது. அரசியல், இராணுவ, பொருளாதார நலன்சார்ந்த அருவருப்பான பேரம் மட்டும்தான் உண்டு.

உதரணமாக, யூதர்களை எடுத்துக் கொள்வோம். உலகின் மிக நீண்டகாலம் புலப்பெயர்ந்த மக்கள் யூதர்கள்தான். சுமார் இரண்டு ஆயிரம் ஆண்டு கால புலப்பெயர்ச்சி அது. அதனால் உலகில் அதிகம் ஐரோப்பிய மயப்பட்ட ஆசியர்களாக அவர்கள் மாறினார்கள். கடந்த நூற்றாண்டில் யூதர்கள் ஐரோப்பாவெங்கும் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இரண்டாம் உலகமகா யுத்தச் சூழலில் சுமார் 6 மில்லியன் யூதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த இனப்படுகொலையின் குழந்தைதான் இஸ்ரவேல். இன்னொரு விதமாகச் சொன்னால் யூதப் புலப்பெயர்ச்சியின் குழந்தையே இஸ்ரேல். ஆனால் ஓர் இனப்படுகொலையின் விளைவாக உருவாகிய யூததேசம், இன்னொரு இனப்படுகொலைக்குக் காரணமாகியது. உலகில் அதிகம் இனப்படுகொலைக்கு உள்ளாகிய ஒரு மக்கள் கூட்டம் சிறிய பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்கின்றது. உலகின் மிகப்பெரிய இனப்படுகொலையில் இருந்து இஸ்ரவேல் கற்றுக்கொள்ளாத அறத்தை, தர்மத்தை, நீதியை வேறு யாரிடமிருந்து எதிர்பார்க்கலாம் ?

ஜனநாயகம், மனித உரிமைகள் போன்றவற்றை அரசியல் உபகரணங்களாகப் பயன்படுத்தும் மேற்கத்திய நாடுகள்தான் இஸ்ரவேலின் தொட்டப்பாக்கள். கடந்த 18 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்கப் பிரதிநிதி பேசத் தொடங்கிய பொழுது, அங்கே பிரசன்னமாகியிருந்த பெரும்பாலான நாடுகளின் பிரதிநிதிகள் எழுந்து நின்று அமெரிக்கப் பிரதிநிதிக்கு தமது முதுகைக் காட்டியபடி நின்றார்கள். நிகழும் யுத்தத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு எதிரான நடவடிக்கை அது. ஆனால் அதே அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள்தான் ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டு வருகின்றன.

இஸ்லாமிய நாடாகிய துருக்கி அமெரிக்கா தலைமையிலான நோட்டோவுக்குள் அங்கம் வகிக்கின்றது. ஆனால் ஹமாசுக்கு உதவி புரியும் நாடுகளில் துருக்கி முக்கியமானது. ஒருபுறம் அது ஹமாசுக்கு உதவி செய்கிறது; இன்னொருபுறம் அமெரிக்கக் கூட்டணிக்குள் காணப்படுகின்றது.

கியூபா ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் பக்கம் தான் நிற்கின்றது. அது போராடி வென்ற ஒரு நாடு. ஈழப் போராட்டத்தின் தொடக்கத்தில் கியூபாவும் ஓர் இலட்சிய முன்மாதிரியாகப் போற்றப்பட்டது. ஈழப் போராளிகள் சிலர் தமக்கு கஸ்ரோ என்று பெயர் வைத்துக் கொண்டார்கள். ஆனால் கியூபா, ஐநாவில் தமிழ் மக்களின் பக்கம் நிற்கவில்லை.

எனவே இங்கு தர்மம் ஓர் அளவுகோல் அல்ல. உலகில் எந்த ஒரு நாடும் அது சிறியதோ அல்லது பெரியதோ, தனது நலன் சார்ந்த முடிவுகளைத்தான் எடுக் கும். நலன்சார்ந்த உறவு களைத் தான் வைத்துக் கொள்ளும். அறம் சார்ந்து அல்ல.



அரசுடைய தரப்புக்களே அவ்வாறு முடிவு எடுக்கும் பொழுது அரசற்ற சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத் தமிழர்கள் எப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும்?

நீதிமான்களிடம் தான் ஈழத்தமிழர்கள் நீதியை கேட்கலாம் என்றால் உலகில் எங்கேயும் நீதியை கேட்க முடியாது. தேவ ராஜ்யத்திடம்தான் கேட்கலாம். அல்லது மறைந்த மலையக தலைவர் சௌமியமூர்த்தி தொண்டைமானைப்போல யாகம் செய்யலாம். நவீன அரசியலைப் பொறுத்தவரை பூமி தர்மத்தின் அச்சில் சுற்றவில்லை. அது முழுக்கமுழுக்க நலன்களின் அச்சில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறது. அப்படியென்றால் ஈழத் தமிழர்கள் இப்பொழுது என்ன நிலைப்பாட்டை எடுப்பது?

ஈழத்தமிழர்கள் மத்தியில் தோன்றிய ஆன்மீகவாதியும் எழுத்தாளரும் அறிஞரும் ஆகிய மு.தளையசிங்கம் ஒரு வார்த்தையை பயன்படுத்துவார். அதுதான் “சத்திய தந்திரம்”. மு. தளையசிங்கம் ஈழப்போரின் முன்னோடி இலக்கியவாதிகளில் ஒருவர். அவர் எழுதிய “ஒரு தனி வீடு” நாவல் ஒரு தனி நாட்டுக்கான போராட்டத்தை தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தியது என்று அவருடைய ஆன்மீக நண்பர்கள் கூறுவார்கள். சத்திய தந்திரம் என்றால் என்ன? மகாபாரதத்தில் கிருஷ்ணர் செய்வது அதைத்தான். பாரதப்போரில் பாண்டவர்கள் வென்றது புஜபலத்தால் அல்லது ஆயுத பலத்தால் அல்லது படை பலத்தால் மட்டும் அல்ல. பெருமளவுக்கு கிருஷ்ணருடைய புத்தி பலத்தால்தான். மகாபாரதத்தை வேறு வார்த்தைகளில் சொன்னால் கிருஷ்ண தந்திரம் எனலாம். அதைத்தான் தளையசிங்கம் சத்திய தந்திரம் என்று சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் தமிழ் மக்கள் தமது போராட்டத்தின் இதயமாக இருக்கும் அறத்தைக் கை விடாமல், உலக ஒழுங்குக்கு ஏற்ப நெளிவு சுழிவோடு நடந்து கொள்வது என்றால் அதுதான் ஒரே வழி. அதை கிறிஸ்துவின் வார்த்தைகளில் சொன்னால் “இதயத்தில் புறாக்களைப்போல் கபடம் இல்லாமலும் செயலில் பாம்புகளைப் போல் தந்திரமாகவும்” நடந்து கொள்வது.

நன்றி: நிலாந்தன்


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
Save
80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,
சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
CRC
CREDIT
RECOVERY
CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca



# சுட்டும் வழிச்சுடர்

**கொற்றவை**

**சிறுகதை**

ஆதிகாலை நான்குமணி இருக்கும். பனிக்குளிரின் போர்த்தலில் ஆழ்ந்திருந்தது அந்தக் கிராமம். வைகறைப் பொழுதுக் கேயுரிய இயற்கையின் இனிமையான சிரிப்பு. எழுவான் திசை வெளுக்கத் தொடங்கும் நேரம். அந்த நேர இனிமைக்குச் சுரதி கூட்டும் பறவைகளின் "கிலா கிலா"க்கள். அதிகாலையின் இன்பத்தைச் சிதைப்பதற்குத் திடீரென கிளம்பியது, "அவக், அவக்" கெனக் குரைக்கும் நாய்களின் சத்தங்கள். நாய்களின் குரைப்பு கட்டியங்கூற அதனைத்தொடர்ந்து, பச்சைநிற அதனைத்தொடர்ந்து, பச்சைநிற வாகனங்களின் உறுமல் காற்றினிலேவந்து, ஊரவர்களின் செவிப்பறைகளிலே புகந்து அவர்களின் பனிக்குளிரின் இதத்தில் அமைதியான உறக்கத்தில் இருந்த ஊரவர்கள், அவதி அவதியாக எழுந்து அக்கம்பக்கத்தவர்களுடன் "என்ன ஏது" என்று குசுகுசுக்கத்தொடங்கினர். எல்லோர் முகங்களிலும் பீதி. நெஞ்சு "திக், திக்" என்று, குறிக்கப்பட்ட தடவைகளையும் விட பலமடங்கு வேகமாகவும் சத்தமாகவும் துடிக்கிறது. அந்தப் பனிக்கூதலிலும் வியர்த்தது அவர்களுக்கு.

"கடவுளே!

வாறானுகள், வாறானுகள், எங்கட பிள்ளைகுட்டியளை என்ன செய்யப்போறானுகளோ தெரியா? அம்மாளாச்சி நீதான் காப்பாத்தனும்" பார்வதிக் கிழவி தலைமேல் கைகுவித்து குலதெய்வமான ஊர் அம்மனைத் தொழுகிறாள். அனேகமாக ஊரவர்கள் அனைவருமே தமது உயிரை அம்மாளாச்சியிடம்தான் அடைக்கலம் கொடுத்து வேண்டிக்கொண்டிருந்தனர். கைகள் நெஞ்சைத்தடவ விழிகள் பிதுங்கி உருண்டன. வீடுகளின் விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டு எங்கும் நிசப்தம், நாய்களின் குரைப்பினைத் தவிர.

> **வேலிகளை வெட்டிக்கொண்டு வளவுகளிற்குள் பாய்ந்தவர்கள் வேலிகளிலுள்ள தடிகளை முறித்து அதனைக்கொண்டே பட்டி மாடுகளைக் காலைப் பொழுதுகளில் சாய்ப்பதுபோல குஞ்சு குருமன்கள், கிழவி குமர் என்று எல்லோரையும் பள்ளி மைதானத் துக்குச் சாய்த்துச்சென்றனர்.**

அதிகாலையிலே ஊரில் இருந்து இரண்டுமைல் தொலைவிலுள்ள இராணுவ முகாமிலிருந்து ரத்தப் பசியெடுத்தவர்களைக் காவிக்கொண்டு புறப்பட்ட பச்சைநிற வாகனங்கள் இப்போது கிராமத்தின் கிறவல் தெருக்களில் உறுமிக்கொண்டிருந்தன. கிராமத்தின் மௌனம் அவர்களிற்குத் துணிவையும் வெறியையும் மூட்டியது. வந்த வாகனங்கள் கிராமப்பாடசாலையின் மைதானத்தில் தரிக்க, "தொப் தெப்" பெனக் குதித்தவர்களின் முகங்கள் சிவந்து இறுகிக்கிடந்தன. இறங்கி ஒரு அதிகாரி கட்டளைகளைப் பிறப்பித்தான். வெனது உத்தரவிற்கேற்ப நான்காகப் பிரிந்து நான்கு திசைகளிலும் புறப்பட்ட சீருடைகள் ஊரக்குள் புகுந்தன.

வேலிகளை வெட்டிக்கொண்டு வளவுகளிற்குள் பாய்ந்தவர்கள் வேலிகளிலுள்ள தடிகளை முறித்து அதனைக்கொண்டே பட்டி மாடுகளைக் காலைப் பொழுதுகளில் சாய்ப்பதுபோல குஞ்சு குரமன்கள், கிழவி, குமர் என்று எல்லோரையும் பள்ளி மைதானத்துக்குச் சாய்த்துச்சென்றனர்.

மைதானத்தைச் சென்றடையும் முன்னரே பல இளைஞர்களின் உடலில் இருந்த அரைவாசிக்கும் மேற்பட்ட இரத்தம் ஊர் மண்ணின் மீது வழிந்து விழுகின்றது. இரத்தம் சொட்டச்சொட்ட

> **பனிக்குளிரின் இதத்தில் அமைதியான உறக்கத்தில் இருந்த ஊரவர்கள், அவதி அவதியாக எழுந்து அக்கம்பக்கத்தவர்களுடன் "என்ன ஏது" என்று குசுகு சுக்கத்தொடங்கினர். எல்லோர் முகங்களிலும் பீதி, நெஞ்சு "திக், திக்" என்று குறிக்கப்பட்ட தடவைகளையும் விட பல மடங்கு வேகமாகவும் சத்தமாகவும் துடிக்கிறது. அந்தப் பனிக்கூதலிலும் வியர்த்து அவர்களுக்கு.**

அவர்கள் மைதானத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். அங்கு ஆண், பெண் எனப் பிரிக்கப்பட்டு நிறுத்தப்பட்டவர்களின் முன் சீருடையில் இல்லாத ஒருவன், பெரிய கட்டுப்போட்ட காலை இழுத்துக்கொண்டு வந்தான். வாகனத்திலிருந்து இறங்கவே வெகுவாகப் பிரயத்தனப்பட்டவனின் கண்கள் ரத்தமெனச் சிவந்திருந்தன. முகத்தில் குரொதம் தாண்டவமாடியது. அவனை அடையாளங்கண்டுகொண்ட கிராமத்தவரின் உடல்கள் "கிடு கிடு" க்கத்தொடங்கின. இறங்கியவன் அவர்களைப்பார்த்து உறுமினான்.

"நீங்க எல்லாங் நம்மளைக் கண்டோன மட்டுங் சும்மா பயங் சொல்லுறது. கொட்டியா வந்தா அதோட சேர்ந்து நம்மளுக்கு மண் தீத்துறது" அவன் இவ்வாறு கத்தியதுதான் தாமதம், ஆலையில் இயந்திரங்களால் கரும்பு பிழியப்படுவதுபோல கிராம மக்கள் துவைத்து எடுக்கப்பட்டனர்.

அந்தப்போராளி மிகவும் களைத்திருந்தான். காட்டின் மைய முகாமிலிருந்து கிராமத்துக்கு முக்கிய வேலையாக அனுப்பப்பட்டிருந்த அவன், வந்த வேலையை முடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான். ஐம்பதுமைல் தூரத்துக்கு மேலாக நடந்தபடியால் கால்கள் ஓய்வு கேட்டுக்கெஞ்சின். காட்டுப்பாதைகளின் முட்பற்றைகளினது உறுத்தலில் பாதங்களில் சிவப்புக் கோடுகளாகக் காயங்கள். பாதம் நிலத்தில் பதியும்போது காயங்கள் தாக்குப்பட்டு வலியில் உயிர்போய்வந்தது. முகாமிலிருந்து வெளிக்கிட்டதிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை. சக்தி இழப்பு, சோர்வு, பசியினால் அவனது புலன்களின் சக்தி பெருமளவுக்கு மந்தமாயிருந்தது. மனத்தின் வலிமையும், இலட்சிய வேட்கையுமே அவனை உந்திக்கொண்டிருந்தன. தனக்கிடப்பட்ட முக்கிய பணியை மனத்தில் நினைத்தவன் உடலின் சோர்வையும், வேதனையையும், பசியையும் மீறி வேகமாக நடக்க முனைந்தான். அவனது விரல்கள் இடைக்கிடை தோளில் கிடந்த "டாஸ்ரூ"வைத் தடவின.

கிராமத்தைத் தாண்டிக் காட்டுமுகப்பை அடைந்தவனின் உள்ளுணர்வு, ஏதோ ஆபத்து எதிரில் இருப்பதாக உணர்த்த, தோளிலிருந்து "டாஸ்ரூ" கைக்கு வந்தது. இயங்கும் நிலையில் தயாராக, சகல புலன்களும் ஊசிமுனை அளவினைக்கூடத் துல்லியமாக எடைபோடத் தொடங்கின. சற்று தூரத்தில் ஆட்காட்டி ஒன்று அவலக்குரல் எழுப்பிக்கொண்டு பறந்தது. சுற்றுப்புங்களின் பற்றைகளிலிருந்து திடீரென உயர்ந்தன பச்சைத் தலைகள். அவற்றின் கைகளில் இருந்த ரவைகள் "உய்"யிட்டுக் கொண்டு பறந்துவர, அவன் நிலத்தில் புரண்டு தனது ஆயுதத்தால் சில இடங்களைக் குறிவைத்து ஓரிரண்டு ரவைகளைச் செலுத்திவிட்டு குறித்ததொரு பாதையால் ஊர்ந்து, ஊர்ந்து கொஞ்சத்தூரம் முன்னேறியவன், எழுந்து ஓடத்தொடங்கினான்.

ஓடிக்கொண்டிருந்தவனை ரவைகள் துரத்தின. ஒரு கணத்தில் அவனது தொடையினைக் கிழித்துப் பிளந்து செல்கறிது அவற்றுள் ஒன்று. எலும்பு ரத்தம் கொட்ட தேகம் இனிமேல் இயங்காத நிலைக்குப்போகத் துடிக்கிறது. மனத்தின் பயத்தினால் மட்டும் இயங்கிக்கொண்டிருந்தவன் உடலின் ஒத்துழைப்பின்மையால் நிலத்தில் விழுந்து விடுகின்றான். உடல் மெல்ல மெல்ல அமைதியடைந்துகொண்டிருக்க, இப்போது அவனது விழிகளில் மட்டும் ஒரு தீவரம். உடலின் சக்தியெல்லாம் கைகளில் திரட்டி தனது ஆயதத்தை அருகில் நின்ற மரத்தில் அடித்து உடைத்தவன் கழுத்தில் தொங்கிய "குப்பியை" வாய்க்குள் செருகிக் கொள்கிறான்.

சூரியக் கதிர்களே சிரமப்பட்டு உட்புகும் அடர்ந்தகாடு. அதனுள்ளிருக்கும் முகாமின் தளபதி தனது வீரர்களைக் கூட்டியிருக்கிறார். வீரர்கள் சீருடையில் ஆயதங்களுடன் முன்னே வரிசையில் நிற்க: அவர் "ஊருக்குள் வேலையாய் போற பொடியனுகளை ஆமி வழியில் நிண்டு "அம்பூஸ்" குடுத்துக் கொல்ல அவனுகளை இப்படியே விட ஏலா, நல்லா ஒரு குடவை குடுக்க வேணும், அப்பத்தான் அவன் அடங்குவான்" என்று தொடங்க, தமது தோழர்களில் சிலரை இவ்வாறு இழந்தது பற்றி குமுறிக் கொண்டிருந்த வீரர்களை உற்சாகம் தொற்றிக் கொண்டது. தாக்குதலுக்கான தந்திரோபாயம் தெரிவு செய்யப்பட்டு, இடம் தீர்மானிக்கப்பட்டு படையணிகளைப் பிரித்து அவர்களிற்குத் தாக்குதல் குறித்து விரிவாகத் தளபதி விளக்குகிறார். காலை நேரம், இளவெய்யிலில் படையணி ஒன்று காட்டு முகப்பை நோக்கி ஒரே சீராக நகர்கிறது.

இராணுவ முகாமிலிருந்து ஒரு மைல்தூரம் காட்டு முகப்பினைத் தொட்டுச் செல்லும் பெருந்தெரு. அதன் இருமருங்கிலும் வாய்ப்பான இடங்களைத் தெரிவு செய்து ஏற்கனவே சொல்லப் பட்டிருந்த தாக்குதல் திட்டத்திற்கு கேற்ப நிலையெடுத்துக் கொள்கிறது படையணி. அவ் நிலையிலிருந்தும் பார்க்கையில் பிரதான வீதியில் வந்து கொண்டிருந்த பஸ்வண்டி தெரிந்தது. அதை மறித்த தளபதி, சாரதியிடம் "நாங்கள் இவ்விடத்தில் நிக்கிறதெண்டு அவனுகளிட்டச் சொல்லுங்க" என்று தூதனுப்புகிறார்.

தனது தோழனைக் காட்டுக்குள் பதுங்கியிருந்து கொன்றவர்களை நேரடிச் சண்டைக்கழைக்கும் தூது அது.

மாலை மயங்கத் தொடங்கும் நேரம். சூரியன் படுவான் திசையில் அரைவாசிக்கும் கீழிறங்கி விட்டான். பொற்கதிர்களின் ஒளியில் காடுமுழுகிக்கொண்டிருந்தது. அடிவானம் சிவந்திருந்தது. தூரத்தில் பச்சை நிறவாகனங்களின் உறுமல் மெதுவாகக் கேட்கிறது. இவர்களின் நிலைகளிற்கு இடையில் பிரதான வீதி "எல்" வடிவில் வளைந்து செல்கிறது. அதன் வளைவில் முதலாவது "டரக்" வந்து திரும்ப, காரைப் பற்றையொன்றின் பின்னே "கவரில்" இருந்த அருளன் முழங்காலில் எழுந்து நின்று தனது ஆர்.பி.ஜி. யை ஊதினான். ட்ரக்கின் முகப்பு சிதைந்தது.

அதனுள்ளிருந்தவர்கள் இரத்தச் சேற்றில் கிடந்து துடித்தனர். திடீரென விழுந்த இந்த அடியால் "ட்ரக்"கின் பின்னே வந்த பவள் அதனுடன் மோதித் தளம்புகிறது. அதன் பின்னே வாகனங்கள் "கிறிச்" என்ற சத்தத்துடன் நிற்க, உதறலெடுத்த சீருடையினர் திடுதிடுவெனக் குதித்து அகப்பட்ட இடங்களில் பதுங்கி அங்கிங்கென்றபடி ரவைகளை எங்கும் விதைத்தனர். காத்திருந்தவர்களின் ரவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரை வீழ்த்திக் கொண்டிருந்தன. எஞ்சியவர்கள் உயிரினைக் கையில் பிடித்துக்கொண்டு வாகனங்களையும் விட்டுவிட்டுப் பின்னோக்கிப் பறந்து விடுகின்றனர்.

சண்டை முடிந்த கையோடு அவ்விடத்திலேயே "முடிந்து விட்ட" இராணுவத்தினரின் ஆயுதங்களைப் "பொடியனுகள்" சேகரித்துக் கொண்டிருக்க, தளபதி வேகமாகக் கட்டளை பிறப்பிக்கிறார். இந்த நேரத்தில் வெகுவேகமாக வந்த கிராமத்து மக்கள் கூட்டமென்று, இறந்து கிடந்த சீருடைகளின் உடைகள் மீது தமது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்கிறது. உடல்களை அடித்து நொருக்கி மண் தீத்தி... தமது பிள்ளைகள் அருகே நிற்கும் துணிவில் இதுவரை தம்மை வதைத்தவர்கள் மீதான மனவேக்காட்டின் வடிவமாக அவர்கள் இவ்வாறு செய்திருக்கலாம். தளபதி தனது படையணிகளைக் காட்டுக்குள் அழைத்துச் செல்லமுன்பு அவர்களை வெகு சிரமப்பட்டு ஊருக்கு அனுப்பி வைக்கிறார்.

இவர்கள் அகன்றதும் இறந்த உடல்களின் இடையே இறந்தவன்போலக் கிடந்த ஒரு சீருடைக்காரன் மெதுவாகத் தனது தலையை உயர்த்திப் பார்த்துவிட்டு வெடிபட்ட காலை இழுத்துக் கொண்டு முகாம் நோக்கி விரைகிறான். முகத்தில் கொலை வெறி தாண்டவமாட "பறதெமிழு" எனக் கறுவிக் கொள்கிறான் அவன். ஆத்திரம் தீரும் வரை மக்களை வதைத்து முடித்து விட்டு வாகனங்களில் ஏறிக்கொள்கின்றன பேய்கள். உறுமிச் செல்லும் வாகனங்களைப் பார்த்து மண் அள்ளித் திட்டித் தனது மனவேக்காட்டைப் பார்வதிக் கிழவி தணித்துக் கொள்கிறாள்.

"முதலை கொண்டு போவானுகளே, கண்ணி வெடியில போவானுகளே..."

காலுடைந்து, கையுடைந்து, இடுப்புடைந்து, முகம் கிழிந்து, எலும்பு நொருங்கிக்கிடந்த மக்கள் மெது மெதுவான இழுத்து இழுத்து முனகியபடி தமது வீட்டுக்குப் போகத் தொடங்கினார்கள். வீட்டுக்குப் போனவர்களில் கோயில் வண்ணக்கர், பள்ளிப் பெரியவாத்தியார், முருகேசுப்போடியார், அம்மாளாச்சி கோயில் பூசாரியார் ஆகியோரின் மக்கள் இல்லை. அவர்கள் "அண்ணன்" மார்களின் பாசறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் முகத்தில் இப்போது அடிவாங்கிய வேதனை இல்லை.



"என்ன போடியார், இப்ப அவனுகள் ஊர்த்தொங்கலில ஒளிச்சுக் கிடந்து நம்மட பொடியனுகளை சுடுகிறல்ல இல்லியா?" கோவில் பூசைக்குப் போறதுக்கு ஆற்றில் இறங்கிய பூசாரியார் தண்ணி எடுக்கவந்த போடியாரிடம் கேட்கிறார்.

\- களத்தில் 23.10.1996



உலக வணிகம் ULAGA VANIKAM

# 2024



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# போரின் கதாநாயகர்கள் எனப்படுவோர் எனது சவாலை ஏற்பார்களா? தலைவர் பிரபாகரனும் குடும்பமும் உயிருடன் உள்ளனர்!

**ச.வி. கிருபாகரன் –TCHR**



11.10.2023

கொழும்பு ஊடகமொன்றுக்கு முன்னாள் இந்திய கடற்படை கமாண்டோ பேராசிரியர் எமரிட்டஸ் எம். சுப்ரமணியம் 13 செப் 2015 அன்று வழங்கிய நேர்காணல், "பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் - தெற்கின் ஞாபக மறதியைக் கூறுகிறது" என்ற தலைப்பில் 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி, வெளியான எனது ஆங்கில கட்டுரை, அத்துடன் "பேயாட்டம், சூதாட்டம், போராட்டம், களியாட்டம்" என்ற தலைப்பில் 19 பெப்ரவரி மாதம் 2023ம் அன்று, தினக்குரலில் வெளியான தமிழ் கட்டுரை, மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது அளித்த பதில் ஆகியவற்றின் அடிப்படையில், கீழே கொடுக்கப்பட்டுள்ள பல விடயம் தொடர்பில் திறந்த ஒரு சவாலை முன்வைக்குமாறு என்னை தூண்டியுள்ளது.

கடந்த ஜூலை மாதம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது, தலைவர் பிரபாகரனின் மரணம் குறித்தும், அவரது மரபணு பரிசோதனை குறித்தும் - டிஎன்ஏ குறித்தும், ஊடகவியலாளர் ஒருவர் சிறிசேனவிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

யாதார்த்தம் என்னவெனில், 2009 மே மாதம் போரின் கடைசி இரண்டு வாரங்களும், மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு அமைச்சராக கடைமை ஆற்றியிருந்தார். ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளித்த சிறிசேனா, பிரபாகரனின் மரணம் குறித்து தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும், அவரது மரபணு பரிசோதனை டிஎன்ஏ குறித்து தனக்குத் தெரியாது என்றும் தெரிவித்துள்ளார்.



சிறிசேனா ஜனாதிபதியாக இருந்தவேளையில், இவர் ராஜபக்சா குடும்பத்தினரால் அச்சுறுத்தப்பட்ட போதெல்லாம், 'சில எதிர்க் கட்சி அரசியல்வாதிகள் பற்றிய ரகசியங்களை வெளியிடுவேன்' என்று பல சந்தர்ப்பங்களில் சிறிசேனா கூறியது என் நினைவிற்கு வருகிறது. அது என்ன என்பதை இப்போது நாம் புரிந்து கொள்ளலாம். 2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவடைந்த போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் கொல்லப்பட்டதாக போரின் கதாநாயகர்கள் என அழைக்கப்படுபவர்கள், பிரபாகரனின் சடலத்தை கண்டு எடுத்துள்ளதாக ஊடகங்களிற்கு கட்சிபடுத்தியிருந்தார்கள். ஆனால் உண்மை என்னவெனில், அவ்வேளையில் பிரபாகரனின் இளைய மகன், பாலச்சந்திரன் (12) இராணுவத்தினால் தடுத்து வைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டது என்பது யாவரும் அறிந்த உண்மை. இருப்பினும், தலைவர் பிரபாகரனும் அவரது குடும்பத்தினர் சிலரும், உயிருடன் இருப்பதாக ஆரம்பம் முதலே தகவல் வந்தது கொண்டிருந்தது.

ராஜபக்சவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் - குறிப்பாக மஹிந்த, கோத்தபாய அத்துடன் சரத் பொன்சேகா, கமல் குணரத்ன மற்றும் இராணுவப் பேச்சாளர் ஆகியோர் தலைவர் பிரபாகரனின் குடும்பத்தில் யாரும் உயிருடன் இல்லை என்றும், இந்த குடும்பம் உயிருடன் இருப்பதாக யாராவது நினைத்தால், அது கேலிக்குரிய விஷயம் என்றும் கூறியது எனக்கு ஆச்சரியமாக இருந்ததுள்ளது. எனது அறிவுக்கும் திறனுக்கும் எட்டிய வரையில், இது முற்றிலும் உண்மையிலிருந்து வெகு தொலைவில் உள்ள அரசியல் அறிக்கை. சிறீலங்கா போரை வென்றதுவிடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் சிறிலங்கா - சீனா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான், வடகொரியா, அமெரிக்கா போன்ற சில நாடுகளின் வலுவான உதவியுடனும் ஆதரவுடனும் வெற்றி பெற்றது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் 17 மே 2009 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில், - "எங்கள் துப்பாக்கிகளை மௌனமாக்க முடிவு செய்துள்ளோம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அன்றிலிருந்து விடுதலைப் புலிகளின் உண்மையான தலைமையினால், இன்றுவரை எந்த அறிக்கையும் வெளிவந்தது கிடையாது. ஆனால் விடுதலைப் புலிகளின் காகிததாளை விசமத்தானமாக சில கைக்கூலிகளால் பயன் படுத்தப்பட்டதிருந்ததை யாவரும் அறிவார்கள். இதற்கான பின்னணி யார் என்பதும் யாவருக்கும் தெரியும். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மனித உரிமை ஆர்வலராகவும், பாதுகாவலராகவும் இருந்து வரும் என்னால், தலைவர் பிரபாகரனின் குடும்பத்தில் யாரும் உயிருடன் இல்லை என்று கூறும் இந்த அப்பட்டமான பொய்களும் ஏமாற்றுதல்களும் பொதுமக்களிடம் பரவ அனுமதிக்க முடியாது.

மனித உரிமைக் கல்வியானது, வாழும் நபர்களை / மக்களை இறந்துவிட்டதாகக் கூறுவதற்கு கற்பிக்க படவில்லை. தலைவர் பிரபாகரனின் குடும்பம் நலமுடன் வாழும் போது, அவர்கள் இறந்துவிட்டார்கள் என்பதை எப்படி ஒப்புக்கொள்வது? இந்த விவகாரம் தொடர்பாக, இலச்சத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்களுடன் பிரபலமான சில தமிழ் ஊடகங்களில் நேர்காணல்களை நடத்தியுள்ளேன். அந்தப் பேட்டிகளில் பிரபாகரனின் குடும்பம் உயிருடன் இருப்பதாக சொல்லியிருக்கிறேன். மேலும், நான் அவர்களுடன் தொடர்பில் உள்ளேன் என்று கூறியுள்ளேன். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஐ.நா மனித உரிமைகள் மன்றங்கள் மற்றும் பிற மன்றங்களுடன் பணிபுரிந்துள்ள என்னால், எந்த மனித உரிமை அமைப்போ அல்லது ஆர்வலர்கள், மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்திற்கு, தலைவர் பிரபாகரனோ அல்லது இவரது குடும்பத்தவரோ இறந்தோ அல்லது காணமல் போனதாக எந்த மனுவையோ அறிக்கையையோ சமர்ப்பிக்கப்பட்டதாக எந்த தகவலும் கிடையாது. மகன் பாலச்சந்திரன் ஆனால் - இவரது இளைய மகன் பாலச்சந்திரன், சிறீலங்காவின் இராணுவத்தினால் தன்னிச்சையாக கொல்லப்பட்டார் என்பது நன்கு அறிவிக்கப்பட்டு, ஐ.நா. உட்பட பல முக்கிய நிறுவனங்களில் பதிவாகியுள்ளது.

இதை பல மனித உரிமை நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் ஓர் போர்க்குற்றச் செயலாக கண்டனம் தெரிவித்தனர். மனித உரிமை விடயத்தில் கற்பிக்கும் பாடங்களில் ஒன்று - "ஜனநாயக சமூகத்தில், பயங்கரவாதிகள் அல்லது பயங்கரவாதிகள் என்று அழைக்கப்படுபவர்கள் கூட, தங்கள் மனித உரிமைகளை அனுபவிக்க உரிமை உண்டு". அப்படியானால், தலைவர் பிரபாகரனை ஒரு பயங்கரவாதி என ஒரு விவாதிற்காக எடுத்து கொண்டால், சிறீலங்காவில் பிறர் அனுபவிக்கும் அதே மனித உரிமைகளை அவரும் அவரது குடும்பம், அவரது உறுப்பினர்களும் அனுபவிக்க உரிமையுண்டு. 17 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர், 'பயங்கரவாதம்' மற்றும் "பயங்கரவாதி" என்ற சொற்பதம் 1970ம் ஆண்டின் பிற்பகுதியில் மட்டுமே பயன்பாட்டுக்கு வந்துள்ளது. அதே காலகட்டத்தில் 'அரச பயங்கரவாதம்' என்ற என்ற சொற்பதம் பயன்பாட்டுக்கு வந்ததுள்ளது. ஜனதா விமுக்கி பெரமுனையின் கிளர்ச்சி – ஜே.வி.பி., 1971 இல் முழு நாட்டையும் கைப்பற்ற, ஒரு வர்க்கப் போராட்டத்தை நடத்தியவர்களை "கிளர்ச்சிகாரர்" என்ற முத்திரை குத்தப்பட்டது. அதேசமயம் ஐ.நா உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகளின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமது இன அடையாளத்துக்காகவும், சுயநிர்ணய உரிமைக்காகவும் ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்களுக்கு பயங்கரவாதம் என்று முத்திரை குத்தப்பட்டது.

போரில், பயங்கரவாதத்திற்கும் கிளர்ச்சியாளர்க்கும் இடையே அதிக வேறுபாடுகள் இல்லை. கேள்வி என்னவென்றால்: 'கோத்தா போர்' என்று அழைக்கப்பட்ட போரின் வேளையில், இவர்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மதித்தார்களா? போரின் இரண்டு முக்கிய கூறுகள் ஜூஸ் அட் பெல்லம் (Jus ad bellum ) மற்றையது ஜஸ் இன் பெல்லோ (Jus in bello). ஜூஸ் அட் பெல்லம் எனப்படும் போர் உரிமை, ஒரு யுத்தத்தில் எப்படியாக நாடலாம் அல்லது பொதுவாக ஆயுதப் படையைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. ஜஸ் இன் பெல்லோ என்ற போர் நடத்துதல் - போர் எவ்வாறு நடத்தப்படுகிறது என்பதற்கான நியாயத்தன்மை, ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரின் நடத்தையை ஒழுங்குபடுத்துகிறது. இவை 1945 ஐ.நா சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் முக்கிய கூறுகளாகும். பிரபாகரனின் போலி உடல் இவ் காரணிகளைக் கருத்தில் கொண்டு, தலைவர் பிரபாகரன் என்று பொதுமக்களுக்குக் காட்டப்பட்ட போலி உடல் என்ன ஆனது? இந்த கேள்விக்கு சிறீலங்கா பதிலளிக்குமா? பயங்கரவாதிகளுக்கும் மனித உரிமைகளை அனுபவிக்க உரிமை உண்டு என்பதை இங்கு மீண்டும் ஒரு முறை வலியுறுத்த விரும்புகிறேன்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் போராளிகள், பலாத்காரம் செய்யப்பட்டு, கொல்லப்பட்டு அவர்களது சடலங்களை வன்னி நிலப்பரப்பில் எங்கும் வீசப்பட்டவர்கள் குறித்தும் இதே கேள்வியை முன்வைக்கிறேன். சர்வதேச மனிதாபிமான சட்டத்தால் விதிக்கப்பட்ட பொதுவான கடமைகள், வழக்கம், மற்றும் ஒப்பந்தம் ஆகியவை பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் கூறப்பபட்ட விதிமுறைகள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

* மோதலில் ஈடுபடும் தரப்பினர், இறந்தவரின் உடலை தாங்கள் சார்ந்த கட்சியின் வேண்டுகோளிற்கு அமைய, அவர்களது உறவினரின் வேண்டுகோளிற்கு அமைய, இறந்த உடலை திரும்பப் பெறுவதற்கு உதவ வேண்டும். அவர்களது தனிப்பட்ட உடமைகளை அவர்களது உறவினர்களிற்கு திருப்பி கொடுக்கபட வேண்டும்.

* இறந்தவர்களை மரியாதைக்குரிய முறையில் அடக்கம் செய்யப்பட வேண்டும். மற்றும் அவர்களின் கல்லறைகள் மதிக்கப்பட்டு முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

* இறந்தவர்களை அடையாளம் காணும் நோக்கில், மோதலில் ஈடுபடும் ஒவ்வொரு தரப்பினரும் அகற்றப்படுவதற்கு முன்னர், கிடைக்கக்கூடிய அனைத்து தகவல்களையும் பதிவு செய்து கல்லறைகளின் இருப்பிடத்தைக் குறிக்க வேண்டும். முள்ளி

வாய்க்காலில் ராஜபக்சாக்கள்... 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலின் போது இந்த சர்வதேச விதிமுறைகளின் அடிப்படைக் கடமைகளை சிறீலங்கா மதித்ததா? முள்ளிவாய்க்காலில் ராஜபக்சாக்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை இப்போது சாதாரண மக்கள் கூட புரிந்து கொள்ள முடிகிறது. அந்த சர்வதேச விதிமுறைகள் மற்றும் தரநிலைகள் அனைத்தும் புறக்கணிக்கப்படும் பொழுது, அவை வெளிப்படையாக போர்க் குற்றம் மற்றும் இனச் சுத்திகரிப்பு என்று கருதப்படுகிறது. மே 2009 இல் சிறீலங்காவால் இறந்த புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்ட சில உயர்மட்ட விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களை சந்தித்துள்ளேன். என்னால் சந்திக்கப்பட்ட நபர்களின் பெயர்கள், ஐ.நா. காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்காணிக்கும் பிரிவிற்கோ, அல்லது தன்னிச்சையான கொலைகளை கண்காணிக்கும் பிரிவிற்கோ யாரும் கொடுத்தது கிடையாது.

ஆனால் சிறீலங்கா அரசை திருப்பதிபடுத்துவதற்காகவும், தமக்கு ஓர் கௌரவத்தை தேடுவதற்காகவும், தமிழ் புலன் பெயர்ந்த மேதாவிகள் சிலர், விழாக்கள் எடுத்தும், விளக்குகள் ஏற்றி தமது சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றியுள்ளார்கள். ராஜபக்சக்கள் போலியான புகைப்படங்களைக் காண்பித்து வாக்குகளைப் பெற்று, இன்று தமது மானம் மரியாதை காற்றில் பறக்க விட்டுள்ளார்கள். போலி உடல்களின் புகைப் படங்களை காண்பித்த உண்மையை, இராணுவம் மற்றைய படைகளில் உள்ள பல உறுப்பினர்களுக்கு, நன்கு தெரியும். ஆனால் அவர்கள் வாய் திறக்க முடியாத நிலையில் உள்ளார்கள். முள்ளிவாய்க்கால் போரிலோ அல்லது விடுதலை போராட்ட காலத்தில் கொலை செய்யப்பட்டும் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட பொதுமக்களைப் பற்றி இங்கு நான் குறிப்பிடவில்லை என்பதை யாவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



பதிக்கப்பட்ட பெரும்பாலானரின் விடயங்கள் யாவும், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பிரிவு, சர்வதேச மனித உரிமை அமைப்புகள், ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமை பேரவை ஆகியவற்றால் ஒழுங்காக பரீசிலிக்கப்பட்டு கையாளப்படுகிறது என்பது இங்கு குறிப்பிடதக்கது. இவை அனைத்தையும் ஆய்வு செய்து, சட்ட ஆலோசனைகள் பெற்ற கொண்டதன் அடிப்படையில், ராஜபக்சவின் குடும்பத்தினரில் விசேடமாக - மகிந்த, கோத்தபாய மற்றும் சரத் பொன்சேகா, கமல் குணரத்தின, இராணுவப் பேச்சாளர் ஆகியோருக்கு, என்னால் தலைவர் பிரபாகரனும் அவரது குடும்பத்தில் உள்ள சிலரும் உயிருடன் இருக்கிறார்கள் என்பதை சட்ட ரீதியாக நிரூபிக்க முடியுமெனசவால் விடுகின்றேன்.

அத்துடன், இறந்துவிட்டதாக சிறீலங்காவினால் அறிவிக்கப்பட்ட சில விடுதலைப் புலிகளின் தளபதிகளையும் என்னால் காண்பிக்க முடியு மென்பதை இங்கு கூற விரும்புகிறேன். சர்வதேசத்தின் முன்னிலையில் இந்த சவாலை நான்கு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே என்னால் ஏற்று கொள்ள முடியும். ஒன்று, இங்கு பெயரிட்டவர்கள் மட்டுமே சவாலுக்கு முன்வர முடியும். இரண்டாவதாக, இது சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் சில பெரியவர்களின் முன்னிலையில், அதாவது சர்வதேச பார்வையாளர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். மூன்றாவதாக, அவர்கள் வாழ்கிறார்கள் என்று நிரூபிக்கப்படும் பட்சத்தில், சவாலை ஏற்றுக்கொண்டவர்கள், யாரை இறந்ததாக பறை சாற்றினார்களோ, அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் கொள்கைக்கு ஆதரவாக அந்த நேரத்திலிருந்து வேலை செய்வதற்கு முன்வர வேண்டும்.



இறுதியாக, சவாலில் தோற்றவர் இந்த மைல்கல்லின் செலவை ஏற்க வேண்டும். நான் இந்த நிமிடத்திலிருந்து என்றும் சவாலுக்கு தயாராக இருக்கிறேன். மேல் கூறப்பட்ட ஒருவர் அல்லது அனைவரும் இந்த நான்கு நிபந்தனைகளையும் ஒப்புக் கொள்ளும் நிலையில், சர்வதேச பார்வையாளர்கள் மூலம் சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டு, நாம் சவாலில் கூறப்பட்ட விடயங்களை மேற்கொள்ள முடியும். இவர்களின் பதிலை ஆவலுடன் எதிர் பார்த்திருக்கிறேன்.

பயங்கரவாதத்தைப் பொறுத்த வரையில், பயங்கரவாதி என்று உலகில் அழைக்கப்பட்ட பலர் இறுதியில் நாட்டின் தலைவரானார்கள். அதேவேளை அவர்கள் நோபல் பரிசையும் பெற்றிருப்பதையும் அனுபவ ரீதியாக பார்க்கிறோம். இதற்கு இரண்டு நல்ல உதாரணங்கள் - தென்னாப்பிரிக்காவின் நெல்சன் மண்டேலா மற்றும் பாலஸ்தீனிய அரசின் யாசர் அராபத். பயங்கரவாதம் சிறீலங்காவில் இன்று பயங்கரவாதம் என்ற பதம் ஒரு நகைச்சுவையாக பாவிக்கப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்ததிலிருந்து இன்று வரை வடக்கு, கிழக்கில் நடப்பவை அனைத்தும் சாத்வீக செயற்பாடுகள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அரசியலைப் பொறுத்தவரை, பாதுகாப்புப் படையினரைத் தவிர வேறு யாரும் ஒரு தோட்டா கூட பாவித்தது கிடையாது. ஆனால், தெற்கில் வாக்கு வங்கியைக் குறிவைக்கும் தீவிர அரசியல்வாதிகள், இரவும் பகலும் பயங்கரவாதத்தை தமது அரசியல் துரும்பாக பாவிக்கிறார்கள். 1948 முதல் 70களின் ஆரம்பம் வரை சுயநிர்ணய உரிமைக்காவோ, சம உரிமைக்காகவோ அகிம்சை வழியில் போராடிய தமிழ்த் தலைவர்களும் அங்கத்தவர்களான - தமிழ் காங்கிரஸ் தமிழரசு கட்சியில் அன்றைய உறுப்பினர்கள், பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தப்படாதது தப்பினார்கள். காரணம், அந்தக் கால கட்டங்களில் தெற்கின் தீவிர அரசியல்வாதிகளான சரத் வீரசேகர, விமல் விரவன்ச, உதய கம்பீல மற்றும் சிலர் அரசியலில் இருந்திருக்கவில்லை.

இல்லையேல் அன்றைய தமிழ் தலைவர்களான - தந்தை எஸ். ஜே.வி செல்வநாயகம் மற்றும் ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோரும் இவர்களினால் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டிருப்பார்கள். இந்த தீவிர அரசியல்வாதிகளை குறை சொல்ல முடியாது. இவர்களுக்கு சிவில், அரசியல் உரிமைகள் மற்றும் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் பற்றிய எந்த அறிவும் கிடையாது. இவர்களும் சில தமிழ் அரசியல்வாதிகளைப் போல், தேர்தல் மற்றும் வாக்கு வங்கி நோக்கிய கபட நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

சகல காரணிகளையும் கவனத்தில் கொண்டு, தென்னிலங்கை அரசியல்வாதிகள் தொடர்ச்சியான குழப்பங்களை அப்பாவி மக்களிற்கு கொடுக்காது, சகலரும் அமைதியுடனும் கண்ணியத்துடனும் வாழ அனுமதிப்பார்களென என்று நம்புகிறேன்.

ச. வி. கிருபாகரன்
பொது செயலாளர்
தமிழர் மனித உரிமைகள் மையம் – TCHRபிரான்ஸ்

நன்றி: ச.வி.கிருபாகரன்

# The Book Launch

*We take pleasure in inviting you to the launch of*

# UNTOLD TRUTH OF TAMIL GENOCIDE

## (biography of Dr. T. Varatharajah)

## BY RAJI PATTERSON




**Date: Sunday November 12**

**Time: 6PM**

**Venue:** JC's BANQUET & CONVENTION CENTRE

Where Your Traditions Matter

**1686 Ellesmere Rd,**
**Scarborough, ON M1H 2V5**

RSVP: drtvarathan@gmail.com or
437 328 5974



*Raji Patterson*



*Dr.T. Varatharajah*

# நீதிக்கான காத்திருப்பு விளையாட்டு!

27.10.2023

**ஜொகானஸ்பேர்க்:** காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக போராடிவந்துள்ள நிலையில், உண்மையினை நிலை நாட்டுவதிலும் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதிலும் சிறீலங்கா அரசு தான் சிரத்தையுடன் செயற்படுகின்றது என்பதை வெளிப் படுத்தவேண்டிய நேரம் வந்துவிட்டது என ITJP கூறியுள்ளது.




சிறீலங்காவின் காணாமல்போனவர்களின் குடும்பங்கள், குறிப் பாக தென்பகுதியைச் சேர்ந்த குடும்பங்கள் தங்கள் உறவுகள் காணாமல் போனதன் 30ஆவது ஆண்டு நிறைவினை ஒக்ரோபர் 27 அன்று நினைவுகூர்ந்துள்ளதுடன், நீதிக்கான வேண்டுகோளையும் விடுத்துள்ளன. இவர்களது நீண்டதும் வேதனை தருவதுமான உண்மைக்கான தேடல், 2009இல் போரின் முடிவிலிருந்து இவர்களைபோலவே ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட்டுவரும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவே இருக்கின்றது.

"பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களைச் சுற்றியுள்ள உண்மையை மீட்டெடுப்பது என்பது, அரசாங்கம் சர்வதேச சமூ கத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க இந்த பிரச்சினையை கையாள்வதாக பாசாங்கு செய்து கொண்டு, ஆனால் உண்மை யில் காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் இறக்கும் வரையும் இந்த பிரச்சனை மறையும் வரையும் காத்திருக்கும் பரிகசிக்கத்தக்க செயற்பாடாக இருக்க முடியாது." என ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா கூறினார்.







இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 188 தமிழ்ப் பெற் றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பான உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்கு முன்னதாக ஏற்கனவே இறந்து போயுள்ள அதேவேளையில் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த போராட்டங்களில் அல்லது நினைவேந்தல்களில் பங்குபற்றிய இளைஞர்களை வாயடைக்கச் செய்வதற்காக அவர்களை கடத் திச்சென்று சித்திரவதை செய்யும் நடவடிக்கையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

பெருந்தொகையான காணாமல் போனவர்கள் தொடர்பான சம்பவங்கள் தீர்க்கப்படாத நாடுகளில் சிறீலங்காவும் ஒன்று - இதில் தம்மைத்தாமே மாக்ஸ்சிய கட்சி என்று கூறிய ஜே.வி.பி அல்லது மக்கள் விடுதலை முன்னணியால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதி ரான உள்நாட்டுப்போரிலும் இடம்பெற்ற சம்பவங்கள் இதில் உள்ளடங்கும்.

"சர்வதேச நியமங்களுக்கும் நெறிகளுக்கும் அமையவும், உள் நாட்டில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமையவும் உண் மைகளைத் தெரிந்துகொள்ளும் தார்மீக உரிமை பாதிக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு உண்டு - ஆனால், .ப்பிரச் சினைகள் தொடர்பாக, குறிப்பாக ஏற்கனவே விரிவான விசா ரணைகள் நடாத்தப்பட்ட ஜே.வி.பி யுக காணாமற்போனமை தொடர்பாக, விசாரணை மேற்கொள்வதற்கென சிறீலங்கா அர சாங்கம் தொடர்ச்சியான ஆணைக்குழுக்களை அமைப்பது காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு எந்தவொரு நீதியையோ அல்லது ஆறுதலையோ கொண்டுவரமாட்டாது," என யஸ்மின் சூக்கா மேலும் தெரிவித்தார்.

சிறீலங்கா அரசாங்கம், ஜே.வி.பி. காலப்பகுதியில் இடம்பெற்ற காணாமல் போதல்கள் தொடர்பில் சிரத்தையாக இருக்கு மாயின், கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகளை உடனடியாக அது செயற்படுத்தவேண்டும்:

- ஐ.நா. பணிக்குழு, மற்றும் நீதிக்குப் புறம்பான, முழுமை யான விசாரணைகளற்ற, ஏதேச்சதிகாரக் கொலைகள் தொடர் பான சிறப்புத் தூதுவர் மற்றும் உண்மை, நீதி, இழப்பீடு, மீள்-இடம்பெறமால் நடைபெறாமல் இருப்பதை உத்தரவாதங்களை மேம்படுத்துவதற்கான சிறப்புத் தூதுவர் ஆகியோரால் 1989 மாத்தளை மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளரின் வகி பாகம் தொடர்பாக 2022 நவம்பரில் எழுதிய கடிதத்தில் கேட் கப்பட்ட கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் வழங்குதல்.
- 1987 -1990 இடைப்பட்ட காலப்பகுதியில் கடமையாற்றிய ஒவ் வொரு மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளர்களதும் பெயர்களை வெளியிடுதல்.
- இக்காலப்பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கும் நடவடிக்கை யில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட காவல்துறை, இராணுவம், மற்றும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகப் பரிந்துரைக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகள் மற்றும் குற்றவியல் குற்றச்சாட்டுக்களின் முன்னேற்றம் தொடர்பில் பாராளுமன்றத்திற்குத் தெரியப்படுத்தல்.

- தற்போது 2030 வரை ஜனாதிபதியின் பாதுகாப்பின்கீழ் வெளியிடப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் ஜே.வி.பி காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான அகில இலங்கை மற்றும் வலயங்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுக்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சிய வாக்குமூலங்களை வெளியிடுதல்.

சிறீலங்கா அரசாங்கம், **உள்ளாட்டு காலப்பகுதியின்போதும்** அதற்கும் பின்னரும் இடம்பெற்ற காணாமல் போதல்கள் தொடர்பில் சிரத்தையாக இருக்குமாயின், கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்:

- ஆட்கொணர்வு மனு வழக்கில் வழக்கறிஞர்களால் வேண்டு கோள் விடுக்கப்பட்டதுபோன்று 2009 மே 18 இல் சரணடைந் தவர்களின் பட்டியலை ஒப்படைக்கும்படி 58ஆவது படைப் பிரிவுக்கு கட்டளையிடல்.

- வட்டுவாகல் பாலத்தில் வைத்து 2009 மே 18 இல் இராணுவத்திடம் சரணடைந்த சிறுவர்கள் உட்பட நூற்றுக் கணக்கான மக்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களால் கேட்டுக்கொள்ளப்பட்டது போன்று, சிறீலங்கா இராணுவத்தில் 58, 59, 53, டிவிசன் களின் பற்றாலியன்கள் மற்றும் சிறப்புப் படைகள் மற்றும் கொமாண்டோ ஜெறிமன்ட் ஆகியவற்றின் கட்டளைத் தளபதிகள் மற்றும் துணைத்தளபதிகள் ஆகியோர் காணாமற் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தால் நேர்காணலுக்கு உள்ளாக்கப்படுத்தப்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத் துதல்.

- (சனல் 4 இன் படுகொலை காணொளி போன்ற) காணொளி களில் படைவீரர்களின் முகங்கள் தெளிவாகத் தெரிகின்றன - இவர்களது படங்கள் இராணுவத்தினரின் விபரக்கோவைகளில் ஒப்பீட்டுப் பார்க்கப்பட்டன என்பதற்குரிய ஆதாரத்தினையும், அவர்கள் கண்டறிந்தவற்றையும் வழங்கமுடியுமா?

பல தசாப்தங்களுக்கும் மேலான வலிந்து காணாமல் ஆக்கப்பட் டவர்களின் பாரதூரமான நிலைமையினையும் - உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு என்னும் பெயரில் - அரசாங்கம் பிறிதொரு ஆணைக்குழுவினை அமைக்கும் நோக்கத்தினைக் கொண்டுள்ளது என்று மீண்டும் அறிவித்திருப்பதையும் கருத்தில்கொண்டு, ஐ.நா மற்றும் OHCHR உட்பட சர்வதேச சமூகமானது தங்களது உறவு களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைத் தெரிந்துகொள் வதில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக் கும் இருக்கும் உரிமையினை நிவர்த்தி செய்வதில் அரசாங்கம் உண்மையான அர்ப்பணிப்புடன் இருக்கின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்கு மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளைப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும். இந்த ஆண்டு யூனில் ஐ. நா. செய லாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட நிலைமாற்று நீதியின் புதிய வழிகாட்டல் குறிப்பில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மீளவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

- முற்றும் -


தமிழீழத் தேசிய
மாவீரர் நாள்
நவம்பர் 27
2023
THAMILEELA
"MAAVEERAR NAAL"
NOVEMBER 27
தாயக விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவை தழுவிக் கொண்ட மாவீரர்களுக்கான வீர வணக்க நாள்
In remembrance of Our Heroes
Who Sacrificed their lives for us,
for Our Homeland and for Thamil Nationalism
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்
The Thirst of Thamils is the Homeland of Thamileelam


காந்தள்
செண்பகம்
வாகை
சிறுத்தை
மாவீரர்
துயிலுமில்லங்கள்
தமிழீழம்
வீரவணக்க நாள்
மாவீரர் நாள் நவம்பர் 27
MAAVEERAR NAAL NOVEMBER
கொடிகாமம்
முழங்காவில்
தேவிபுரம்
வன்னிவிளாங்குளம்
கள்ளிக்காடு
எள்ளங்குளம்
விசுவமடு
முள்ளிவாய்க்கால்
ஆலங்குளம்
கல்லடி
ஆட்காட்டிவெளி
கனகபுரம்
இரட்டைவாய்க்காலையும் வலைஞர் மட நிரவல் வீதி பகுதி
கண்டலடி
தரவை
மணலாறு டடி முகாம்
ஈச்சங்குளம்
முள்ளியவளை
அளம்பில்
பெரிய பண்டிவிரிச்சான்
இறுதிப் போர்க்காலத்தில் முல்லையில் மாவீரர் துயிலுமில்லங்கள்:
தேவிபுரம் "ஆ" பகுதி குடியேற்ற திட்டம்
இரணப்பாலை பெருந்தோட்டம்
வலைஞர் மடம் தெற்கு கலிந்தரைப் பகுதி
வெள்ளா முள்ளிவாய்க்கால் கப்பல் வீதிக்கு அண்மையில் உள்ள பகுதி
முள்ளிவாய்க்கால்
முள்ளிவாய்க்கால்
மணலாறு ஜீவன் முகாம்
இரணப்பாலை
மாவடி முன்மாரி
பெரியகுளம்
உடுத்துறை
தாண்டியடி
சம்பூர் ஆலங்குளம்
சாட்டி
கோப்பாய்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of Thamils is the Homeland of Thamileelam
சங்கத்தமிழ்